இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 223 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 23 வெள்ளிக்கிழமை 07.07.2017

## குடும்பத் தலைவர் விபத்தில் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 7
வவுனியா, ஏ-9 வீதியில் நேற்று நடந்த விபத்தில் குடும்பத் தலைவர் உயிரிழந்துள்ளார்.
குறிசுட்டகுளம், கனகரா >> 25

## மகாநாயக்கர்களின் கருத்துக்களை உள்வாங்கியே புதிய அரசமைப்பு

*அவர்களிடமே நேற்று உறுதியளித்தார் மைத்திரி*

யாழ்ப்பாணம், ஜூலை 7
மகாநாயக்க தேரர்களின் கருத்துக்களை உள்வாங்கியே புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு எதிராக மகாநாயக்க தேரர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இந்த நிலையில் அவர்களை அவசரமாக நேற்று நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. இந்தச் சந்திப்புத் தொடர்பில், அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி >> 24



## பட்டதாரிகள் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 7
பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்க வலியுறுத்தி ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்று >> 24

newuthayan.com

## புதிய அரசமைப்பால் சபையில் கடும் சர்ச்சை

கொழும்பு, ஜூலை 7
மகாநாயக்க தேரர்களின் அறிவிப்பு தொடர்பில் அமைச்சர் ராஜித சேனாரத்ன வெளியிட்ட கருத்துக் குறித்தும், புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் அறிக்கை சம்பந்த >> 23

## இடைக்கால அறிக்கையை இறுதி செய்வதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நேற்றைய கூட்டத்துடன் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் பட்டபோதும், அது இறுதி செய்யப்படவில்லை. வழிநடத்தல் குழு விரைவில் கூடி அதனை இறுதி செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. >> 25



## மாற்று மின்சக்தி நிலையம் பூநகரி கௌதாரிமுனையில்

*ஆரம்ப நிகழ்வு நேற்று*

தென்மராட்சி, ஜூலை 7
இலங்கையின் மிகப் பெரும் மாற்று மின்சக்தி நிலையத்துக்கான வேலைத் திட்டம் பூநகரி, கௌதாரிமுனையில் நேற்று ஆரம்பமானது. மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி >> 25

## க.குமாரின் கருத்துக்கள் சில்லறைத்தனமானவை

*சம்பந்தன் பதிலடி*

யாழ்ப்பாணம், ஜூலை 7
"கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறி வருகின்ற சில்லறைத்தனமான கருத்துக்களுக்கு தமிழ் மக்கள் அடுத்த தேர்தலில் அவருக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள். கடந்த காலங்களில் தமிழ் மக்கள் அவருக்குப் புகட்டிய பாடங்களை மறக்காமல் இருந்தால் சரி" >> 23

## கூட்டமைப்பினருக்கு சுவாமிநாதன் சவால்

*பொருத்து வீட்டை எதிர்க்காமல் கட்சி வீட்டைத் திருத்திக்கட்டட்டாம்*

கொழும்பு, ஜூலை 7
"பொருத்துவீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கூட்டமைப்பினர், தமது கட்சி வீட்டை முதலில் திருத்திக் கட்டவேண்டும். கூட்டமைப்பினர் எப்படித்தான் சத்தமிட்டாலும் 6 ஆயிரம் பொருத்து வீடுகள் அமைக்கப்பட்டேதான் தீரும்" >> 25

## இழுவைமடி மீன்பிடியில் ஈடுபடின் 2 வருடம் சிறை

*திருத்தங்களுடன் நிறைவேறியது சட்டவரைவு*

கொழும்பு, ஜூலை 7
இலங்கைக் கடற்பரப்புக்குள் இழுவைமடி வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதைத் தடுக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்றுத் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.
இனிச் சட்டவிரோதமான மீன்பிடி முறையில் ஈடுபடுபவர்களுக்கு இரண்டு வருடங்களுக்குட் >> 25

## இழுவைமடி மீன்பிடி முறையை மேற்கொண்டோருக்கு மானியம்

*கூட்டமைப்பு சபையில் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஜூலை 7
"இழுவைமடி மீன்பிடிமுறையை மேற்கொண்டவர்களுக்கு மானியம் வழங்க வேண்டும். அதனூடாகவே அவர்கள் அந்தத் தொழிலிருந்து விடுபட்டு மாற்றுத் தொழில் நோக்கி நகர்வார்கள்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். >> 23

# புதிய அரசமைப்பை உருவாக்குவதிலிருந்து அரசு பின்வாங்கக்கூடாது

*கூட்டமைப்பு சபையில் நேற்று வலியுறுத்து*

கொழும்பு, ஜூலை 7
'புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியிலிருந்து பின்வாங்காது அதை அரசு துணிவுடன் முன்னெடுக்கவேண்டும். அந்தப் பணி தோல்வியில் முடியக்கூடாது' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபையில் நேற்று வலியுறுத்தியது.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"பலவந்தமாகக் >> 25

## ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் திங்களன்று இலங்கை வருகை



கொழும்பு, ஜூலை 7
மனித உரிமைகள் மற்றும் பயங்கரவாதஎதிர்ப்புச்செயற்பாடுகள்தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பென் >> 23

## ஒன்றரை மணி நேர அமர்வுக்கு நேற்று ரூ. 5 லட்சம் செலவு

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு ஒன்றரை மணி நேரம் மாத்திரமே நடைபெற்றது. இந்த அமர்வுக்கு 5 லட்சம் ரூபா வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண சபையின் ஓர் >> 23

## மகிந்த ஆட்சியில் நடந்த மோசடிகள் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படும்

*அரசு தயாராகிறது என்கிறார் மைத்திரி*

கொழும்பு, ஜூலை 7
மகிந்த அரசு அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொண்ட அனைத்து ஊழல், மோசடிகளையும் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த அரசு தயாராகவுள்ளது என்று



அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன >> 23



## வடக்கு முதல்வரை சந்தித்தார் தமிழிசை

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டுக் கிளைத் தலை >> 25

## 5 அமைச்சுக்களையும் விசாரிக்கக் கோரும் பிரேரணையில் திருத்தம்

*முதல்வரின் எதிர்ப்பை மீறி அடுத்த அமர்வில் விவாதம்*

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு உள்ளிட்ட 5 அமைச்சுக்கள் மீதும் தெரிவுக்குழு விசாரணை நடத்தக் கோரும் பிரேர >> 24

## வட மாகாண சபையின் சிறப்பு அமர்வு 21 இல்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போதுவரை ஆற்றிய செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன. அதற்கான சிறப்பு அமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி கூட்டப்படும் என்று வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் அறிவித்தார். >> 25




newuthayan.com புதுப் பொலிவுடன் உதயன் இணையத்தளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமாஓயா திட்டம் தொடர்பாக நாடாளுமன்றில் தெரிவுக்குழு

சர்ச்சைக்குரிய உமா ஓயா திட்டம் தொடர்பாக ஆராய்வதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்று உருவாக்கப்படவுள்ளது என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.
உமா ஓயா திட்டம் தொடர்பாக பல்வேறு எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டுவரும் நிலையில், இந்தக் குழுவானது குறித்த திட்டத்தின் விளைவுகள் குறித்து ஆராயும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.
கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட உமா ஓயா திட்டத்துக்கு எதிர்ப்புகள் வலுப்பெற்றுவருகின்றநிலையில், அதுகுறித்து ஆராய ஏற்கனவே அமைச்சரவை உபகுழுவொன்றும் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

## விளாவட்டவான் கிராமத்துக்கு ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு, ஜூலை 7
சமுர்த்தி மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்துக்கென வவுணதீவுப் பிரதேசசெயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட விளாவட்டவான் கிராமத்துக்கு, சுமார் 70 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் விளக்கமளிக்கும் கூட்டம், விளாவட்டவான் கிராமத்தில் நேற்று நடைபெற்றது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடத்தில் வவுணதீவு, கோறளைப்பற்று மத்தி, கிரான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அதில் விவசாயம், மீன்பிடி, சந்தைப்படுத்தல், சிறுகைத்தொழில், கால்நடை வளர்ப்பு உட்பட 163 திட்டங்களுக்காக 67 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாவும் மற்றும் இரண்டு வீடுகளின் சீரமைப்பு வேலைகளுக்காக 3 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## காதலியுடன் சென்று திருடிய நபர் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 7
காதலியுடன் மோட்டார் சைக்கிளில் சென்று தங்க நகைகளைக் கொள்ளையிட்ட ஒருவர் தெகிவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவருடன் அவரது காதலியும், வேறு இரு நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட மற்றைய இருவரும் சகோதரர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தெகிவளை உள்ளிட்ட 6 இடங்களில் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ள நிலையில் அவற்றின் பொறுமதி சுமார் 20 இலட்சம் ரூபாவுக்கு அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 19 தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## தென்மராட்சியில் இரு பாடசாலைகளுக்கு சுகாதார உபகரணங்கள் கையளிப்பு

தென்மராட்சி, ஜூலை 7
தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகள் இரண்டுக்கு பாடசாலை சுகாதார மேம்பாட்டு உபகரணங்கள் நேற்று கையளிக்கப்பட்டன.
மட்டுவில் தெற்கு அ.மி.த.க. வித்தியாலயம் மற்றும் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு பாடசாலை சுகாதார மேம்பாட்டு உபகரணங்களாக மெத்தை, முதலுதவிப் பெட்டி, நிறை அளவிடும் கருவி, கண் காது பரிசோதனைக் கருவி போன்றவை பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.
வேள்ட் விஷன் லங்கா நிறுவன சாவகச்சேரி பிரதேச அபிவிருத்திப் பிரிவினரால் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக வேண்டுகோளின் பிரகாரம் பாடசாலைகளுக்கு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
பாடசாலை சுகாதாரக் குழுக்களைப் பலப்படுத்தம் கருத்தமர்வுகளும் நடத்தப்பட்டதோடு, அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் நிறுவனப் பிரதிநிதிகளும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அலுவலர்களும் கலந்துகொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## காணாமல் ஆக்கப்படும் சம்பவங்களில் பாதுகாப்பு பெறுதலுக்கான சட்ட வரைவு

### விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்கிறார் கிரியெல்ல



கொழும்பு, ஜூலை 7
காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்களிலிருந்து அனைவரும் பாதுகாப்புப் பெறும் வகையில் பன்னாட்டு சாசனம் குறித்த சட்ட வரைவு விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
இதுகுறித்த சட்ட வரைவு முழுமையாக அகற்றப்பட்டுள்ளது என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை தொடர்பில் நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தச் சட்ட வரைவு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படாதிருந்த நிலையில், முன்வைக்கக் கூடாது என்று இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன சட்ட வரைவின் உள்ளடக்கங்கள் தெளிவு பெறும் வரையில் அதனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்காதிருக்க அரசதலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார். எனினும் இவ்வாறு வெளியான செய்தி பொய்யானது - என்றார். (ஐ-10)

## அரசியல் சாணக்கியத்தாலேயே மத்திய மாகாணத்துக்கு வெற்றி

### மத்திய மாகாண தமிழ்கல்வி அமைச்சர் கூறுகிறார்

கண்டி, ஜூலை 7
வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பட்டதாரிகள் தொடர் போராட்டங்களை நடத்திவருகின்றனர். ஆனால் மத்திய மாகாணத்தில் எந்தவித போராட்டங்களும் இன்றி அரசியல் சாணக்கியத்தால் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனமங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன என்று மத்திய மாகாண் தமிழ் கல்வி அமைச்சர் மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.
742 மத்திய மாகாண தமிழ்மொழி பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு கண்டி விஜயராம கல்லூரி பிரதான மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது அரசியல் பலத்தாலும் சாணக்கியத்தாலும் மலையக சமூக கல்வி வளர்ச்சிக்கு கிடைத்த சிறந்த சந்தர்ப்பம் இதுவாகும். 2ஆயிரம் பட்டதாரி ஆசிரியர் கோரியே அமைச்சரவைப் பத்திரத்தை தாக்கல் செய்தோம். ஆனால் விண்ணப்பங்கள் 742 மட்டுமே கிடைக்கப்பெற்றது. இந்த நியமனம் அரசியல் பாகுபாடின்றி வழங்கப்பட்டுள்ளது. இந்த நியமனத்துக்காக மத்தியமாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநர், அமைச்சர்களின் பங்களிப்பு சிறப்பானது - என்றார். (ஐ-10)

## கடமைகளைப் பொறுப்பேற்றார் புதிய பாதுகாப்புச் செயலாளர்

### அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு தடுப்போம் எனவும் தெரிவிப்பு



நாட்டுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் தவிர்க்கமுடியாதவை. எனினும் அவற்றை வெற்றிகொள்ளும் பொறிமுறைகள் வகுக்கப்படவேண்டும். இத்தகைய சவால்களுக்கு முகம்கொடுக்க அனைத்துதரப்பினரினதும் ஒத்துழைப்பு இன்றியமையாத ஒன்றாகும்.
இவ்வாறு புதிய பாதுகாப்புச் செயலாளர் முன்னாள் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கபில வைத்தியரத்ன தெரிவித்தார்.
புதிய பாதுகாப்புச் செயலாளராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட முன்னாள் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கபில வைத்தியரத்ன தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.
இந்த நிகழ்வில் அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் தனது கன்னி உரையை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முதலில் முக்கியத்துவம் மிக்க இந்தப்பதவி நிலைக்கு என்னை நியமித்த அரச தலைவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நாட்டுக்கும் தேசிய பாதுகாப்புக்கும் சேவையாற்றுவதற்கு நான் ஆர்வத்துடன் இருக்கின்றேன்.
தேசிய பாதுகாப்புக்கான பாதுகாப்புக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பாதுகாப்புப் படையினரின் நலன்புரி சேமலாப நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல் என்பனவற்றில் ஈடுபடவுள்ளமையைக் கௌரவமாக எடுத்துக் கொள்கின்றேன்.
அரசினால் முன்னெடுக்கப்படும் தேசிய நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதான நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்து எனது பங்களிப்பு இருக்கும்.
தேசிய மற்றும் பன்னாட்டு ரீதியில் பாதுகாப்பு அமைச்சின் நற்பெயரைத் தக்கவைத்துக்கொள்வுது அவசியமானதாகும். அவற்றைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள அனைவரும் முன்வரவேண்டும். நீதித்துறையில் நீண்டகாலம் பணியாற்றிய காரணத்தால், நிலையான சமாதானம் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன் - என்றார்.
கபில வைத்தியரத்ன, கல்கிஸ்ஸை புனித தோமஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். 1983ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்கள அலுவலகத்தில் இணைந்து கொண்ட இவர் 2005 ஆம் ஆண்டு முதல் பிரதி சொலி சிட்டர் ஜெனரலாக பதவி வகித்தார். (ஐ-10)

## சாவகச்சேரி மருத்துவமனையின் தேவைகளை நிறைவேற்றக் கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 7
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குத் தினமும் வரும் நோயாளர்களின் நலன் கருதி வைத்திய நிபுணர்கள் மற்றும் துணை மருத்துவ அலுவலர்களை நியமிக்க வேண்டுமென சாவகச்சேரி மருத்துவமனை நோயாளர் அபிவிருத்திச் சங்கத்தினர் நேற்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் நேரடியாகக் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
மருத்துவமனை அபிவிருத்திச் சங்கக்குழுவினர் நேற்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைச் சந்தித்து இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தனர்.
மருத்துவமனையில் மிக அத்தியாவசியமெனக் கருதப்படும் பொது மருத்துவ நிபுணர், குழந்தைகள் மருத்துவ நிபுணர் போன்றவர்களை நியமிக்குமாறும், மருத்துவமனையில் கடமையாற்றும் எக்ஸ்றே அலகு மற்றும் ஆய்வுகூட அலகு ஆகியவற்றில் தலா ஒரு அலுவலரே பணியாற்றுவதோடு, இவர்கள் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் விடுமுறையில் செல்லும் வேளையில் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் தனியார் நிலையங்களை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.
அதனால் பெரும் நிதிச் செலவை மக்கள் சந்திப்பதோடு பல சிக்கல்களையும் எதிர்கொள்கின்றனர்.
இந்தப் பிரிவுகளுக்கு மேலும் ஒருவரை நியமிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிவித்தனர்.
மருத்துவமனை அபிவிருத்திச் சங்கத்தினரின் கோரிக்கைகளை முடிந்தவரை நிறைவேற்ற விரைவில் நடவடிக்கை எடுப்பதாக மாகாணப் பணிப்பாளர் உறுதி கூறினார் எனவும் சங்கத்தினர் தெரிவித்தனர். (ஐ-9)

## கஞ்சாவுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூலை 7
கொழும்பு - பேலியகொட பகுதியூடாக, கடத்தப்பட்ட ஒரு தொகை கேரள கஞ்சாவுடன் இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபர்கள் 15 இலட்சம் ரூபா பெறுமதியான 11 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சாவை முச்சக்கர வண்டியொன்றில் கொண்டு சென்ற போது சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. மாவட்டத்தில் பரவலாக துயிலும் இல்லங்களில் துப்புரவுப்பணி



மட்டக்களப்பு, ஜூலை 7

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப்பணிகள் கடந்த மாதத்தில் இருந்து பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அங்கு இதுவரை 3 மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. படுவான்கரை மாவடி முன்மாரியில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லம் நேற்றுத் துப்புரவு செய்யப்பட்டது.

பற்றைக் காடாய் புதர்கள் நிறைந்து காணப்பட்ட இந்த மாவீரர் துயிலும் இல்லத்தைத் துப்புரவு செய்த மக்கள், உயிர் நீத்தவர்களின் நினைவாகப் பொதுச்சுடர் ஏற்றி மௌன அஞ்சலியும் செலுத்தினர். சிரமதானப் பணியில் ஜனநாயகப் போராளிகள் கட்சி உறுப்பினர்களும், பிரதேச மக்களும் கலந்துகொண்டனர். மட்டக்களப்பின் படுவான்கரைப்பகுதியில் 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற போரால் அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்தனர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசத்தைப் பின்னர் இராணுவத்தினர் கைப்பற்றினர். அதனால் அங்கிருந்த மாவீரர் துயிலும் இல்லம் தகர்க்கப்பட்டிருந்ததுடன், அதனை அண்டிய பகுதியில் இராணுவத்தின் முகாமும் அமைக்கப்பட்டிருந்தது என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர். சிறிது காலத்தின் பின்னர் இராணுவ முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டது. அதன் பின்னர் பற்றைக் காடாகக் கிடந்த இந்த மாவீரர் துயிலும் இல்லத்தின் சிறு பகுதி, கடந்த வருடம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உள்ளிட்ட சிலரால் துப்புரவு செய்யப்பட்டதோடு, சுடரேற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அதேவேளை கிழக்கு மாகாணத்தில் மிகப் பெரிய மாவீரர் துயிலும் இல்லமாகக் கருதப்பட்ட தரவை மாவீரர் இல்லத்தைத் துப்புரவு செய்யும் சிரமதானப் பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டன. போருக்கு முன்னரான காலப் பகுதியில் எவ்வாறு இந்தத் துயிலும் இல்லம் காணப்பட்டதோ அதே போன்று மாற்றியமைக்கும் வகையில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தரவை பிரதேச அபிவிருத்தி சங்கம் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி இணைந்து இந்தச் சிரமதானப் பணிகளை மேற்கொண்டன.

மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தரவை மாவீரர் துயிலும் இல்லம் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாவனையில் இல்லாது பற்றைக்காடாகக் காணப்பட்டது. இராணுவக் கெடுபிடிகள் காரணமாக அதனைப் பயன்படுத்த மக்கள் அச்சமடைந்திருந்தனர்.

போர்க் காலத்தில் இராணுவத்தால் தரவை மாவீரர் துயிலும் இல்லக் கல்லறைகள் உடைக்கப்பட்டு அதன் கற்கள் அருகில் உள்ள சிறிய குளத்துக்கள் வீசப்பட்டிருந்தன. மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எதிராக மிகப் பெரிய இராணுவ முகாம் ஒன்று போரின் பின்னரான காலப்பகுதியில் அமைக்கப்பட்டு, இன்று வரை நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் அந்த முகாமில் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று முன்தினம் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. வாகரை, கதிரவெளி, கண்டலடி, புளியங்கண்டலடி, பால்சேனை உள்ளிட்ட கிராம அபிவிருத்தி சங்கத்தினர் இணைந்து, பிரதேச மக்களின் உதவியுடன் சிரமதானப் பணிகளை முன்னெடுத்தனர். கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த கல்லறைகள் அனைத்தும் போர் முடிவடைந்த பின்னர் பாதுகாப்பு படையினரால் அழிக்கப்பட்டு, தென்னை மரங்கள் நடப்பட்டன. உரிய பராமரிப்பின்றி காணப்பட்டதால் பின்னர் அந்தப் பகுதி பற்றைக் காடாக மாறியது.

வாகரை, கோரளைப்பற்று வடக்கு பிரதேச சபைக்குரிய ஜே.சி.பி கனரக வாகனம் மற்றும் உழவு இயந்திரங்களைக் கொண்டு ஆண்கள் பெண்கள் என அனைவரும் இணைந்து குறித்த இடத்தைச் சுத்தப்படுத்தினர். அங்கு சிதறிக் கிடந்த சுமார் 50 இக்கும் மேற்பட்ட கல்லறைகள் கண்டெடுக்கப்பட்டு சேகரிக்கப்பட்டு உரிய இடத்தில் நிரையாக நடப்பட்டன. (ஐ-10)

## 13 வயது சிறுமி மீது பாலியல் கொடுமை

### சந்தேகநபர் கைது

திருகோணமலை, ஜூலை 7

திருகோணமலை பம்புறுகஸ்வெவப் பகுதியில் 13 வயதுச் சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் 26 வயதுடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோமரங்கடவெலப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. குடும்பத் தகராறு காரணமாக சிறுமியின் தாயும் தந்தையும் பிரிந்திருந்தனர். தந்தை சுகவீனம் காரணமாக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்தார். சிறுமி பாட்டியுடன் வசித்து வந்தார். இரண்டு திரு மணம் முடித்து கைவிடப்பட்டுத் தனியாக வாழ்ந்து வந்த 26 வயதுடைய நபர் ஒருவர் சிறுமியைப் பயமுறுத்தி துர்நடத்தைக்கு உள்ளாக்கினார் என பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுமி கோமரங்கடவெலப் பிரதேச மருத்துமனையில் சேர்க்கப்பட்டதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

சந்தேகநபர் இன்று திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் என்று கோமரங்கடவெலப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10,45)

## சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு

தென்மராட்சி,ஜூலை 7

நுவரெலியா மாவட்ட நீதிமன்றச் சட்டத்தரணிகள் இணைந்து நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். நுவரெலியா மாவட்ட நீதிமன்றில் இளநிலைச் சட்டத்தரணியொருவர் பதில் நீதிபதியாகக் கடமையேற்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று நுவரெலியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். நுவரெலியா நீதிமன்றில் மூத்த சட்டத்தரணிகள் பலர் இருக்கும் நிலையில் பதில் நீதிவானாக இளநிலைச் சட்டத்தரணியொருவர் கடமையாற்றுவது பொருத்தமற்றது. இவ்வாறான செயற்பாடுகளால் சட்டத்துறையின் கௌரவம் பாதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை 7

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் எட்டு இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு இரண்டு ட்ரோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த எட்டு மீனவர்களும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மீனவர்களின் 2 படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன. நேற்றுக் காலை காங்கேசன் துறைக் கடற்பரப்புக்கு அழைத்து வரப்பட்ட மீனவர்கள், யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். அதேவேளை நாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளில் 42 படகுகளை விடுவிப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது..

2015ஆம் ஆண்டு முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ள 81 படகுகளில் 42 படகுகள் விடுவிக்கப்படவுள்ளன என்று அமைச்சின் செயலாளர் டப்ள்யூ.எம்.எம்.ஆர். அதிகாரி தெரிவித்துள்ளார். மீனவர்களிட மிருந்து கைப்பற்றப்பட்ட வலைகள் உள்ளிட்ட பொருள் கள் விடுவிக்கப்பட மாட்டாது எனவும் விடுவிக்கப்படவுள்ள படகுகள் தொடர்பிலான தகவல்கள் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சு கூறியுள்ளது. (ஐ-10)

## மாற்று மின்சக்தித் திட்டத்தால் மின் கட்டணம் குறைக்கப்படும்

*அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,ஜூலை 7

இலங்கையில்மிகப்பெரிய மாற்று சக்தி மின் உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மின்கட்டணங்கள் பெருமளவு குறைவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. மக்களும் ஒத்துழைப்பு வழங்கி மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இலங்கையின் மிகப்பெரியமாற்றுசக்திமின்நிலையத்துக்கான வேலைத் திட்ட ஆரம்ப நிகழ்வு பூநகரியில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "இந்தத் திட்டத்தின் மூலம் 2 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இந்த வேலை வாய்ப்புக்கள் வடக்கில் உள்ளவர்களுக்கே வழங்கப்படும். இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டங்கள் நிறைவு பெற்றதும் இயலுமானவரை மின் கட்டணத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். திட்டத்தின் மூலம் அதிகளவான மின் உற்பத்தி கிடைக்கும். 24 மணிநேரமும், 365 நாள்களும் காற்று, சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தியைப் பெற்றுக்கொள்ள கூடிய பிரதேசமாக இந்தப் பிரதேசம் காணப்படும் - என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ-6.35)

## சட்டவிரோத சிகரெட்டுக்கள் சிக்கின

கொழும்பு, ஜூலை 7

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என கட்டுநாயக்க வானூர்தி நிலைய சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இடம்பெற்றது.

குவைத்திலிருந்து வந்த இளைஞர் ஒருவரே அவற்றை நாட்டுக்குக் கொண்டு வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. குவைத் எயார் வேஸ் வானூர்தியில் சந்தேகநபர் வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட சிகரட்டுக்கள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன என்றும், சந்தேகநபர் 50ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தியதன் பின்னர் விடுவிக்கப்பட்டார் என்றும் சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (ற-10)

## மகிந்த ராஜபக்சவால் அரசுக்குப் பெரும் தலையிடி

*அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு*



கொழும்பு, ஜூலை 7

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இன்னமும் நிரூபிக்கப்படாதமை அரசுக்குப் பெரும் தலையிடி ஆகும் என்று ஒரு அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அவை சரியான முறையில் நிரூபிக்கப்படவில்லை.

இரண்டரை ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை. இதன் காரணமாக தற்போதைய அரசு ராஜபக்சக்களுக்கு எதிராகப் பொய்யுரைக்கும் நிலைமை உருவாகியுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தி உரிய சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறினால் எதிர்காலத்தில் அதன் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அநேக சந்தர்ப்பங்களில் [illegible] -என்றார். (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாநாயக்கர்களை மீறி எதுவுமே இடம்பெறாது

## சுதந்திரக் கட்சி கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 7
மகாநாயக்கதேரர்களின்தீர்மானத்துக்கு முரணாக அரசு எந்தவொரு முடிவையும் எடுக்காது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.
கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் தலையகத்தில்நடைபெற்றவாராந்த செய்தியாளர்கள் சந்திப்பிலேயே கட்சியின் மூத்த உறுப்பினரும், துறைமுக அபிவிருத்தி அமைச்சருமானமகிந்தசமரசிங்கமேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகாநாயக்கர்கள் மட்டுமன்றி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும்காணாமால்ஆக்கப்படுதலைக் குற்றமாக்கும் சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அதனாலேயே அந்தச்சட்டவரைவுபிற்போடப்பட்டது.
நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் ஐக்கியம்ஆகியமுக்கியவிடயங்களில் அரசில்அங்கம்வகிக்கும்சிறிலங்கா சுதந்திரக்கட்சிஎப்போதும்அதிகஅக்கறையுடன்செயற்பட்டுவருகின்றது.
இப்போதும் நாடாளுமன்றுக்கு கொண்டுவரமுயற்சித்தகாணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக்கும் சட்டவரைவு பிற்போடப்பட்ட மைக்கும் எமது தலையீடுகளே முக்கியமாகும்.
பன்னாட்டுச் சமவாயம் ஒன்றில் நாம்கைச்சாத்திடமுன்னர்முதலில் தீர்மானங்களைஎடுக்கவேண்டும். நாட்டில் எவ்வாறான கருத்து நிலவுகின்றது என்பதை ஆராய்ந்த பின்னரே பன்னாட்டுச் சமவாயம் ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.
நாம் மகாநாயக தேரர்களின் நிலைப்பாட்டைமீறிஎந்தவேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கத் தயாராக இல்லை. அதேபோல் எமது இராணுவத்தை தண்டிக்கும் வகையிலோ அல்லது காட்டிக்கொடுக்கும்வகையிலோஎந்தவிதநடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது.
அத்துடன், பன்னாட்டு விசாரணைகளுக்கு ஒருபோதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடமளிக்கப்போவதில்லை - என்றார். (வ-5)

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறி மைத்திரிஆடமுடியாது

## அத்துரலிய தேரர்தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7
மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை மீறி அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ள அரச தலைவருக்கு உரிமையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.
ராஜகிரிய ஜயஷேகராராமயவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அரசமைப்புத் திருத்தத்தின் போது பொது வாக்கெடுப்புக்கு வழிவகுக்கும்திருத்தங்களைசெய்யப்போவதில்லைஎனகடந்தஅரசதலைவர் தேர்தலில்மைத்திரிபாலசிறிசேன மக்களுக்கு உறுதிமொழியை வழங்கியிருந்தார்.
அரச சார்பற்ற நிறுவனங்களின் தேவைக்குஅமையஅரசமைப்புச் சட்டத்திருத்தத்தை மேற்கொள்ள இடமளிக்கப் போவதில்லை. அரசமைப்புத்திருத்தங்கள்மேற்கொள்ளும் போது அது அழிவுகளில் முடிவடைந்த பல நாடுகள் இருக்கின்றன.
அரசதலைவ்வர், இலங்கையில்அவ்வாறான நிலமை ஏற்படுவதை தடுக்க வேண்டும்" என்று அத்துரலியரத்ன தேரர் மேலும் குறிப்பிட்டார். (வ-5)

# என்.ரி.சியின் பணிப்பாளர் பதவி துறப்பு

கொழும்பு, ஜூலை 7
தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் டீ.டபிள்யு. எஸ். நாரங்கொட நேற்றுத் திடீரெனப் பதவி விலகினார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை நேற்று மாலை ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பீ. ஹேமச்சந்திரவிடம் கையளித்தார். எனினும் பதவி விலகலுக்கான காரணத்தை அவர் குறிப்பிட்டிருக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை அண்மைக் காலமாக உயர் பதவிகள் வகிக்கும் நிர்வாக சேவை அதிகாரிகள் சிலர் காரணமின்றிய பதவி விலகுகின்றனர். (வ-5)

# பெண்தலைமைத்துவக்குடும்பங்களுக்கு டில்லி, தமிழக அரசுகளிடமிருந்து உதவி

## பேச்சு நடத்துவேன் என தமிழிசை உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு கிழக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட 80 ஆயிரம் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும்உதவிகளைவழங்குவது தொடர்பில்புதுடில்லிமற்றும்தமிழக அரசுகளுடன் பேச்சு நடத்துவேன் என இந்திய ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்தார்.



இலங்கைக்கு 3 நாள் பயணமாக வந்துள்ள அவர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் மற்றும் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்களை தனித்தனியே சந்தித்திருந்தார். அவைத் தலைவர்தலைமையிலானகுழுவினரை சந்தித்த போதே தமிழிசை மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்ததாவது:
வடக்கு கிழக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட 80 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் உதவிகள், போருக்குப் பின்னரான அபிவிருத்தி மற்றும் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு ஆகியவற்றுக்கு இந்திய அரசு இறுக்கமான அழுத்தம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அவரிடம் முன்வைத்திருந்தோம்.
மேலும் இந்திய மீனவர் ஊடுருவலால்எமதுமீனவர்கள்எதிர்கொண்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பிலும் அவரிடம் எடுத்துக்கூறினோம்.
"வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள80ஆயிரம்பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் உதவுவது தொடர்பில் புதுடில்லி மற்றும் தமிழகஅரசுகளுடன்பேச்சுநடத்துவேன். அதேநேரம் இங்கு போர் இடம்பெற்றகாலத்தில்தமிழகத்தில் ஈழத் தமிழர் விடயம் அதிக பேசுபொருளாக காணப்பட்டபோதும் தற்போதுஅந்தநிலைமாறிவிட்டது. உண்மையில் ஈழத் தமிழருக்கு இப்போதுதான்பெரும்உதவிகளும் ஆறுதலும் தேவையான காலமாகவுள்ளது.
எனவேஇவ்வாறானவிடயங்களை தெரிவித்து அதற்கான ஏற்பாடுகளுடன்அடுத்தகட்டமாகஓர்உத்தியோகபூர்வபயணத்தைமேற்கொண்டு இங்கு வருகை தந்து பல்வேறு திட்டங்களைமேற்கொள்வேன்"என்று தமிழிசை உறுதியளித்தார் - என்றார். (வ-101)



# இராணுவம், கடற்படை கொமாண்டோக்கள் இணைந்துபோர்ஒத்திகை

இராணுவத்தின் கொமாண்டோக்கள் மற்றும் கடற்படையின் மரைன் கொமாண்டோக்கள் இணைந்துமட்டக்களப்பில்நேற்று முன்தினம் சிறப்புப் போர் ஒத்திகையை முன்னெடுத்தனர்.
கடற்படையில் புதிதாக உருவாக்கப்பட்ட மரைன் பற்றாலியனைச் சேர்ந்த, 100 கொமாண்டோக்களும், இராணுவத்தைச்சேர்ந்த30 கொமாண்டோக்கள் மற்றும் 30 சிறப்புப் படைப்பிரிவினரும், இந்தப்போர்ப்பயிற்சியில்ஈடுபட்டனர்.
முதலைப் பயிற்சி என்ற பெயரில், மட்டக்களப்பு வாகரை கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்த சிறப்புப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
கடல் மற்றும் தரைவழியாக ஏற்படக் கூடிய அச்சுறுத்தலை எதிர்கொள்ளத் தக்க வகையில், தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யும் நோக்கில், தரையிறக்க நடவடிக்கையுடன் கூடிய இந்தப் போர்ப்பயிற்சிமேற்கொள்ளப்பட்டது.
இந்தப் பயிற்சியில் கடற்படையின் ரணவிஜய என்ற போர்க்கப்பல், 821ஆம்இலக்கதரையிறங்குகலம், 4 கரையோர ரோந்துப் படகுகள் என்பனஈடுபடுத்தப்பட்டன. போர்ப் பயிற்சியை, கிழக்கு கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா, 22 ஆவது டிவிசன் தளபதி மேஜர் ஜெனரல் அனுர ஜெயசேகரமற்றும்கடற்படைதரை நடவடிக்கை பணிப்பாளர் கொமடோர் செரசிங்க ஆகியோர் மேற்பார்வை செய்தனர். (வ-5)

## காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாக்கும் சட்டவரைவு

# பெரும் காட்டிக்கொடுப்பு என மகிந்த தரப்பு கொதிப்பு




கொழும்பு, ஜூலை 7
"காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக்கும் பன்னாட்டு சட்டவரைவு நாடாளுமன்றில்சமர்ப்பிப்பதுதற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இராணுவவீரர்ஒருவர்தவறிழைத்ததாக தெரிவித்து அதற்கு கட்டளையிட்ட அரசியல் தலைவர்களை நாட்டைவிட்டுவெளியேற்றும்நடவடிக்கையேஇதனூடாகமுன்னெடுக்கப்படுகின்றது. இது மிகப்பெரிய காட்டிக்கொடுப்பாகும்"
இவ்வாறு மகிந்த ஆதரவு அணியைச் சேர்ந்த ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் இடம்பெற்ற போரில் மனிதகுலத்துக்குஎதிரானமீறல்கள் நடைபெற்றன என்று யார் கூறினாலும் எந்த நாடும் அதனை நிராகரிக்காது. இலங்கை இராணுவத்தால் போர்க்குற்றங்கள் நடைபெற்றதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஐ.நா. மனிதஉரிமைகள்சபையில்48நாடுகள்அதனைஏற்றுக்கொண்டுள்ளன. அதுதொடர்பில்நடவடிக்கைஎடுக்குமாறுஅந்தநாடுகள்வலியுறுத்தியுள்ளன.
புலிகளுக்கு ஆதரவான அரச சார்பற்ற பல நிறுவனங்களும் இலங்கையில் போர்க்குற்றங்கள் நடைபெற்றதாகவே கூறுகின்றன. எனினும் பௌத்த அமைப்பு ஒன்றின் ஊடாக இந்த நாட்டில் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறவில்லை என நாங்கள் மாத்திரமே ஜெனிவாவில் வலியுறுத்தியுள்ளோம். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கைக்கு அமையவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அனைத்துகுற்றச்சாட்டுகளும்தவறு எனநாம்தெளிவுபடுத்தியுள்ளோம்.
காணாமற்போனோர் தொடர்பில் பொறுப்புக்கூறும்பன்னாட்டுசட்டவரைவுநாடாளுமன்றில்சமர்ப்பிப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இராணுவ வீரர் ஒருவர் தவறிழைத்ததாக தெரிவித்து அதற்கு கட்டளையிட்ட அரசியல் தலைவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றும் நடவடிக்கையே இதனூடாகமுன்னெடுக்கப்படுகின்றது. இதுமிகப்பெரியகாட்டிக்கொடுப்பாகும். எந்தவொரு நாடும் தமது நாட்டில் தீவிரவாதத்தை ஒழித்த இராணுவத்தை காட்டிக்கொடுக்க முனையாது. கடந்த 30 வருடங்களுக்குமுன்னர்இந்தநாட்டில்என்ன நடந்தது? ஆகவே இது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும் - என்றார். (வ-5)

# கூட்டு எதிரணியினர் நீதிமன்றத்தில் மனு

கொழும்பு, ஜூலை 7
உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நேற்று தாக்கல் செய்துள்ளார்.
அபிவிருத்தி லொத்தர் சபை மற்றும் தேசிய லொத்தர் சபை என்பவற்றை அயலுறவுஅமைச்சின்கீழ்கொண்டு வரும் வர்த்தமானி அறிவித்தலை நீக்கம் செய்யுமாறு கோரியே அவர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.
மனுவில் பிரதிவாதிகளாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க, அயலுறவு அமைச்சர் ரவி கருணாநாயக்க, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ந-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுப்பிட்டி மயான விவகாரம்

# நீதிவானின் உத்தரவுக்கு மதிப்பளித்து சரணடைய மேல் நீதிமன்று பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7
புத்தூர்மேற்கு, சிறுப்பிட்டி கிந்துப் பிட்டி மயானத்தின் சுற்றுமதிலை உடைத்த குற்றச்சாட்டில் மல்லாகம் நீதிவான் மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அனைவரையும் சரணடையுமாறு அறிவுறுத்திய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், நீதிவானின் உத்தரவுக்கு மதிப்பளிப்பது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார்.
கிந்துப்பிட்டி மயானம் தொடர்பில் ஏற்பட்ட குழப்பநிலை மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் வரை சென்றது.
மயானம் வேண்டும் என்ற தரப்பிடமும் அதனை அகற்றக் கோரிய தரப்பிடமும் விசாரணைகள் இடம்பெற்றன. நிறைவில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றால் மூன்று கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.
"கட்டளை நாளில் இருந்து சரியாக ஒரு மாத காலத்துக்குள் மயானத்துக்குச் சுற்றுமதில் கட்டப்பட வேண்டும். சில மாதங்களுக்குள் மின்சாரம் மூலம் சடலத்தை எரியூட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த விடயத்துக்கு எதிராகச் செயற்படுபவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும்" ஆகிய கட்டளைகளை மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் வழங்கியது.
இந்தக் கட்டளைகளுக்கு தடை உத்தரவை வழங்க வேண்டும் வேண்டும் என்று கோரியே புத்தூர்மேற்கு கலைமதி கிராம சங்க அங்கத்தவர்களால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிப் பேராணை மனுவை முன்வைத்தனர்.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.
மல்லாகம் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளில் ஒன்றாக மயானப் பிரச்சினை தொடர்பான விடயத்துக்கு எதிராகச் செயற்படுபவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற கட்டளை உள்ளது.
மயானப் பிரச்சினை தொடர்பில் மல்லாகம் நீதிவான் மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர்களை விரைவில் நீதிமன்றில் சரணடையுமாறு அறிவுறுத்துமாறு அரச சட்டவாதி மேல் நீதிமன்றிடம் விண்ணப்பம் செய்தார்.
அரச சட்டவாதியின் விண்ணப்பத்தை பரிசீலனை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், மல்லாகம் நீதிவானால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அனைவரையும் நீதிமன்றில் சரணடையுமாறு அறிவுறுத்தினார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-4-12)

## 39 ஆவது கவியரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7
வலம்புரி கவிதா வட்டத்தின் பௌர்ணமி 39ஆவது கவியரங்கு மலையக கவிஞர் மலைத்தம்பி அவர்களின் அரங்காக கொழும்பு அல்ஹிக்மா கல்லூரியில் நாளை சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு கவிஞர் ஏ.பீர்முகம்மது அவர்கள் தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக சரவணையூர் கவிஞர் விசு செல்வராஜா கலந்து கொள்வார். இந்த அரங்கில் கவிஞர் மலைத்தம்பி அவர்கள் பற்றி லோரன்ஸ் செல்வநாயகம், மேமன் கவி, அந்தனி ஜீவா ஆகியோர் உரையாற்றுவார்கள். (4)

## அஸ்கிரிய பௌத்த பீடத்தின் பின்னணியில் பச்சை இனவாதம்

### காமினி வியங்கொட சாடல்

கொழும்பு, ஜூலை 7
கண்டி அஸ்கிரிய பௌத்த பீடத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலின் பின்னணியில் பச்சையான இனவாதமே உள்ளதாக முன்னணி சிவில் சமூகச் செயற்பாட்டாளரான காமினி வியங்கொட தெரிவித்தார்.
கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். புதிய அரசமைப்புத் தேவையில்லை என்று மகாநாயக்க தேரர்கள் கூறியுள்ளனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, காமினி வியங்கொட மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
"நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தை மாற்றக் கூடாது. நாட்டில் அதிகாரத்தைப் பரவலாக்கக்கூடாது என்று அவர்கள் கூறுவார்களாயின் அதன் பின்னணியில் அரசியல் நிகழ்ச்சி நிரலே உள்ளது. புத்த பகவான் சிங்கள பௌத்தர்களுக்கு என்று கூறி தர்மத்தைப் போதிக்கவில்லை. முழு உலகுக்கும் புத்த பகவான் தர்மத்தைப் போதித்தார். அத்துடன் இனம், மதம் மற்றும் சாதியை நிராகரிக்க வேண்டும் என்று பௌத்த தர்மத்தில் கூறப்பட்டுள்ளது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## மாணவிகளைக் கடத்த முயன்ற அடாவடிக் கும்பலால் பதற்றம்

### யாழ்ப்பாணம் கச்சேரியடியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம் கச்சேரியடியில் இயங்கும் தொண்டு நிறுவனத்தில் கற்கை நெறிக்காகச் சென்ற மாணவிகள் இருவரை வாள்களுடன் வந்த கும்பல் கடத்த முயன்றதால் அங்கு நேற்றுப் பெரும் பதற்றம் ஏற்பட்டது.
யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள ஓர் தொண்டு நிறுவனத்தின் அலுவலகத்தில் இடம்பெறும் கற்கைநெறிக்கு மாணவிகள் இருவர் சமுகமளித்திருந்தனர். அப்போது மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த கும்பல் திடீரென நிறுவனத்துக்குள் உட்புகுந்தது.
அதனால் அங்கே பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன் மாணவிகள் அவலக் குரல் எழுப்பினர். தொண்டு நிறுவனப் பணியாளர்கள் மாணவிகளை பாதுகாக்கப் பெரும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனால் ஆத்திரமடைந்த கும்பல் தொண்டு நிறுவனத்தை அடித்து நொறுக்கிச் சேதம் விளைவித்ததோடு அங்கு பெரும் குழப்பத்தை விளைவித்தது.
மாணவிகளைக் கடத்தும் முயற்சி தோல்வியடைந்தமையால் கும்பல் அங்கிருந்து தப்பிச் சென்றது. அங்கு கூடியவர்களும் நிறுவனப் பணியாளர்களும் அடாவடிக் கும்பல் பயணித்த மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களைக் குறித்துப் பொலிஸாரிடம் வழங்கினர்.
சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-101)

## பெண் குத்திக் கொலை

ராஜங்கனைப் பிரதேசத்தில் வயல் ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்த பெண்ணொருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கொலை செய்யப்பட்டவர் யால, ராஜங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதானவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
கொலை செய்யப்பட்டவரின் உடற்கூறுப் பரிசோதனை நேற்று நடைபெற்றது.
இந்தக் கொலையை, உயிரிழந்துள்ள பெண்ணின் கணவர் செய்துள்ளார் என்றும், சம்பவத்தின் பின்னர் அவர் விசம் அருந்தியுள்ளார் என்றும் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர் தற்போது பொலிஸாரின் பாதுகாப்பில் தம்புத்தேகம மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றார் என்றும் தெரிவித்தனர். (ந-10)

## அரசுக்குள்ளேயே பலர் வில்லன்கள்

### விக்கிரமபாகு சாட்டை

கொழும்பு, ஜூலை 7
'கூட்டு அரசுக்கு எதிரான வில்லன்கள் வெளியில் இருப்பதைக் காட்டிலும் உள்ளேயே அதிகமாகக் காணப்படுகின்றனர். இதன் காரணமாகவே பல நல்ல விடயங்கள் முன்னெடுக்கப்படுவதில் தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன"
இவ்வாறு நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.
மருதானை சமூக சமய நிலையத்தில் தோழர்கள் கந்தசாமி, சோமபால நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
1953ஆம் ஆண்டு முழு அடைப்புப் போராட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இணைந்தமைக்கு இடதுசாரிகள் தமிழ் தேசிய இனப் பிரச்சினையில் காட்டிய அதிக அக்கறையே காரணமாகும். இத்தகைய தாக்கங்களே பண்டாரநாயக்க செல்வநாயகம் உடன்படிக்கை உருவாக வழிசமைத்தது. பண்டாரநாயக்க மீது இடதுசாரிகள் நம்பிக்கை கொள்ளாததன் காரணமாகவே பண்டார நாயாக்காவுக்கு ஒத்துழைப்பை வழங்க இடதுசாரிகள் பின்னின்றனர். இந்தக் கால கட்டத்தில் ஜே.ஆர் நாட்டை இனவாத ரீதியில் பெருங் குழப்பத்துக்குள் கொண்டு செல்ல முயன்றார். இத்தகைய பயங்கர சூழ்நிலையில் எஸ்.டீ பண்டாரநாயக்க போன்ற தலைவர் ஜே.ஆரை எதிர்கொண்டு அவர் முயற்சிகளை தோல்வியடையச் செய்தார். இந்த கால கட்டத்தில் இடதுசாரிகள் பண்டா செல்வா உடன்படிக்கையைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தாதுவிட்டது வரலாற்றுத் தவறாகும்.
தற்போதைய கூட்டு அரசின் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச இன்று புதிய அவதாரம் எடுத்துள்ளார். ஊழல்வாதிகளையும் பேரினவாத சக்திகளையும் புனித நீர் தெளித்து அவர்களைப் புனிதர்களாக்க முனைகின்றார். இதனை நாம் விமர்சித்தமையால் அவர் எம்மீது வசைபாடத் தொடங்கியுள்ளார்.
நான் உள்ளூராட்சி சபையில்கூட அங்கத்தவர் பெறத் தகுதியில்லாமல் அரசியல் செய்வதாக என்னைத் அவர் திட்டித் தீர்த்துள்ளார். நான் 1998ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கொழும்பு மாநகர சபை உறுப்பினராக, மேல்மாகாண சபை அங்கத்தவராக, இறுதியாக தெகிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினராக இருந்துள்ளேன். இந்தத் தகவல்கள் நாட்டின் நீதி அமைச்சருக்கு தெரியாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும்- என்றார். (வ-5)

## திருட்டு மாட்டை வெட்டியவர் 80 கிலோ இறைச்சியுடன் கைது

### யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் திருடிய மாட்டை வெட்டி சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள உணவகத்துக்கு விற்பனை செய்து வந்த ஒருவர் நேற்றுச் சிக்கினார். அவரிடமிருந்து 80 கிலோ இறைச்சி கைப்பற்றப்பட்டது. அத்துடன் உணவக உரிமையாளரும் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் திருட்டு மாடு ஒன்றை இறைச்சியாக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் . அவரிடம் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் போது சுன்னாகம் பகுதியில் உள்ள உணவகத்துக்கு அந்த இறைச்சியை விற்பனை செய்தமை கண்டறியப்பட்டது.
சுன்னாகத்திலுள்ள உணவகத்துக்கு சந்தேகநபரை அழைத்துச் சென்ற பொலிஸார் அங்கிருந்த 80 கிலோ இறைச்சியை மீட்டெடுத்தனர். அவ்வாறு மீட்கப்பட்ட இறைச்சியுடன் உணவக உரிமையாளரும் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர்கள் இருவரும் சான்றுப் பொருள்களுடன் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவார்கள்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-101)

## 18 அமைச்சர்கள் மகிந்த அணியில் இணைவார்களாம்

கொழும்பு, ஜூலை 7
தேசிய அரசிலுள்ள 18 அமைச்சர்கள், எதிர்வரும் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் மகிந்த அணியான பொது எதிரணியில் இணையவுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.
நெலும் மாவத்தையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை வெளிவாரியினரின் கலந்துரையாடல்கள் நாளை

யாழ்ப்பாண பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் வணிகமாணி (வெளிவாரி) அனுமதிக்கான விண்ணப்பங்க ள் கோரப்பட்ட நிலையில் அந்தக் கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை இடம்பெறுகிறது.

காலை 8.45 மணிக்குக் கிளி நொச்சி எம்.டெக் கலை வர்த்தக கல்லூரியிலும் காலை 9 மணிக்கு எடிசன் கல்லூரியிலும். மு.ப.11 மணிக்கு முள்ளியவளை சத்தியா கல்வி நிலையத்திலும் ந.ப 12 மணிக்கு முல்லைத்தீவு நெய்தல் கல்வி நிலையத்தி லு ம் மதியம் 1.30 மணிக்கு புதுக்குடியி ருப்பு பொருளியல் கல்லூரியிலும் நடத்தப்படவிருக்கின்றது. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை 2015 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முற்பட்ட காலப்பகுதியில வணிகப்பிரிவில் சித்தியடைந்தவர்கள் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் கேட்டுக்கொள்கின்றார். (4)

## சிறுமி கர்ப்பம்

# கணவன் மீது மனைவி முறைப்பாடு

வவுனியா, ஜூலை 7

வவுனியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் சிறுமி கர்ப்பமடைய தனது கணவனே காரணம் என்று அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனது மகளின் செயற்பாடுகளில் தாயார் சந்தேகம் கொண்டுள்ளார். கடந்த 3ஆம் திகதி தனது மகளை பூவரசன்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு அவர் அழைத்துச் சென்றுள்ளார். அங்கு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டபோது சிறுமி கர்ப்பமாகவுள்ளமை தெரியவந்தது.

அது குறித்துப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

சிறுவர் பாதுகாப்புக்குழு உறுப்பினர் ஒருவர் இந்தச் சம்பவம் தொடர்பில் வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலக தமிழ் மொழி சேவைப் பிரிவின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

பொலிஸார் சிறுமியின் வீட்டுக்குச் சென்றபோது. வீட்டில் எவரும் இருக்கவில்லை. சம்பவம் தொடர்பில் தாயார் பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

"எனது கணவர் மகளை அழைத்துக்கொண்டு அவரது ஊரான அங்கறுவத்தோட்ட வுக்குச் சென்றிருந்தார். அதன்போது குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக முறைப்பாட்டில் தாயார் கூறியுள்ளார். வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் செயற்படும் சிறுவர் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் கிராமங்கள் தோறும் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் செயற்படும் தமிழ் மொழி சேவைப்பிரிவு இலக்கமான 076 6224949, 076 6226363 ஆகிய இலக்கங்களுக்கு தினமும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன. துரித கதியில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

## புதிய அரசமைப்புக் குறித்து

# மகாநாயக்கர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்

## அரசிடம் வலியுறுத்துகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 7

புதிய அரசமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்து அது குறித்து தெளிவுபடுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புக்குப் பௌத்த பீடங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்குக் காரணம் அரசமைப்புத் தொடர்பில் அரசு அவர்களுக்குத் தெளிவுபடுந்தாமையே. இதனால் அரசமைப்பு தொ ர்பில் இனவாத அமைப்புகள் பரப்புகின்ற கருத்துக்களே நாடு முழுவதும் சுற்றித் திரிகின்றன.

இதற்குச் சிறந்த உதாரணம்தான் பௌத்த மதத்திற்கு இருக்கின்ற முதன்மை இடம் புதிய அரசமைப்பின் ஊடாக இல்லாமல் செய்யப்படப் போகின்றது என்ற பரப்புரை. இந்தப் பரப்புரை அதிகம் அதிகமாக மேற்கொள்ளப்படுகின்றது. உண்மையில் முதன்மை இடம் நீக்கப்பட வேண்டும் என்று அரசியல்வாதிகளோ அல்லது மதத் தலைவர்களோ கூறிய சந்தர்ப்பம் ஒன்றாவது உண்டா? அப்படியொரு சந்தர்ப்பத்தைப் பொய்ப் பரப்புரை செய்பவர்களால் காண்பிக்க முடியுமா? அல்லது அவர்கள் விடுத்த சிறிய அறிக்கை ஒன்றாவது உள்ளதா? அப்படி எதுவும் இல்லை.

ஆனால் பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடம் நீக்கப்படப் போகின்றது என்றொரு கருத்து திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டே இப்போது பரப்பப்பட்டு வருகின்றது. இவ்வாறான பொய்ப் பரப்புரைகள் தொடர்பில் அரசு பௌத்த பீடங்களுக்குத் தெளிவுபடுத்தத் தவறியமைதான் அந்தப் பீடங்கள் இப்போது புதிய அரசமைப்பை எதிர்ப்பதற்குக் காரணம்.

புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர் என்பதை நாம் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். 2015 ஓகஸ்ட் மாதம் மாத்திரமன்றி 2005 மற்றும் 2010 ஆகிய ஆண்டுகளிலும் மக்கள் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கும் நிறைவேற்றி அதிகாரமிக்க அரச தலைவர் முறைமையை நீக்குவதற்கும் ஆணை வழங்கி இருந்தனர். ஆனால் அப்போதைய ஆட்சியாளர் அந்த ஆணையை மீறிவிட்டார். ஆனால் இந்த ஆட்சியில் அதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.

மக்களின் ஆணையை மீற முடியாது. இந்தப் பிரச்சினையை அரசு உடனடியாகத் தீர்க்க வேண்டும். பௌத்த பீடங்களைச் சந்தித்து புதிய அரசமைப்பு தொடர்பிலும் பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முதன்மை இடம் நீக்கப்படவுள்ளது என்று பொய்ப் பரப்புரைகள் செய்யப்படுவது தொடர்பிலும் விரிவாக விளக்கம் கொடுக்கவேண்டும்-என்றார். (த-3)

# மாட்டுடன் மோதுண்டு வயோதிபப் பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

மாட்டுடன் மோதுண்டு காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி இராம்நாதபுரத்தைச் சேர்ந்த இராஜவரோதயம் சரஸ்வதி (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம், அளவெட்டியில் இறப்புச் சடங்கு ஒன்றுக்குக் கடந்த 3ஆம் திகதி மோட்டார்ச் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது மட்டுவில் சாலையில் மாடு ஒன்றுடன்அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியது. மயக்க மடைந்த நிலையில் அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார். பெண்ணுக்கு உடலில் எந்தக் காயங்களும் ஏற்பட்டிருக்க வில்லை என்று இறப்பு விசா ரணை மேற்கொண்ட அதிகாரி சி.இளங்கீரன் தெரிவித்தார். (4-12)

இது புதுசு






பெண்களுக்கான சேலை வகைகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. கொட்டன் வகையில் அமைந்துள்ள இந்தச் சேலை உடுப்பதற்கு மிக எடுப்பாக இருக்கும். வேலைக்குச் செல்லும் பெண்கள் இதனை இலகுவாக அணிந்து கொள்ளலாம். இது ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 80 | 60 |
| கத்தரி | 140 | 140 | 160 | 160 | 140 |
| கரட் | 300 | 240 | 300 | 240 | 200 |
| மரவள்ளி | 70 | 80 | 70 | 60 | 60 |
| பயிற்றை | 100 | 120 | 160 | 120 | 140 |
| பாகல் | 120 | 140 | 240 | 180 | 180 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 |
| சி.வெங்காயம் | 300 | 400 | 320 | 260 | 260 |
| பூசணி | 80 | 100 | 100 | 120 | 80 |
| தக்காளி | 100 | 140 | 160 | 160 | 140 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 | 60 |
| கீரை | 30 | 30 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| பச்சை மிளகாய் | 300 | 240 | 300 | 250 | 200 |
| புடோல் | 100 | 80 | 100 | 100 | 80 |
| கோவா | 120 | 140 | 160 | 120 | 120 |
| வெண்டி | 100 | 80 | 120 | 180 | 100 |
| போஞ்சி | 150 | 180 | 200 | 180 | 160 |
| லீக்ஸ் | 100 | 120 | 160 | 140 | 100 |
| தேங்காய் | 70 | 60 | 70 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 90 |
| தேசிக்காய் | 60 | 80 | 100 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 |
| கரிமிளகாய் | 160 | 280 | 280 | 200 | 240 |
| இராசவள்ளி | 200 | - | 300 | 300 | 260 |
| முருங்கைக்காய் | 220 | 240 | 280 | 200 | 200 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 300 | 500 | 300 |
| கணவாய் | 600 | 600 | 800 | 1000 |
| பாரை | 500 | 600 | 700 | 700 |
| சுறா | 500 | 700 | 800 | – |
| சீலா | 400 | 500 | 500 | 500 |
| விளை | 500 | 400 | 500 | 600 |
| முரல் | 350 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 350 | 400 | 450 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 400 | 500 | 350 |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 200 | 400 | – |
| சூடை | 200 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 300 | 300 | 300 |
| திருக்கை | 350 | 250 | 400 | 300 |
| மதனம் | 200 | 150 | 250 | – |
| கொய் | 200 | 50 | 80 | 100 |
| பாறை | 300 | 250 | 500 | – |
| வாளை | 200 | – | 400 | 300 |



# மணல் ஏற்றிய நால்வர் வாகனங்களுடன் கைது

கிளிநொச்சி, ஜூலை 7

அனுமதிப் பத்திர நிபந்தனைகளை மீறி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் 4 உழவு இயந்திரங்களுடன் 4 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பளை முகாவில் குளத்தடியை அண்மித்து 3 உழவுஇயந்திரங்களும் ஆனையிறவை அண்மித்து ஒரு உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சிறப்பு அணி இந்தப் பணியில் ஈடுபட்டது. (4,6)

# அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர் வரும் 22 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும் இந்த திருவிழா தினமும் மாலை 5 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயக் கூட்டம் தொடர்பில் பொய் உரைக்கிறார் முதல்வர்

## தவராசா பகிரங்கக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 7

விவசாய அமைச்சுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கான கூட்டமொன்றை முதலமைச்சர் ஆரம்பித்து வைத்தபோதிலும் அந்தக் கூட்டத்தை முதல்வரின் தந்திரோபாய மதியுரைஞர் ஒருவரே கூட்டத்தை நடத்தினார். அவ்வாறு கூட்டத்தை நடத்த முடியாது என்று வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா குற்றம்சாட்டினார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் வடக்கு மாகாண முதலமைச்சரைநோக்கிசபையின் எதிர்க்கட்சித்தலைவர் வினாக்களைத் தொடுத்தார். அதில் வடக்கு விவசாய அமைச்சுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்குக் கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற கூட்டம்தொடர்பாகக்கேள்விஎழுப்பினார். குறித்த வினாவுக்கு முதலமைச்சர் தனது பதிலை வழங்கியிருந்தபோதிலும் அந்தப் பதிலில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என்று தெரிவித்ததோடு அந்தக் கூட்டத்தை முதல மைச்சரின் தந்திரோபாய மதியுரைஞரே நடத்தினார். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

அதற்கு முதல்வர், " குறித்த கூட்டத்தை நான் ஆரம்பித்து வைத்து கூட்டம்முடியும்வரைஅங்குஇருந்தேன். நான் கூட்டத்தை முடித்த பின்னர்யாராவதுசிலர்கலந்துரையாடியிருக்கலாம். அதனைக் கூட்டம் என்று நினைத்தால் அதற்கு நான் பொறுப்பாக முடியாது" என்றார்.

இதற்குபதிலளித்தசபையின்எதிர்க்கட்சித்தலைவர், "முதலமைச்சர் கூட்டத்தை ஆரம்பித்து வைத்த சிறிது நேரத்திலேயே அங்கிருந்து வெளியேறிவிட்டார். அதன் பின்னர் முதல்வரின் மதியுரைஞரே கூட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியுள்ளார். இதற்கான ஆதாரம் இருக்கின்றது" என்று தெரிவித்தார். தமிழர் தரபில் உடையருக்கு இருக்கும்மதிப்புஉடையாருடைய பொல்லுக்கும் இருக்கும் என நாசூக்காக சயந்தன் கருத்தைப் பதிவு செய்தார்.

மாகாண அமைச்சுக்களின் விசாரணைகள் தொடர்பில் தவராசா கேள்வியெழுப்பினார்.

வடக்குமாகாண அமைச்சர்களின் ஊழல் விசாரணைகளுக்கான செலவு 3 லட்சத்து 21ஆயிரம் ரூபா என்று தலைமைச் செயலாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான ஊழல்குற்றச்சாட்டுக்களை விசாரணைசெய்யவதற்காக உருவாக்கப்பட்டவிசாரணைக்குழுவுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டனவா? என்று எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா முதலமைச்சரிடம் மீண்டும் கேள்வி எழுப்பினார்.

"விசாரணைக் குழு உறுப்பினர்களுக்கு இன்னும் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. ஆனால் 3 இலட்சத்து21ஆயிரம்ரூபாசெலவாகியுள்ளதாகத் தலைமைச் செயலாளர் அறிக்கையில் குறிப்பி ட்டுள்ளார். இது குறித்து தலைமைச் செயலாளர் உரிய பதிலளிப்பார்" என்றுமுதலமைச்சர்தெரிவித்தார்.

அதற்கிடையில் குறுக்கிட்ட மாகாணசபை உறுப்பினர் சயந்தன் தலைமைச் செயலாளர் சபையில் பதிலளிக்க முடியாது. முதல மைச்சரே இதற்கான பதிலை வழங்க வேண்டும்என்றார். இதற்குஉரிய முறையில் கேள்விகளைக் கேட்டால்பதிலளிப்பேன்என்றார்முதலமைச்சர். (4-8)

# வடக்கு மாகாணத்தில்

# கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு இன்னும் பற்றாக்குறை நிலவுகிறது

## அவற்றைநிரப்பநடவடிக்கைஎன்கிறார்கல்விச்செயலர்

யாழ்ப்பாணம், ஜூலை 7

"வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடங்களுக்கானஆசிரியர்களுக்கு இன்னும் 199 வெற்றிடங்கள் நிலவுகின்றன. துறைசார்ந்த பட்டதாரிகள்இல்லாமையேஇந்தவெற்றிடங்கள்நீடிக்கக் காரணம்".

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்குமாகாணத்தில்உள்ளபாடசாலைகளில்நிலவும் கணித, விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள்முழுமையாகஇன்னமும்நிரப்பப்படவில்லை. இவ்வாறு418ஆசிரியர்வெற்றிடங்கள்காணப்பட்டன. இவற்றை நிரப்புவதற்காக நாம் விண்ணப்பங்களை கோரியிருந்தோம்.

இதற்கு 252 பேர் விண்ணப்பித் திருந்தனர். அவர்களில் 219பேர் தெரிவு செய்யப்பட்டு கடந்த மாதம் அவர்களுக்கான நியமனங்களை வழங்கியிருந்தோம். அவர்கள் பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர். ஆனால் இன்னமும் 199 ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான பட்டதாரிகளை உள்வாங்கும் இரண்டாம் கட்ட நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும் - என்றார். (4-ரி)



நாடுமுழுவதிலுள்ளபாடசாலைகளுக்கு இடையிலான சமூக விஞ்ஞான போட்டியில் குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி ம.கிருஷ்ணா முதலாமிடத்தை பெற்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

தரம் 7 மாணவர்களுக்கு இடையிலான சமூக விஞ்ஞான போட்டியிலேயே இவர் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

*(422-173)*

# வடக்கு மாகாண சபையில்

# ஊழல் நடந்திருந்தால் நிரூபிக்கப்படவேண்டும்

## அவைத்தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

"வடக்குமாகாணசபையில்ஊழல் இடம்பெறவில்லை என்று முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். மாகாண சபையில் ஊழல் நடந்திருந்தால் ஆதாரத்துடன் நிருபிக்க வேண்டும். அதனை விடுத்துப் பேச்சளவில் மாகாண சபையில் ஊழல் நடக்கிறது என்று வசை பாடக்கூடாது".

இவ்வாறு அவைத்தலைவர்சி.வி.கே.சிவஞானம் மிகக் காட்டமாகத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 98 ஆவது அமர்வு கைதடியில் நேற்று ஆரம்பமானது. அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையில் ஊழல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருக்கலாம். அதற்காக ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுக்களைநிருபிக்காமல் எழுந்தமானமாக மாகாண சபையில் ஊழல் இடம்பெற்றுள்ளது என்று உறுப்பினர்களும் கூறிக்கொண்டிருக்கின்றர். அவற்றை ஊடகங்களும் ஊதிப் பெரிப்பிக்கின்றன. மாகாணசபையின்அமைசுக்களிலோ அல்லது மாகாணசபை உறுப்பினர்களோ ஊழல் மோசடியில் ஈடுபட்டிருந்தால் ஆதாரத்துடன் நிருபிக்கப்படவேண்டும். அதனைவிடுத்துஊழல்நடந்துவிட்டது என்று கூறிக்கொண்டிருக்கக் கூடாது என்றார்.

மாகாண சபை உறுப்பினர் அ. பரஞ்சோதி இன்றைய(நேற்று) அமர்வில் வடக்கு மாகாண சபையின் அனைத்து அமைச்சர்கள் மற்றும் திணைக்களங்கள் போன்றவற்றில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடி மற்றும் குற்றச்சாட்டுச் சம்பந்தமாக விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்திப் பிரேரணைஒன்றைமுன்மொழியவிருந்தார். எனினும்சபைநடவடிக்கைக்குழுவில் இந்த விடயம் ஆராயப்பட்டுக் குறித்த பிரேரணையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதேவை இருப்பதால் அடுத்த அமர்வில் குறித்த பிரேரணையை எடுத்துக் கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி குறித்த முடிவைச் சபையில் அறிவிக்கும்போதேஇந்தவிடயம்பேசப்பட்டது. அதன்போதுகருத்துரைத்த உறுப்பினர் சயந்தன், "தலைக்கு மேலே வெள்ளம் வந்த பின்னர் சாண் ஏறினாலென்ன முழ மேறினாலென்னஎன்பதுபோன்றதாக உள்ளது" என்றார். (4-8)

# அநாதரவாக நின்ற வாகனத்தில் பணம் மற்றும் நகைகள் மீட்பு

## அதில் வந்தவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

அநாதரவாக நின்ற ஹைஏஸ் ரக வானில்இருந்துபணம், நகைகள், கடவுச்சீட்டு என்பனவற்றைக் கைப்பற்றியுள்ளதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் உரும்பிராய் வடக்கு ஞான சம்பந்தர் சாலையில் சில நாள்களுக்குமுன்னர்இடம்பெற்றது. இது தொடர்பில் பிரதேச மக்கள் தெரிவித்ததாவது:

"வீடு ஒன்றினுள் நள்ளிரவு ஒரு மணியளவில் யாரோ ஒருவர் உள்நுழைவதை அவதானித்த வீட்டுஉரிமையாளர்கூக்குரலிட்டு அயல வர்களின் உதவியை நாடியுள்ளார். அப்பகுதி இளைஞர்கள் குறித்த நபரைப் பிடிப்பதற்கு முயற்சித்தபோதும்அவர்தப்பியோடியிருந்தார்.

குறித்தநபரைஇளைஞர்கள்தேடிச் சென்றபோது சிறிது தூரத்தில் அநாதரவானநிலையில்ஹைஏஸ் வாகனம்ஒன்றைக்கண்டுள்ளனர். அது தொடர்பில் கோப்பாய் பொலிஸா ருக்குத் தகவலை ஆள்கள் வழங்கி யுள்ளனர். கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் செல்லாமையால் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அதன்பின்னர் சம்பவ இடத்துக்கு வந்த கோப்பாய் பொலிஸாரிடம் சுன்னாகப்பொலிஸார்பொறுப்பைப் பாரப்படுத்தி அவ்வி டத்தைவிட்டுச் சென்றனர்" என்று தெரிவித்தனர்.

விசாரணை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார் குறித்த ஹைஏஸ் வாகனத்தின் பின்புற கதவைத் திறந்து பார்த்தபோது அதனுள் ஏராளமான பணம் மற்றும் தங்க நகைகள் காணப்பட்டன.

அதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் குறித்த வாக னத்தைப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ள தாகப் பொலிஸார்மேலும்தெரிவித்தனர். (4-8)

# முள்பள்ளி ஆசிரியருக்கு சங்கம் உருவாகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறுவதற்காக வடக்கு மாகாண முள்பள்ளி ஆசிரியர் சங்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான முன்பள்ளி ஆசிரியர்கள் உள்ளனர். நீண்ட காலமாக அவர்களின் சம்பளம் 4 ஆயிரம் ரூபாவாகவே காணப்படுகின்றது.

பிரதேசத்தில் அதிகரித்துள்ள ஆங்கில மொழி மூலமான முன்பள்ளிகள் குழந்தைகளுக்கு ஆரம்ப கட்ட விளையாட்டு மூலமான கல்வியையும் தமிழ் மொழியையும் கற்றுக்கொடுக்க மறுக்கின்றது.

அதனால் வடக்கில் இவ்வாறு ஒரு சங்கம் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-8)

# கிளிநொச்சி அபிவிருத்திக்கு ரூ.4, 200 மில்லியன் ஒதுக்கீடு

கிளிநொச்சி யூலை 7

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டுநடைமுறைப்படுத்தப்படும். அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு 4 ஆயிரத்து 219.7 மில்லியன்ரூபாநிதிஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்டசெயலகத்தகவல்கள்தெரிவிக்கின்றன.

கிளிநொச்சிமாவட்டத்தில்முன்னெடுக்கப்படும்அபிவிருத்திக்குத்துறை ரீதியாக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் துறைக்கு ஆயிரத்து476.95மில்லியன்ரூபாவும் உட்கட்டமைப்புக்குகு 915.24 மில்லியன்ரூபாவும்வீடமைப்புக்கு 559 மில்லியன் ரூபாவும் சாலை அபிவிருத்திக்கு548.96மில்லின் ரூபாவும்கல்விக்கு306.14மில்லியன் ரூபாவும் சுகாதாரமும் நீர் விநியோகத்துக்கும்189.75மில்லியன் ரூபாவும் விவசாயமும் கால்நடை அபிவிருத்திக்கும் 117.5 மில்லியன்ரூபாவும்கைத்தொழிலுக்கு 60 மில்லியன் ரூபாவும் கடற்தொழிலுக்கு 24.52 மில்லியன் ரூபாவும்ஏனையவைக்கு21.64மில்லியன் ரூபாவும் என 10 அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு 4 ஆயிரத்து 219.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது - என்று கிளிநொச்சி மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் காயப்பட்டவரை வைத்தியசாலையில் சேர்க்காது சாலையில் வீசியோருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூலை 7
விபத்தில் காயப்பட்டவரை வைத்தியசாலையில் சேர்ப்பதாகக் கூறி வாகனத்தில் ஏற்றிச் சென்று சாலையோரம் வீசிவிட்டுத் தப்பிச் சென்ற குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதி வான் மன்று உத்தரவிட்டது.
கடந்த முதலாம் திகதி இரவு மிருசுவில் முதன்மைச் சாலையில் சைக்கிளில் சென்ற முதியவரை வாகனத்தில் சென்றவர்கள் மோதியதனால் முதியவர் காயமடைந்தார். அவரை மோதியவர்களே முதிய வரை வைத்தியசாலையில் சேர்ப்பதற்காக ஏற்றிச் சென்றனர். அவர் அவ்வாறு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்திருக்கலாம் என்றும் அதனால் அவர்கள் முதியவரை மருத்துவமனையில் ஒப்படைக்காமல் வீசிவிட்டுச் சென்றிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. அவ்வாறு ஏற்றிச் செல்லப்பட்ட முதியவரை மிருசுவில் தவசிகுளம் பகுதியில் குடியிருப்பு களற்ற பகுதியில் வீசிவிட்டுச் சென்றுள்ளனர். சடலம் பொது மக்களின் தகவலின் படி பொலி ஸாரால் மீட்கப்பட்டது.
பொலிஸார் விசாரணை மேற்கொண்ட நிலையில் ஒருவர் சரணடைந்திருந்தார். விசாரணைகளின் மூல மாக மற்றைய 2 பேரும் கைது செய்யப்பட்டனர்.
மூவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
கொடிகாமம் ஐயனார் கோவி லடியைச் சேர்ந்த ஐயாத்துரை சபாரத்தினம் (வயது -65) என்பவர் மிருசுவில் வடக்குப் பகுதியிலுள்ள கோயிலுக்குப் பூக்கள் எடுத்துக்கொண்டு வீடு திரும்புகையில் மிருசுவில் மருத்துவமனைக்கு அண்மையில் விபத்து ஏற்பட்டது. (4-9)

# அநியாயமாக ஊற்றப்படுகிறது பனங் கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான கள்ளுத் தவறணைகளில் கள்ளுத் தேங்கியுள்ளதால் மிஞ்சும் கள்ளை நிலத்தில் ஊற்றும் நிலமை ஏற்பட்டுள்ளதாக சீவல் தொழிலாளிகள் மற்றும் தவறணைத் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதற்கு மாற்றுவழி ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர்.
"கோப்பாய் இராசபாதைப் பகுதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணையில் ஆயிரக்கணக்கான லீற்றர் கள் நிலத்தில் ஊற்றப் படுகிறது. அதனால் கள் வீணாவதோடு வடக்கின் உற்பத்தியும் வீணடிக்கப் படுகிறது" என்று சீவல் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.
"யாழ்ப்பாண மாவட்டத்தில் 18 பனை தென்னை அபிவிருத்திச் சங்கங்கள் உள்ளன. அவற்றுக்கு கீழே உள்ள தவறணைகளில் பெரும்பாலானவற்றில் கள் தேக்கமடைந்து காணப்படுகின்றது. தற்போது கள் சீசன். பெரும்பாலான சீவல் தொழி லாளிகள் அதிகளவான பனை மரங்களில் கள் சீவி வீடுகளில் வைத்து விற்பனை செய்கின்றனர். மிகுதியைத்தான் தவறணைகளில் கொண்டு போய் கொடுக்கின்றனர். கள் விற்பனை செய்பவர்களைச் சிலவேளைக ளில் மாத்திரம் மது வரித் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தொடக்கப்படுகின்றனது.
கோப்பாயில் 7 கிளைச் சங்கங்கள் உள்ளன. இந்த முறை கள் உற்பத்தி அதிகம் கிடைத்துள்ளது.
தொழிலாளிகளின் நன்மை கருதி ஒரு வருடத்தின் அரையாண்டு காலப் பகுதியில் 55 ஆயிரம் போத்தல்களில் கள் அடைப்பு நடைபெற்றது. ஆனால் இம்முறை கள் உற்பத்தி அதிகம் என்பதால் தொழிலாளிகளின் நன்மை கருதி 90ஆயிரம் போத்தல்களில் கள் அடைக்கும் செயற்பாட்டில் ஈடு பட்டோம். எனினும் ஒவ்வொரு தொழிலாளியும் அதிகளவு மரங்களை இந்த சீசன் காலத்தில் சீவுவதால் குறித்த தவறணையில் தேக்கம் காணப்படுகின்றது.
இந்தக் கள்ளை நாம் வடிசாலைக்கும் அனுப்ப முடியாத நிலையில் உள்ளோம். சங்கானை, வரணி, திக்கம் ஆகிய வடிசாலைகளில் எமக்கு தரவேண்டிய கொடுப்பனவுகள் 20 லட்சம் ரூபாவுக்கும் மேல் உள்ளது. கள்ளை மறு நாள்வரை வைத்திருக்க முடியாது. அவ்வாறு வைத்திருந்தால் எமக்கு தண்டப்பணம் அறவிடப் படும். ஆகவே கள்ளை அந்த நாளிலே விற்க வேண்டிய நிலையில் உள்ளோம். அந்தப் பகுதியில் வீடுகளில் வைத்து கள்ளை விற்பதால் தவறணைகளில் வந்து குடிப்போர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. குறிப்பிட்ட அளவுக்கு மேலதிகமாகப் போத்தலில் கள்ளை அடைக்க வேண்டுமேயானால் நாம் வரி செலுத்த வேண்டும். அதனால் வரையறை செய்ய வேண்டியுள்ளது. ஆகவே எம்மிடம் உள்ள 7 கிளைகளில் கோப்பாய் இராசபாதை கிளையில் மாத்திரம் கள் ஊற்றப் படுவதற்கு இதுவே காரணம் என்று கோப்பாய் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.ரத்தினம் தெரிவித்தார். (4-ரி)





## உடல் நிறையைக் குறைக்கும் வழிமுறைகள்



- ★ உடல் செயற்பாட்டுக்கு ஏற்ற வகையில் உணவை உட்கொள்ளல்.
- ★ பெறுமதியற்ற உணவுவகைகள், அதிக சக்திப் பெறுமானமுள்ள உணவு வகைகளைத் தவிர்த்தல்.
- ★ அதிக இனிப்பு, மாப்பொருள், உணவு வகைகள்ளைத் தவிர்த்தல் நன்று.
- ★ அடிக்கடி உணவு உண்பதைத் தவிர்த்தல்.
- ★ தொலைக்காட்சி பார்த்த வண்ணம், நொறுக்கு தீனிகளை உண்பதை தவிர்த்தல்.
- ★ அதிகளவு மரக்கறி வகைகள், கீரை வகைகள், பழங்களை எடுத்தல்.
- ★ இனிப்புப் பானங்களைத் தவித்தல்.
- ★ அதிக எண்ணெய், கொழுப்பு உணவுகளை தவிர்த்தல்.



*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகரசபை*

### பல்கலை மாணவர்கள் கொலை:
## விரிவான விசாரணை அறிக்கைகளை முன்வைக்க மேல் நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரும், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் தனித்தனியே விசாரணைகளை மேற்கொண்டு அவற்றின் அறிக்கைகளை முன்வைக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுக் கட்டளையிட்டது.
துப்பாக்கிச்சூடு நடத்தி மாணவர்களைக் கொன்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 5 பொலிஸார் விளக்கமறி யலில் இருந்து வருகின்றனர்.
அவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி யாழ்ப்பாண நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. பிணை பற்றிய ஆட்சேபனைக்காக மேல் நிதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் மனு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.
அதன்போதே மேல் நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது. மாணவர்களின் கொலை தொடர்பில் முழுமையான அறிக்கைகளை "யாழ்ப்பாணப் பொலிஸாரும் கொழும்பு குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரும் ஒப்படைக்க வேண்டும். அவற்றைப் பெற்று மன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்று அரச சட்டத்தரணிக்கு மேல் நீதிமன்று கட்டளையிட்டது.
பிணை மனு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் குளப்பிட்டிச் சந்தியில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி இரவு கொலை இடம்பெற்றது.
மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 3ஆம் வருட கலைப் பீட மாணவர்களான விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகிய இரண்டு மாணவர்களும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர். (4-12)

## முன்னேற்ற அறிக்கைகளை முதல்வர் சமர்ப்பிப்பதில்லை

### உறுப்பினர் சயந்தன் குற்றஞ்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது அமைச்சின் முன்னேற்ற அறிக்கையை இதுவரை சமர்ப்பிக்கவில்லை என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் குற்றம்சாட்டினார்.
வடக்கு மாகாண சபையின் 98 ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. அமர்வில் வடக்கு மாகாண அமைச்சுக்கள் ஆற்றிய செயற்பாடுகள் தொடர்பில் ஆராய சிறப்பு அமர்வு நடத்துவது தொடர்பில் பேசப்பட்டது. இதன் போது சபையில் இருந்த சில உறுப்பினர்கள், வருடாந்தம் வரவு செலவுத்திட்டத்தில் அனைத்துத் திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டு விவா திக்கப்படுகின்றன. அவ்வாறிருக்கையில் சிறப்பு அமர்வு தேவைதானா? என்று கருத்துக்களைப் பதிவு செய்தனர்.
அதன்போது ஆளும்கட்சி உறுப்பினர் சயந்தன் மேலும் தெரிவித்ததாவது: "வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரின் வசமுள்ள அமைச்சுக்கள் தவிர்ந்த ஏனைய அமைச்சுக்கள் வருடாந்தம் தங்களது அமைச்சுக்களின் முன்னேற்ற அறிக்கையைக் கடந்த மூன்று வருடங்களாகச் சமர்ப்பித்து வருகின்றன. ஆனால் முதலமைச்சர் மட்டும் தனது அமைச்சுக்களை பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை தனது அமைச்சு சார்ந்த முன்னேற்ற அறிக்கை எதனையும் சமர்ப்பிக்கவில்லை" என்றார். (4-8)

## கழிவுமுகாமைத்துவம், டெங்குக்கட்டுப்பாடு குறித்து மைத்திரியுடன் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடக்கு உட்பட நாடு முழுவதும் கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு கட்டுப்பாடு குறித்து உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுக்கும் மாகாண அரசியல் தலைவர்களுக்குமான செயலமர்வு எதிர்வரும் 17ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறும்.
இதற்கான ஏற்பாடுகளை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டுள்ளார். நாடு முழுவதும் உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புடையதும் முக்கிய பிரச்சினையாக உள்ளதும் தீர்வு காணப்படவேண்டியதுமான கழிவுமுகாமைத்துவம், டெங்குக் கட்டுப்பாடு குறித்து மூன்று பிரிவுகளாக எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இந்தச் செயலமர்வு இடம்பெறும். இதற்கான ஒழுங்குகளை மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எச்.ரி. கமால்பத்மசிறி மேற்கொண்டுள்ளார். இதேவேளை நாடு முழுவதும் சகல தலைமைச் செயலாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளர்கள், உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள், உள்ளூராட்சி செயலாளர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். (4-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையான அதிகாரிகளை அரசு பாராட்டுவது அவசியம்

## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை07

இன, மத பக்கச்சார்பற்ற, ஊழல் மற்றும் லஞ்சம் போன்றவற்றை சார்ந்திராத சிறந்த அரச ஊழியர்களை இந்த நல்லாட்சி அரசு தட்டிக்கொடுத்துப் பாராட்டுவதோடு அவர்களுக்குரிய சிறந்த அங்கீகாரத்தையும் வழங்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

லஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளத் திருத்தம் தொடர்பான விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் நாட்டில் லஞ்சம், ஊழல் என்பன அதிகரித்து காணப்பட்டன. எனினும் தற்போது நல்லாட்சியில் லஞ்சம், ஊழல் செய்யும் அரச ஊழியர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கில் நல்ல நிர்வாகம் தொடர்ச்சியாக நிலவி வருவதற்கு நல்லாட்சியின் சிறந்த செயற்பாடும் காரணம். தற்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை மணல் வியாபாரம் அங்கு பிரதான தொழிலாக காணப்படுகின்றது.

எனினும் சிறு அளவிலான தூர அடிப்படையில் குறித்த மணல் இருவேறு விலைகளுக்கு விற்கப்படுகின்றது.

ஒரு பிரதேசத்தில் 12,000 ரூபாவுக்கு விற்கப்படும் அதே அளவிலான மணல் மற்றுமொரு பிரதேசத்தில் 25,000 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இதற்கு அந்தப் பிரதேசத்தில் நிறைந்து காணப்படும் லஞ்சம், ஊழல் குறித்த செயற்பாடுகளே காரணம்.

குறித்த நல்லாட்சி அரசு மக்களை வளர்க்கின்ற கூட்டான நிர்வாக மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது அதிகளவிலான மதுபான உற்பத்திச்சாலைகள் குறிப்பாக 58 இற்கும் மேற்பட்ட மதுபானச் சாலைகள் காணப்படுகின்றன.

இந்த மதுபான உற்பத்திச் சாலைகளைக் கட்டுவதற்கு அனுமதி தந்தது யார் என்பதை நான் இந்த இடத்தில் விநயமாக கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைய காலத்தில் ஊழல்வாதிகள், அரசியல்வாதிகளைத் தங்களது காப்பரண்களாகக் கொண்டு மக்களை ஏமாற்றுகின்றனர். பணம் பாதாளம் மட்டும் பாயும் என்பதற்கிணங்க ஊழல்வாதிகள் தப்பித்து விடுகின்றனர்.

இவ்வாறான ஊழல்வாதிகளை நல்லாட்சி அரசு கண்டுபிடித்து அவர்களை மாற்றம் செய்ய முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (த-ய)

# அமைச்சுக்களுக்கு ஒதுக்கிய ரூ. 6,893 கோடி நிதி தேக்கம்

## நாடாளுமன்ற அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஜூலை07

முதல் மூன்று காலப் பகுதிக்காக 51 அமைச்சுக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 6893 கோடி ரூபா பணம் செலவிடப்படவில்லை என நாடாளுமன்றுக்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியே இவ்வாறு பயன்படுத்தப்படவில்லை.

அத்துடன் பாதுகாப்பு அமைச்சுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலும் 1010 கோடி ரூபா செலவிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், சுகாதார அமைச்சு 663 கோடி ரூபாவையும், கல்வி அமைச்சு 752 கோடி ரூபாவையும், உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு 420 கோடி ரூபாவையும், மேல் மாகாண மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு 439 கோடி ரூபாவையும் செலவிடவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு 201 கோடி ரூபாவையும், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு 360 கோடி ரூபாவையும், நிதி அமைச்சு 32 கோடி ரூபாவையும் செலவிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (த-ய)

Galaxy Star

வெற்றி வாரம் 174 திகதி 2017.07.05

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்

07 11 41 48 55

10 19 28 39

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி

ரூ. 2, 935, 780/-

2017.07.09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும். வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஐரோப்பிய STUDENT விசா

*Medicine *Engineering *Business Management

* Language Studies * Hospitality & Tourism

*IT & many more...

- NO Need IELTS
- NO Age Limit
- NO Need Sponsor
- No Need Bank Balance

2017 September Intake now on

Contact : EURO UNI

No. 44, Vajira Road, Colombo - 04

email : eurounilk@gmail.com

Phone - 077 4796 483

# மருந்துவகைகளை உள்ளூரில் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை07

இலங்கையில் 23 மருந்து உற்பத்திச்சாலைகள் நிறுவப்பட உள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச மருந்துப் பொருள் கூட்டுத்தாபனத்துக்காக மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கே இவ்வாறு 23 உற்பத்திச்சாலைகள் நிறுவப்பட உள்ளன.

மருந்துப் பொருள் உற்பத்தி தொடர்பில் 23 நிறுவனங்களுடன் 33 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட உள்ளன. இந்த நிறுவனங்களுடன் எதிர்வரும் 11ஆம் திகதி உத்தியோகபூர்வமாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளது.

மருந்துப் பொருள் உற்பத்திசாலைகளை அமைப்பது தொடர்பில் சுகாதார அமைச்சர் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

ஹொரனை, களுத்துறை, கொக்கல மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் இந்த மருந்துப் பொருள் உற்பத்திச் சாலைகள் நிறுவப்பட உள்ளன. இந்த மருந்துப் பொருள் உற்பத்திச்சாலைகளின் ஊடாகச் சுமார் 2000 வேலை வாய்ப்புக்கள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உள்நாட்டு ரீதியில் மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் இறக்குமதி செய்வதனால் ஏற்படும் 45 பில்லியன் ரூபா செலவைத் தவிர்க்க முடியும் எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு நிறைவில் இலங்கைக்குத் தேவையான மருந்துப் பொருள்களில் 75 வீதமான மருந்து வகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக் கூடிய சாத்தியம் உண்டு என அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

(த-ய)

வீடு வாடகைக்கு

பிறவுண் வீதி அரசடியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்களுக்கு உகந்தது.

076 636 9256

விற்பனைக்கு

கிளிநொச்சி வட்டக்கச்சியில் ஆறுமுகம் வீதியில் 2 ஏக்கர் மேட்டுக்காணி தென்னங்காணியில் 3 அறை புதிய வீடு கிணறு 3 ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்குண்டு.

071 531 5500

வருடாந்த பொங்கல் விழா

10.07.2017 - 11.07.2017

மேற்படி விடயம் தொடர்பாக கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் விடத்தல் விநாயகர், காவாக்குளம் வைரவர் ஆலயங்களின் வருடாந்த பொங்கல் விழா நடைபெறவுள்ளதால் அனைத்து உபயகாரர்கள், அடியார்களையும் வருகை தந்து இறைவனின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

01. விடத்தல் விநாயகர் ஆலயம் - 10.07.2017 திங்கட்கிழமை.
02. காவாக்குளம் வைரவர் ஆலயம் - 11.07.2017 செவ்வாய்க்கிழமை.

தொடர்புகளுக்கு- தலைவர் :- 077 246 3027

செயலாளர் :- 077 465 9877

ஆலய பரிபாலன சபையினர்.

# Invitation for Bids (IFB)
# District Secretariat, Jaffna.

01. The Chairman Department Procurement Committee (DPC)on behalf of the District Secretariat, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for **"Installation of Ice Plant and cold storage, Ice crusher, 60A 3 Phase main Box"** an estimated cost of Rs.3.49 Million excluding VAT.

02. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).

03. Interested eligible bidders may obtain further information fromDistrict Planning Secretariat, District Secretariat, Jaffna Tel. No:-021-2222427, 021 222 0637 Email- ddpdpsjaffna@gmail.com and view the Bidding Documents, free of charge at the District Planning Secretariat, District Secretariat, Jaffna duringoffice hours from 09.00 hrs to 15.30 hrs

04. Qualification requirements include: possessing the minimum 3 years experience in selling and having island wide maintenance in the particular brand and field. Additional details are provided in the bidding documents.

05. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders **from Director Planning, District Planning Secretariat, District Secretariat, Jaffna 07th July 2017 until 27th July 2017 from 09.00 hrs to 15.00 hrs** on the submission of a written application and upon a payment of non refundable fee of Rs 1,500/= the payment method will be cash or bank draft drawn in favour of **District Secretary, Jaffna**

06. Bids must be delivered to the address given below on or before **28th July 2017, 10.30 hrs** bid number must be written on the top of the envelop. Late bids will be rejected. Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend at District **Secretariat, Kandy Road,Jaffna.** Immediately after closing of bids, All bids must be accompanied by a bid security of **Rs 34,900/= remain valid up to 25.11.2017**

07. Pre-bid meeting will be held at 10.30 hrs on 20.07.2017 at District Secretariat, Jaffna

08. The address referred to above is **District Secretariat, Kandy Road , Jaffna.**

**N.Vethanayahan,**
**Govt. Agent/District Secretary,**
**District Secretariat,**
**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனைகளை ஏற்றால் மட்டுமே இந்திய மீனவர் படகுகள் விடுவிப்பு

## கொழும்பு உறுதி; வடக்கு மீனவர்களுக்கு ஒத்துழைப்பு

ஓம் விராட் விஸ்வப்பிரம்ம நமஹ

ஓராண்டு எம் நினைவில்....



மலர்வு
10 . 01 . 1934

உதிர்வு
18 . 06 . 2016

அமரர் சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம்

திதி: வளர்பிறை சதுர்த்தசி

ஓர் ஆண்டு ஆனதப்பா ஓயவில்லை எம் துயரம்
மணி ஐயா மறைந்ததனால் எம் மலரின் முகத்தில் வாட்டமப்பா
இத்தனை அவசரமாய் உத்தமரே ஏன் சென்றீர்
இவ்வுலகில் உம் கடமை முடிந்ததென்று சென்றீரோ
நல்லவராய் நம் வீட்டு காவலனாய்
நல்லதொரு கணவனாய் குடும்பத் தலைவனாய்
நாம் வாழ வழிகாட்டி எமை விட்டு வெகு விரைவில்
ஏனப்பா சென்று விட்டீர் உங்கள் ஆத்மா சாந்தி அடைந்திட
அனுதினமும் வேண்டுகின்றோம்

103/23, முருகமூர்த்தி வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

கொழும்பு, ஜூலை 7

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு கைப்பற்றப்பட்ட இந்தியப் படகுகளில் ஒன்றையாவது ஆட்சி மாற்றத்தின் பின் விடுவிக்கவில்லை எனச் சபையில் சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர, இலங்கை அரசு முன்வைத்துள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே படகுகளை விடுவிப்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் திருத்தச் சட்டமூலத்தை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

சட்டவிரோதமான மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கடற்றொழில் அமைச்சர் என்ற வகையில் நாங்கள் முன்னெடுத்துள்ளோம். கடல் வளத்தைப் பாதுகாத்து எதிர்காலத்துக்கு வழங்கவேண்டிய பொறுப்புள்ளது.

எனவே, தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைத் தடைசெய்ய் இறுக்கமான சட்டங்களை செயற்படுத்துகிறோம். டைனமற் உபயோகித்து மீன்பிடிக்கும் முறை மிகவும் மோசமானது. அது எமது மீன் வளத்தையே இல்லாமல் செய்து விடுகின்றது. இந்தமுறையில் மீன்பிடிப்பது தண்டனைக்குரிய குற்றமாக இருந்தாலும், அதற்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை மக்களுக்கு அச்சத்தைத் தருவதாக இல்லை.

எனவே, டைனமற் உபயோகித்து மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக வெடி பொருள் உபயோக குற்றச்சாட்டின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மற்றும் கடற்படைக்கு நாங்கள் ஆலோசனை வழங்கியுள்ளோம். குறித்த சட்டத்தின் மூலம் கடுமையான தண்டனை வழங்கி குற்றச் செயல்களைக் குறைத்துக் கொள்ள முடிந்துள்ளது.

மீன்பிடிப்பதற்கு வரையறைகள் விதித்துள்ளமையால் அதிகமான மீன்களைப் பிடிக்க முடியாத நிலைக்கு மீன்வர்கள் தள்ளப்பட்டுள்ளனர் எனக் கூறுகின்றனர். போதுமான அளவு மீன்பிடிப்பதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்துள்ளோம். மீன்வளத்தை அழிவடையாது பாதுகாத்துக் கொள்ளவே வரையறைகள் விதித்துள்ளோம். இதனால் எம்மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்கின்றோம். 'பொட்டம் ட்ரோலிங்' முறையை இந்திய மீனவர்களே அதிகம் பயன்படுத்துகின்றனர். இது எமது மீன்வளத்தை மிகவும் மோசமான முறையில் பாதிக்கின்றது.

வரலாற்றில் முதன் முறையாக 42 வருடங்களுக்குப் பின்னர் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் இலாபமடையும் நிறுவனமாக மாறியுள்ளது.

மீன்பிடித்துறையில் இந்திய மீனவர்களின் தலையீடு நாங்கள் முகம்கொடுத்த மிகப்பெரிய சவாலாகும். சிலர் இதனை இந்த ஆட்சி வந்த பின்னர் ஏற்பட்ட ஒரு பிரச்சினையாகச் சோடிக்கப் பார்க்கின்றனர். ஆனால், 30 வருடங்களாக இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்பில் வந்து மீன்பிடித்தனர். அப்போது எவராலும் அதனைத் தடுக்க முடியவில்லை. இருப்பினும் இந்த விடயத்தில் நாங்கள் சிறந்த முன்னெடுப்புக்களைச் செய்தோம் என்பதைப் பயமின்றி கூறுகின்றோம்.

மிகவும் துன்பமான வாழ்க்கையைக் கடத்தும் வடக்கு மீனவர்கள் இன்னும் முறையான வருமானம் பெறாமல் கஷ்டத்திலேயே உள்ளனர். அவர்களுக்கு அதிகமான வசதிகளை செய்து கொடுக்கவேண்டும் என அரசு என்ற ரீதியில் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய நாங்கள் தவறியுள்ளோம். இருந்தாலும் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மீனவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களைச் செய்து கொடுத்து அதிகமான மீன்களை அப்பகுதியிலிருந்து பிடிப்பதற்கு விசேட திட்டமொன்றை வகுத்துள்ளோம் - என்றார். (த)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின்
இயக்குநரும் பிரபல சமூகத்
தொண்டருமான கணேஸ்வரன் வேலாயுதம்
தம்பதிகளின் புதல்வன்

சிவன் கணேஸ்வரன்
வேலாயுதம்



எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
எம்மை விட்டுப் பிரிந்து ஈராண்டுகள் சென்றாலும்
கடலலைகள் போல் ஓயாது வரும் உங்கள் ஞாபகங்கள்
எங்கள் இதயத்தை வாட்டுதய்யா! தாங்க முடியாத
இதய வலிகளுடன் உங்கள் பெயரில் கோயில் கட்டி'
நாங்கள் அனுதினமும் இதய அஞ்சலி செலுத்துகின்றோம்.

பிரிவுத் துயரால் துன்பப்படும்:

கணேஸ்வரன் வேலாயுதம் குடும்பம், உற்றார், உறவினர், சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் அபிமானிகள், சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் பிராந்திய இணைப்பாளர்கள், யாழ்ப்பாணம், நெல்லியடி, கேகாலை, சித்தாண்டி, மாத்தளை, கண்டி ஆகிய பிராந்திய சிவன் வலது குறைந்தோர் நிலையத்தில் சிகிச்சை பெறும் சிறார்கள், அங்கு பணிபுரியும் ஊழியர்கள் .

சிவன் அறக்கட்டளை நிலையம்,
நெல்லியடி.

தோற்றம்
01.12.1995

மறைவு
07.07.2015

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு குறித்து சிலரால் தவறான தகவல்

## அமைச்சர் அர்ஜுன விசனம்



கொழும்பு, ஜூலை07
புதிய அரசமைப்புச் சட்டம் குறித்து பல்வேறு கதைகளைப் பேசுவோர் அந்தச் சட்டத்தின் ஒரு காகிதத்தைக் கூடப் பார்த்திருக்கமாட்டார்கள் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் இடரால் பாதிக்கப்பட்ட பௌத்த விகாரைகளுக்கு உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புச் சட்டம் தொடர்பான ஒரு காகிதம் கூட இன்னும் வெளியிடப்படவில்லை. எதிர்க்கட்சியில் இருக்கும் பலர் ஊடகங்களில் ஏதேனும் ஒன்றைக் கூறித் தீயை மூட்ட விரும்புகின்றனர்.

அப்படி செய்தால் அவர்களின்புகைப்படத்துடன்அரைப் பக்கத்தில் செய்தி வெளியாகும். இவர்கள் இப்படிதான் அரசியல் செய்ய விரும்புகின்றனர். இந்தக் கீழ்த்தரமான அரசியலை நாட்டில் ஒழித்து கட்டவேண்டும்.

நாட்டின் அரசமைப்புச்சட்டத்தில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமைகுறைக்கப்படும்என்று எந்த இடத்திலும் நாங்கள் பேசவில்லை.

அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் என்ற வகையில் அப்படி எங்கும் பேசப்படவில்லை. பேசப்படவும் மாட்டாது என்பதை உறுதியாக கூறுகின்றேன்.

எனினும் சிலர் அரசமைப்புச் சட்டம் பற்றி தவறான கதைகளைக் கூறித் தீயை மூட்ட முயற்சித்து வருகின்றனர். பௌத்த மதத்தை மூன்றாவது இடத்திற்குக் கொண்டு செல்லப் போகிறார்கள் எனக் கூறுவதை நான் கேட்டேன். இவை முற்றிலும் அரசியல் ரீதியான பேச்சுக்கள். சிங்கள பௌத்தர்களைத் தூண்டிவிடும் தந்திரம். பௌத்த மதத்திற்கு இருக்கும் முன்னுரிமையைப் பாதுகாக்கும் தேவையே எமக்குள்ளது.

பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் அதே வேளை ஏனைய மதங்களுக்கும் உரிமைகள் வழங்கப்படும். அதில் எந்த தவறையும் நான் காணவில்லை.

அரசில் அங்கம் வகிக்கும் சகல தலைவர்களும் அரசமைப்புத் திருத்தம் குறித்து உணர்வோடு உள்ளனர். முஸ்லிம், தமிழ்த் தலைவர்கள் பௌத்த மதத்திற்கு வழங்கும் முன்னுரிமையைக் குறைக்கவேண்டும் என என்றுமே கூறுவதில்லை. இதுதான் நாட்டுக்குத் தேவை. நாட்டை வெள்ளையர்களிடம் இருந்து மீட்டபோது சிங்கள பௌத்த தலைவர்கள் மாத்திரம் அதில் பங்களிப்புச் செய்யவில்லை. தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவத் தலைவர்களும் பங்களிப்புச் செய்தனர். சகல இன மற்றும் மதங்கள் இணைந்து கைகோர்த்து இந்த வெற்றியை பெற்றெடுத்தனர்.

பௌத்த மதத்திற்கு வழங்கும் முன்னுரிமையை குறைக்க முயற்சித்தால நான் அரசில் இருந்து வெளியேறி விடுவேன். மதத்தை அரசியல் காரணங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது - என்றார். (த-ய)

# துறைமுக நகரத் திட்டத்துக்கான நிலமீட்புப் பணி 45 வீதம் பூர்த்தி



கொழும்பு, ஜூலை 7
கொழும்பு துறைமுக நகரத் திட்டத்துக்காகக் கடலில் இருந்து நிலத்தை மீட்கும் நடவடிக்கையில் 45வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என சிஎச்ஈசி போர்ட் சிற்றி கொழும்பு நிறுவனத்தின் தலைமை விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அதிகாரி லியாங் தோ மிங் தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் உள்ள சீனத் துறைமுகப் பொறியியல் நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்று தூர் வாரும் கப்பல்களைக் கொண்டு நிலப் பரப்பைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலத்தை மீட்கும் நடவடிக்கைகள் 2019ஆம் ஆண்டு நிறைவடையும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆரம்ப உட்கட்டமைப்பு வேலைகள் மற்றும் பாதைகள் அமைப்பு வேலைகள் 2020 இல் நிறைவடையும். 2021 இல் கடற்கரை மரினா மற்றும் மத்திய பூங்கா என்பன தொடர்பான பணிகள் நிறைவு செய்யப்படும். அனைத்துலக நிதி நிலையத்தை அமைக்கும் பணிகள் 2023 இல் நிறைவடையும். துறைமுக நகர கட்டுமானப் பணிகள் அனைத்தையும் 2026ஆம் ஆண்டு முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தெற்காசியாவில் வாழ்வதற்கு மிகச்சிறந்த நகராகக் கொழும்பை மாற்றுவதில் இந்த திட்டத்தின்போது கவனம் செலுத்தப்படும்.

ஆரம்பத்தில் 233 ஹெக்ரேயரில் அமைக்கத் திட்ட மிடப்பட்ட துறைமுக நகரத் திட்டம் தற்போது 269 ஹெக்ரெயராக விரிவாக்கப்பட்டுள்ளது. இங்கு 83ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

துறைமுக நகரத்தில் இருந்து பிரதான நெடுஞ்சாலைக்கு சுரங்கப்பாதை வழியாகவும், மேம்பாலம் வழியாகவும் இரண்டு இணைப்புகள் ஏற்படுத்தப்படும்.

30 நிமிடங்களில் விமான நிலையத்தை அடைவதற்கும் பாதை அமைப்புகள் உருவாக்கப்படும் - என்றார். (த-ய)

# செம்மறி ஆடு வளர்ப்பை விருத்தி செய்ய ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 7
இலங்கையில் செம்மறி ஆடு வளர்ப்பு தொழிற்துறை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

முதற்கட்டமாகத் தேசிய மிருக வளங்கள் அபிவிருத்திச் சபைக்குச் செம்மறி ஆடுகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சர் பீ.ஹரிசனால் இது தொடர்பாக முன்வைக்கப்பட்டயோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய 25 செம்மறிக் கடாக்களும், 100 செம்மறி மறி ஆடுகளும் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

இதற்காக 2017 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் ரூபா நிதி பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ய)

# குப்பைகள் கொட்டுவதை தடுத்தால் நோய்கள் பரவி மக்கள் உயிரிழக்க நேரிடும்

## தலைமை அமைச்சர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை07
குப்பை போடுவதைத் தடை செய்வதனால் மக்கள் நோயினால் உயிரிழக்க நேரிடும் என முதன்மை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நகரக் கழிவுகளை அகற்றுவதற்குப் பொருத்தமான இடமில்லை. இதனால் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதற்காக நிலையான ஓர் இடத்தைப் பெறுதுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம். குறித்த பகுதிகளுக்குப் பொருத்தமான இடங்களில் குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கழிவகற்றல் மற்றும் கழிவு முகாமைத்துவத்திற்காக இயந்திர சாதனங்கள் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கடன் மலையைப் போன்றே குப்பை மலையொன்றையும் மீதம் வைத்து சென்றுள்ளனர். ராஜபக்சக்களைப்போன்று பிரச்சினைக்குப் பயந்து நாம் ஓடப் போவதில்லை.

நீதிமன்ற உத்தரவுகளினால் கொழும்பின் கழிவுகள் அதிகரிக்கக் கூடும். இவை அத்தியாவசியத் தேவைகளாகும். இவற்றுக்கு எவ்வாறு உத்தரவு பிறப்பிப்பது?

காரணிகளைக் கண்டறிந்து அனைத்து தரப்பினையும் அழைத்து விளக்கம் கோரி நீதிமன்றம் உத்தரவுகளைப் பிறப்பிப்பது பொருத்தமாக அமையும்.

கழிவற்றல் மிகவும் முக்கியமான ஓர் பிரச்சினையாகும். கழிவுகளை அகற்றாவிட்டால் மக்கள் நோயினால் மரணிக்கக் கூடும் - என்றார். (த-ய)

## மரண அறிவித்தல்கள்



### சாள்ஸ் விமலேந்திரன் அஸ்பெரி

**(ஓய்வுபெற்ற விமானப்படை உத்தியோகத்தர்)**

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாள்ஸ் விமலேந்திரன் அஸ்பெரி 03.07.2017 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றொபேட் சாமுவேல் கிருபைநாயகம் அஸ்பெரி - இசபெல் கிருபாமணி அஸ்பெரி தம்பதிகளின் அன்பு மகனும், நவரட்ணம் லின்டா தேவ மனோகரி அஸ்பெரியின் கணவரும்,கொலின், ரஞ்சித்குமார் அஸ்பெரி, றோய் அஜித்குமார் அஸ்பெரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜன் அஸ்பெரி, காலஞ்சென்ற மகான் அஸ்பெரி மற்றும் பாலு அஸ்பெரி, IVY சோமசேகரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிருந்தா, சிறாணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஆலய வீதி, அராலி வடக்கில் உள்ள பாலு அஸ்பெரி இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (08.07.2017) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லடக்க ஆராதனை இடம்பெற்று பூதவுடல் அராலி திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆலய வீதி,**
**அராலி வடக்கு.**

தகவல்:
**அஸ்பெரி குடும்பத்தினர்.**

**0212051514**



### செல்வி தயாபரி கணபதிப்பிள்ளை

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கு மடத்தடி மேற்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தயாபரி கணபதிப்பிள்ளை 04.07.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மண்டைதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சூரியகுமார் (ஒட்டங்குளம்), ஏகாம்பரம் ( சந்திரன் - நாகபடுவான்), வியாகரத்தினம் (மண்டைதீவு), திலகன் (நெடுங்கேணி), தயாளினி (பிரான்ஸ்), சாந்தினி (சாவகச்சேரி - மடத்தடி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனலட்சுமி, ஶ்ரீவதனராணி, செல்லநாயகி, செல்லநாயகி, செல்வராசா (பிரான்ஸ) ஆகியோரின் அன்பு மைத்துனியும், விதுசன் (பிரான்ஸ்), யதுஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.07.2017 ஞாயிற்றுக்கிழமை மடத்தடி மேற்கு வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மடத்தடி மேற்கு வீதி.**
**சாவகச்சேரி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 641 8001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# திருடரைக் காக்கும் அரசு மீது மைத்திரியும் கடும் அதிருப்தி

## சபையில் சுட்டிக்காட்டினார் அனுரகுமார



கொழும்பு, ஜூலை 6
திருடர்களை அரசு பாதுகாத்து வருகின்றது என்றும், இதனால் அமைச்சர்கள் மீது அரச தலைவர் அதிருப்தியில் இருக்கின்றார் என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக் குழு பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் படிகளில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அமைச்சரவைக் கூட்டத்தின்போது, திருடர்களைப் பிடிப்பதற்காகச் சட்டமா அதிபர் திணைக்களத்தையும், பொலிஸ் திணைக்களத்தையும் தனக்கு 3 மாதங்களுக்கு வழங்குமாறு அரச தலைவர் கோரிக்கை விடுத்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.
இவ்விரு திணைக்களங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களின் செயற்பாடுகள் மீது திருப்தி இல்லை என்பதையும், அவர்கள் திருடர்களைப் பாதுகாக்கின்றனர் என்பதையுமே அரச தலைவரின் கருத்து வெளிப்படுத்துகின்றது.
எனவே, இவ்விரு அமைச்சுகளையும் (நீதி, சட்டம் ஒழுங்கு) அரச தலைவர் தனக்குக் கீழ் கொண்டுவரவேண்டும். அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இதற்கு இடமிருக்குமோ தெரியவில்லை.
எது எப்படியோ திருடர்களை இந்த அரசு பாதுகாத்து வருகின்றது. ஊழல்களைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எதுவும் இல்லை. திருடர்களுடன் அமர்ந்திருப்பது திருடர்களைப் பாதுகாப்பதற்கு ஒப்பான செயலாகும் - என்றார். (து)

# அடிமட்டத் தொண்டர்கள் சு.கவின் பிளவால் பாதிப்பு

*அமைச்சர் துமிந்த கவலை*



கொழும்பு, ஜூலை06
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் காணப்படும் அரசியல் ரீதியான பிளவு காரணமாகக் கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்களே அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகச் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
எப்பாவளைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் செயற்பாடுகள் காரணமாகச் சுதந்திரக் கட்சியினர் அசௌகரியத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.
கட்சியின் தலைமையை மகிந்த ராஜபக்ச, அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்துவிட்டு, தற்போதுஅதனைக்கொண்டு நடத்தவிடாமல் இடையூறுகளை ஏற்படுத்திக் கட்சியைப் பிளவுபடுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். இதன் காரணமாகக் கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றனர் - என்றார். (த-ய)

# இடம்பெயர்ந்த வாக்காளர்களை விரைவில் குடியமர்த்தவேண்டும்

*அமைச்சர் ஹக்கீம் சபையில் கோரிக்கை*



கொழும்பு, ஜூலை 7
வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் கால எல்லை நான்கு வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, அந்தக் காலப் பகுதிக்குள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான சிறப்பு ஏற்பாடுகள் சட்டவரைவின் இரண்டாம் வாசிப்புமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு-கிழக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு வேறு பகுதிகளில் குடியிருப்பவர்களுக்குத் தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமை இதன் மூலம் உறுதியாகின்றது. உயர்நீதிமன்றத்தின் நிபந்தனையின்படி இதன் ஆயுள்காலம் 4 வருடங்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கவலையை ஏற்படுத்துகின்றது.
இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்குரிய பொறிமுறையை அரசு உரியவகையில் இயக்காததன் காரணமாகவே இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன எனச் சிலர் குறிப்பிடுகின்றனர். இதுவும் நிராகரிக்க முடியாத கருத்தாகத்தான் இருக்கின்றது.
ஆயுதக் கலாசாரத்தினால் வடக்கு-கிழக்கைப் பூர்விகமாகக் கொண்ட மக்கள் தமது சொந்த நிலங்களை விட்டு நாட்டின் வேறு பல மாவட்டங்களுக்குச் சென்றிருக்கின்றார்கள். குறிப்பாக வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் ஆயிரக்கணக்கானவர்கள் தமது சொந்த நிலத்திற்கு மீண்டும் திரும்பும் எதிர்பார்ப்புடன் புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்றார்கள்.
ஐ.நா. சாசனத்தின் பிரகாரம் தமது சொந்த நிலத்திற்கு திரும்புகின்ற உரிமை வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே இடம்பெயர்ந்துள்ள மக்களை மீண்டும் சொந்த இடத்தில் குடியேறுவதற்கான நிலைமைகளை மேற்கொள்வதோடு அவர்களின் வாக்குரிமை தொடர்பில் நெகிழ்வுப்போக்கினை கடைப்பிடிக்கவேண்டும் - என்றார். (த-ய)

# 100 இடர்காலத் தங்குமிடங்கள் அமைப்பதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, ஜூலை07
அவசரகால நிலைமைகளின்போது இடர்களுக்கு உள்ளான பொதுமக்களைத் தங்க வைப்பதற்காக 25 மாவட்டங்களுக்கும் 100 வதிவிட நிலையங்களை நிர்மாணிக்க அரசு தீர்மானித்துள்ளது.
கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
25 மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் ஒரே நேரத்தில் 100க்கும் 200க்கும் இடைப்பட்ட தொகையினரைத் தங்க வைப்பதற்காக 100 வதிவிட நிலையங்கள் நாடு முழுவதும் நிர்மாணிக்கப்படவுள்ளன.
இடர் நிலையங்களாகக் குறித்த நிலையம் பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் அந்தக் கட்டடம் மற்றும் வளங்களைப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதற்கு உகந்த செயற்றிட்டமொன்றை தயாரிப்பதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (த-ய)

# இனங்களிடையே குழப்பம் ஏற்பட அனுமதியாது அரசு

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 7
இந்த நாட்டில் இனவாதத்தைத் தூண்டி, இனங்களுக்கிடையில் குழப்பங்களை ஏற்படுத்த இந்த நாட்டு அரசு ஒருபோதும் அனுமதிக்காது எனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடல், காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
ஐ.தே.கவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எம்.எஸ்.ஸாபியின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.
அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டில் சில இன ரீதியான குழுக்கள் இனவாதத்தைத் தூண்டி இனமோதலை உருவாக்க முயற்சிக்கின்றன. அதற்கு யாரும் துணைபோகக்கூடாது. இந்த நாட்டை இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் ஒன்றுபட்டுக் கட்டியெழுப்பவேண்டும். அதற்காகவே இந்த நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்டுள்ளது..
நாட்டில் பன்னாட்டுச் சக்திகள் குழப்பத்தை ஏற்படுத்தி, இந்த நாட்டைக் குழப்பநிலைமைக்குக் கொண்டுசெல்ல முயற்சித்தபோது இந்த நாட்டில் தேசிய அரசு உருவாக்கப்பட்டது.
கடந்த30வருடகாலப்போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மட்டக்களப்பிலும் அபிவிருத்திகள் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார் (த-ய)

# முறையான பொருளாதார கொள்கை இங்கு இல்லை

*எந்த அரசுமே அதனைச் செய்யவில்லை என்று ஜே.வி.பி. குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜூலை 06
நாட்டை ஆட்சி செய்த எந்த அரசும் நாடு சொத்துக்களைச் சம்பாதிக்கும் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.
நாட்டை முன்னர் ஆட்சி செய்த அரசுகளைப் போன்று தற்போதைய அரசுக்கும் பொருளாதாரக் கொள்கை இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
அநுராதபுரம் பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.
விவசாயத்திணைக்களமோ, கைத்தொழில்திணைக்களமோ நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தினார். (த-ய)



# நுவரெலியாவிலும் பேரீச்சை

கொழும்பு, ஜூலை 7
அதிக வெப்பமான காலநிலையில் வளரும் பேரீச்சை மரங்கள் அதிக குளிர்ப் பிரதேசமான நுவரெலியாவிலும் வளர்ந்துள்ளன.
தலவாக்கலைப் பகுதியில் இந்த மரம் வளர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
தலவாக்கலைப் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள இந்த மரத்தில் தற்போது 5 குலைகளில் பேரீச்சம் பழங்கள் காய்த்துள்ளன. அவற்றில் 2 குலைகள் பொலிஸ் அதிகாரிகளினால் அறுவடை செய்யப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது. (த-ய)

# நரகமாகக் காட்சியளிக்கும் கறுவாத்தோட்ட பொலிஸ்

## அமைச்சர் சாகல கடும் விமர்சனம்

கொழும்பு, ஜூலை06
கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையம் தமக்கு ஒரு நரகமாகத் தோன்றுகிறது எனச் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க விமர்சித்துள்ளார்.
கடந்த வெள்ளிக்கிழமை தான் கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையத்துக்கு திடீர்ப் பயணமொன்றை மேற்கொண்டபோது, அங்குள்ள கழிவறைகளிலிருந்து சகிக்கமுடியாத துர்நாற்றம் வீசியதாகவும், இந்தத் துர்நாற்றத்தால் பாதையில் செல்பவர்களும் முகம் சுழிப்பதைக் காணமுடிந்தது எனவும் அவர் கூறினார்.
புதிதாகக் கட்டப்பட்ட கழிவறைகளிலும் சரியான நீர் வசதி இல்லாததால் நிலைமை மிகவும் மோசமாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.
கடந்த 10 வருடங்களாக இந்தப் பொலிஸ் நிலையத்தில் நிலவிவரும் நீர்த்தட்டுப்பாடு பற்றி எந்தவித கவனமும் செலுத்தப்படவில்லை எனத் தெரிவித்த அமைச்சர், பொலிஸ்மா அதிபரை அன்றைய தினமே அங்கு வரவழைத்து தனது அதிருப்தியைத் தெரிவித்ததாகவும் கூறினார். (த-ய)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவத்துக்கு சி.ஐ.டி. தொல்லை கொடுப்பதை அனுமதிக்கவே முடியாது

## போரை வெற்றி கொண்ட படையினருக்கு மதிப்பளித்தல் அவசியம் என்கிறார் அமரவீர



கொழும்பு, ஜூலை 7
போரை வென்று தந்த படையினர் ஊழல் ,மோசடி விசாரணை என்ற பெயரில் சி.ஐடி. யினரால் தேவையில்லாமல் தொல்லைப்படுத்தப்பட்டால் மக்கள் அதற்குத் தகுந்த பதில் வழங்குவர் என்று அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.
போரில் ஈடுபட்ட படையினர் மாத்திரம் திட்டமிட்ட அடிப்படையில் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்ற கோத்தபாய ராஜபக்ஸவின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
1994இல் நாம் ஆட்சியைப் பிடித்ததும் ரணில் விக்ரமசிங்கவைக் கூட்டில் ஏற்றித் தேவையில்லாமல் விசாரித்தோம். சரத் போன்சேகாவைச் சிறையில் அடைத்தோம். இவையெல்லாம் நடந்திருக்கக்கூடாது. இது தொடர்பில் அரசு கொண்டிருந்த நிலைப்பாட்டை விட மாறுபட்ட நிலைப்பாட்டையே மக்கள் கொண்டிருந்தனர்.
ஊழல் மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் இப்போது படையினர் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் உண்மையில் குற்றம் செய்திருந்தால் விசாரிப்பதில் தப்பில்லை. ஆனால் அவர்களைத் தொல்லைப்படுத்துவதற்காக விசாரித்தால் அதை ஏற்க முடியாது. அதற்கு மக்கள் பதிலளிப்பர்.
படையினர் செய்த தியாகத்தால்தான் நாம் இப்போது நிம்மதியாக இருக்கின்றோம். நாட்டை முன்னோக்கி நகர்த்த முடிகின்றது. அவர்களின் தியாகம் அர்ப்பணிப்பு மதிக்கப்பட வேண்டும். அவர்கள் கவனமாக விசாரிக்கப்பட வேண்டும். புலனாய்வு அதிகாரிகள் விசாரிக்கப்படும் போது கவனம் தேவை. அவர்களின் விவரங்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தக்கூடாது.
தப்புச் செய்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் அரசியல் பழிவாங்கலாக எதுவும் நடக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் அரசு உள்ளது. எமது அரசு அரசியல் பழிவாங்கலைச் செய்யவில்லை. புலம்பெயர் தமிழர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் படையினரைத் தண்டிக்கவில்லை - என்றார். (த-3)



## சவூதி அரேபியா- இலங்கை கடற்படைத் தளபதிகள் பேச்சு

கொழும்பு, ஜூலை 7
இலங்கைக் கடற்படைத் தளபதி ரவீந்திர விஜேகுணரத்னவுக்கும் சவூதி அரேபியக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் அப்துல்லா அல் சுல்தானுக்குமிடையில் இடையில் சந்திப்பபொன்று இடம்பெற்றுள்ளது.
நான்குநாள் நாள் உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு சவூதிக்குச் சென்றுள்ள இலங்கைக் கடற்படைத் தளபதி ரவீந்திர விஜேகுணரத்ன சவூதி அரேபியக் கடற்படைத் தளபதியை றியாத் நகரிலுள்ள கடற்படைத் தலைமையகத்தில் சந்தித்தார்.
இந்த சந்திப்பின்போது கடற்படையினருக்குப் பயிற்சி அளிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இரு நாடுகளின் கடற்படைகளுக்கும் இடையில் நிலவும் சுமுக உறவைக் குறிக்கும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (த-ய)

## அமெ. தூதரகத்துக்கு அச்சுறுத்தல்; விசாரணைக்கு ரணில் பணிப்புரை



கொழும்பு, ஜூலை 7
கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுரகத்தின் மீது பயங்கரவாதத் தாக்குதலொன்றை நடத்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் சம்பந்தப்பட்ட ஊடகத்திடம் சிறப்புத் தகவல் எதுவும் இருப்பின் அதைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை தலைமை அமைச்சரிடம் நேரடி கேள்வி பதில் சுற்றின்போது ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல் நடத்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியிருந்த நிலையில், அந்தத் தகவலை அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளதாகத் தெரிவித்த முஜிபுர் ரஹ்மான், இது புனையப்பட்ட செய்தியா என்றும், இது தொடர்பில் விசாரணையொன்று நடத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.
இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க,
உண்மையில் இது தொடர்பில் செய்தி வெளியாகியிருந்ததுடன் (அமெரிக்க) தூதரகமும் அதை நிராகரித்திருந்தது. எனினும், அவர்களிடம் (சம்பந்தப்பட்ட ஊடகத்திடம்) சிறப்புத் தகவல் இருந்ததா என்று எமக்குத் தெரியாது. ஆகவே, அவர்களிடம் தகவல் இருந்தால் அதைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குக் கூறியுள்ளேன் - என்றார். (த)

## மாவடிமும்மாரி துயிலும் இல்லத்திலும் சிரமதானம்

மட்டக்களப்பு, ஜூலை 7
மட்டக்களப்பு பட்டிப்பளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட மாவடிமும்மாரி மாவீரர் துயிலும் இல்லம் நேற்று முன் தினம் புதன்கிழமை அந்தப் பிரதேச மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இதன்போது உயிர்நீத்தவர்களின் நினைவாகப் பொதுச்சுடரேற்றி மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.
மட்டக்களப்பின் படுவான்கரைப் பகுதியில் 2006ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற போரினால் அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்தனர். அந்தப் பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து பின்னர் இராணுவத்தினர் கைப்பற்றினர். இதனால் அங்கிருந்த துயிலும் இல்லம் தகர்க்கப்பட்டிருந்ததுடன், அதை அண்டிய பகுதியில் இராணுவத்தின் முகாமும் அமைக்கப்பட்டிருந்ததாகப் பிரதேச மக்கள் கூறுகின்றனர். சிறிது காலத்தின் பின்னர் இராணுவ முகாம் அகற்றப்பட்டது. துயிலும் இல்லம் பற்றைக்காடுகளால் நிரம்பியிருந்ததாத மக்கள் தெரிவித்தனர்.
புதிய அரசு பொறுப்பேற்ற பின்பு, கடந்த வருடம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உள்ளிட்ட சிலரால், குறித்த துயிலும் இல்லத்தின் சிறு பகுதி துப்பரவு செய்யப்பட்டு சுடரேற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது.
எதிர்காலத்திலும் உயிரிழந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குறித்த பகுதியில் காணப்பட்ட பற்றைக் காடுகள் துப்பரவு செய்யப்பட்டதாகச் சிரமதானப்பணியில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (த)



## டெங்கு நோயாளர் அதிகரிப்பால் வைத்தியசாலைகளில் நெருக்கடி

கொழும்பு, ஜூலை 7
டெங்கு நோயாளர்களின் அதிகரிப்புக் காரணமாக நீர்கொழும்பு நகரில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகளில் நோயாளர்களை அனுமதிக்க மறுத்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
நகரில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகளிலும் டெங்கு நோயாளர்கள் அதிக எண்ணிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் ஏற்பட்டுள்ள இடப்பற்றாக்குறை காரணமாகவே தொடர்ந்து நோயாளிகளை அனுமதிக்க மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதனால் வசதியுள்ள பலர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் பாதிக்கப்பட்டவர்களை அனுமதித்து வருகின்றனர்.
நீர்கொழும்பில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சைப் பெறுகின்ற டெங்கு நோயாளியை, ஒரு தடவை பார்வையிடுவதற்கு வைத்தியர்கள் 2000 ரூபா முதல் 6000 ரூபாவரை பணத்தை அறவிடுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-ய)

## முன்னாள் எம்.பி தங்கத்துரையின் 20ஆம் ஆண்டு நினைவு

மூதூர், ஜூலை 7
திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அ.தங்கத்துரையின் 20வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மூதூர் கிளிவெட்டி மகாவித்தியாலயத்தின் தங்கத்துரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ய-40)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதன் பொருட்டு
நீர் வழங்கலின் புதியதொரு
படிநிலையை மேம்படுத்தும் வகையில்
ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மற்றும்
இலங்கை அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி


**அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களின்**

வழிகாட்டலின் கீழ்
உலர் வலய நகர நீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின்

# மன்னார்

# நீர் வழங்கல் திட்டம்






ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்,
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான
**மாண்புமிகு அல்-ஹாஜ் ரவூப் ஹக்கீம்** அவர்களின்
அழைப்பின் பேரில்
எதிர்க் கட்சித் தலைவர்
**மாண்புமிகு இரா. சம்பந்தன்** அவர்கள்
நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்
**மாண்புமிகு மருத்துவர் திருமதி சுதர்சினி பெர்னாந்துபுள்ளே** அவர்கள்
வட மாகண ஆளுநர்
**கௌரவ ரெஜினோல்ட் குரே** அவர்கள்
வடக்கு மாகாண சபை முதலமைச்சர்
**கௌரவ சி.வி.விக்னேஸ்வரன்** அவர்கள்
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர்
**கௌரவ றிஷாட் பதியுதீன்** அவர்கள்
பாராளுமன்ற உறுப்பினர்கள்
**மாண்புமிகு எஸ். அடைக்கலநாதன்** அவர்கள்
**மாண்புமிகு ஐ. சாள்ஸ் நிர்மலநாதன்** அவர்கள்
பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளுராட்சி சபைஉறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் முன்னிலையில்
ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் (இலங்கை)
**திருமதி. ஸ்ரீ விடோவதி** அவர்களின் முன்னிலையில்
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமர்
**மாண்புமிகு ரணில் விக்ரமசிங்க அவர்களினால்**
2017 ஆண்டு யூலை மாதம் 07 ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு எழுத்தூர் நீர் உள்வாங்கும் நிலையத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும்.

**பயன்பெறும் மக்களின் தொகை**
**59,250**
**செலவிடப்பட்ட தொகை**
**ரூ.மி. 2,200**

- மூதூர் வீதி
- பட்டித்தோட்டம்
- வங்காளை கிழக்கு
- உப்புக்குளம் தெற்கு
- எழுத்தூர்
- பெரியநாவற்குளம்
- உப்புக்குளம் வடக்கு
- சாவற்காடு
- நாகதீவு
- பெரியகடை
- சவுத்பார்
- கள்ளிக்கட்டைகாடு
- பெற்ரா
- சின்னக்கடை
- உயிலங்குளம்
- பனங்கட்டிக்கொட்டு கிழக்கு
- பள்ளிமுனை மேற்கு
- புதுக்குடியிருப்பு
- பனங்கட்டிக்கொட்டு மேற்கு
- பள்ளிமுனை கிழக்கு
- தோட்டவெளி
- எமில்நகர்
- திருக்கேதீஸ்வரம்
- எருக்கலம்பிட்டிமேற்கு
- தாரபுரம் மேற்கு
- வங்காளை
- எருக்கலம்பிட்டிவடக்கு
- தாரபுரம் கிழக்கு
- முருங்கன், செம்மன்தீவு
- எருக்கலம்பிட்டிகிழக்கு
- தாழ்வுப்பாடு
- அடம்பன்
- எருக்கலம்பிட்டிதெற்கு
- வங்காளை வடக்கு
- தோமஸ்புரி
- எருக்கலம்பிட்டிமத்தி
- வங்காளை மேற்கு
- நறுவெளிக்குளம்
- பட்டிம்



**நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு**

**தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிலடி கைவசம்!

## அமெரிக்கா தென்கொரியா கூட்டாக ஏவுகணைச் சோதனை

சியோல், ஜூலை 7
அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம் வரை சென்று தாக்கக்கூடிய ஆற்றல் மிக்க ஏவுகணையை வடகொரியா பரிசோதித்ததைத் தொடர்ந்து அமெரிக்காவும் தென் கொரியாவும் இணைந்து ஜப்பான் கடலில் ஏவுகணை ஒன்றைப் பரிசோதித்திருக்கின்றன.
கண்டம் விட்டுக் கண்டம் பாயும் 'பலிஸ்ரிக்' ரக ஏவுகணையை கடந்த செவ்வாய்க்கிழமை தாம் வெற்றிகரமாகப் பரிசோதித்ததாக வடகொரியா அறிவித்திருந்தது. இதற்குப் பதிலாகவே அமெரிக்கா மற்றும் தென்கொரியா இணைந்து குறித்த ஏவுகணைச் சேதனையை நடத்தியிருக்கின்றன.
"வடகொரியாவின் செயல்பாடு பதற்றத்தை மேலும் அதிகரிப்பதாக இருக்கிறது" என்று விமர்சித்திருக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ரெக்ஸ் டில்லர்சன், "வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்தியை அமெரிக்கா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. உலகை அச்சுறுத்தும் அதன் செயல்பாட்டை நிறுத்த உலக அளவிலான நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் கூறியிருக்கின்றார்.



# 'ஜி-20'இல் பயங்கரவாதம்

ஹம்பார்க், ஜூலை 7
ஜேர்மனிய நகரான ஹம்பேர்க்கில் இன்று 'ஜி-20' மாநாடு ஆரம்பமாகவிருக்கின்றது. இதில் எல்லை தாண்டிய தீவிரவாதம் மற்றும் பருவநிலை மாறுபாடுகள் உள்ளிட்ட விவகாரங்களே முக்கிய விவாதப் பொருள்களாகவிருக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த மாநாட்டில், அமெரிக்கா சார்பில் ட்ரம்ப் முதன் முறையாகப் பங்கேற்கிறார். இதன்போது ரஷ்ய அதிபர் புடின், சில ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேச இருக்கிறார்.
இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே சிக்கிம் விவகாரத்தில் மோதல் போக்கு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மோடியையும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கையும் சந்தித்துப் பேச வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும், இதே மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகளைச் சேர்ந்த தலைவர்களையும் சந்தித்துப் பேச இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.
ஆனாலும் இதில் முக்கியமாக எல்லை தாண்டிய பயங்கரவாதம் மற்றும் பருவநிலை மாறுபாடு தொடர்பான பிரச்சினைகளே விவாதிக்கப் படவுள்ளன. அதற்கடுத்தபடியாக வணிகம், கலாசாரம், பெண்கள் முன்னேற்றம், ஆபிரிக்காவுடனான கூட்டு ஒத்துழைப்பு ஆகியவையும், பேசப்படும். பயங்கரவாதம் என்பதற்குள் வட கொரியாவின் அச்சுறுத்தல், கட்டார் விவகாரம், பிலிப்பைன்ஸ் பகுதிகளில் வளரும் ஐ.எஸ் அமைப்பு உள்ளிட்டவை பேசப்படலாம் எனப் பன்னாட்டு ஊடகங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன. சனிக்கிழமை மாலை நிறைவடையும். இந்த மாநாடு காரணமாக ஹம்பேர்க் நகரம் முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

G20 GERMANY 2017
HAMBURG



# இரு பக்கங்களிலும் போர்க்கொடி!

## நடுவில் இந்தியா

புதுடில்லி, ஜூலை 7
இந்தியா - சீனா மற்றும் இந்தியா - பாகிஸ்தான் எல்லைகளில் போர்ப் பதற்ற நிலை தோன்றியுள்ளது. அந்தப் பகுதிகளில் நிலவும் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் இராணுவ நடவடிக்கைகள் இந்தியாவை மிரட்டும் வகையில் அமைந்துள்ளன. இதனால் தனது இரண்டு பக்க எல்லைப்புறங்களிலும் ஏற்பட்டிருக்கும் போர் நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது இந்தியா.
பூட்டானை அண்மித்த இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அருணாச்சலப் பிரதேசம், சிம்கிம் மாநிலம் முதலான பகுதிகளில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு இரண்டு நாடுகளுடைய எல்லைப் பாதுகாப்பு இராணுவங்களும் உசார் நிலையிலிருக்கின்றன.
"இராணுவ மோதலுக்கு இந்தியா முயற்சி செய்தால், அது அதிக இழப்புக்களைச் சந்திக்க நேரிடும்" என்று சீன ஊடகம் ஒன்று மிரட்டியு மிருக்கின்றது. அதாவது சீனாவின் பிரபல செய்தித்தாள் ஒன்றில் வெளியாகியிருக்கின்ற கட்டுரையில் "சீனப் படையினர், எல்லை மீறும் இந்தியத் துருப்புகளை வெளியேற்றுவதற்குப் போதுமான சக்தி கொண்டுள்ளனர். 1962இல் இருந்த இந்திய இராணுவம் தற் போது இல்லை. எனவே இராணுவ மோதலைத் தூண்டுவதற்கு இந்தியா முயற்சி செய்தால் 1962இல் ஏற்பட்ட இழப்புக்களைவிட கூடுதலான இழப்புகள் இந்தியாவுக்கு ஏற்படும்" என்றிருக்கின்றது. இதைவிட மறு எல்லையில் இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தானும் போர்க்கொடி தூக்கியுள்ளது.
இந்தியா - பாகிஸ்தான் அயலுறவிலும் இருநாட்டு எல்லைகளிலும் தொடர்ந்தும் பதற்றமான சூழல் நீடித்துக்கொண்டிருக்கும் நிலையில், குறைந்த தூரம் சென்று தாக்கக்கூடிய, எல்லைப் போர்களுக்கு உதவக்கூடிய ஏவுகணைப் பரிசோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளதாகப் பாகிஸ்தானின் பாதுகாப்புத்துறை தெரிவித்திருக்கின்றது.
இந்தியா - பாகிஸ்தான் எல்லைகளில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி எல்லை தாண்டித் தாக்குதலில் ஈடுபடுவதாக இரு நாடுகளும் பரஸ்பரமாகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்துவரும் தருணத்தில் பாகிஸ்தானால் தரையிலிருந்து குறைந்த தூரம் சென்று இலக்கைத் தாக்கும் 'நாஸ்ர்' என்ற மேற்குறித்த குறுந்தூர ஏவுகணைச் சோதனை நடந்தேறியுள்ளது.
இது குறிப்பாக இந்தியாவைக் குறிவைத்தே தயாரிக்கப்பட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். இதனால் இந்தியாவைச் சார்ந்திருக்கும் இவ்விரு நாட்டு எல்லைகளிலும் போர்ப் பதற்றம் நீடிக்கத் தொடங்கியிருக்கின்றது.





ஈராக்கிய நகரமான மேற்கு மோசூலை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிடமிருந்து ஈராக் படைகள் மீட்டுக்கொண்டிருக்கின்றன. மக்களை அரச கட்டுப்பாட்டுக்குள் எடுக்கும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. இதன்போது முதிய கன்னி யாஸ்திரி ஒருவர் குழந்தை ஒன்றைப் பாதுகாத்தவாறு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் பிடியிலிருந்து மீண்டு அரச கட்டுப்பாட்டுக்குள் ஓடி வந்து கொண்டிருக்கும் ஒளிப்படம் இது.

# 48வருடங்களில் 17,500 மரங்கள்!

டாக்கா, ஜூலை 7
பங்களாதேஷைச் சேர்ந்த 60 வயதுடைய அப்துல் சமத் ஷேக் எனும் முதியவர் முழுநேரமாக வாடகைச் சைக்கிள் ஓட்டும் தொழிலைச் செய்துவருகிறார்.
அத்துடன் நின்றுவிடாத அவர், நீண்ட காலமாகவே செய்துவரும் சிறிய விடயம் ஒன்று இன்று சமூகத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
அவரைப் பிரபல்யப்படுத்தியுமுள்ளது.
அவர் தன்னுடைய 12வயதிலிருந்து தினமும் ஒரு மரம் நடுவதைப் பழக்கமாகக் கொண்டுள்ளார்.
இதுவரை 17,500 வரையான மரங்களை நட்டு, சிறிய காட்டையே உருவாக்கியுள்ளார். நாளொன்றுக்கு முந்நூறு ரூபாய்க் கும் குறைவாக உழைக்கும் ஏழையான இவரின் இயற்கை பற்றிய கரிசனையால் பாராட்டுக்கள் குவிக் கின்றன.



# இஸ்ரேலுக்கு மோடியின் நினைவுப்பரிசு

டெல் அவிவ், ஜூலை 7
3 நாள்களை உள்ளடக்கிய மோடியின் இஸ்ரேலியப் பயணத்தின் போதுஅவருக்குப்பெரும் வரவேற்புக் கிடைத்திருந்தது. இஸ்ரேலியத் தலைமை அமைச்சர் நெத்தன்யாகு, வானூர்தி நிலையத்துக்கு நேரில் சென்று மோடிக்கு உற்சாக வரவேற்பளித்திருக்கின்றார். "மோடியைக் காண்பதற்கு 70வருடங்கள் வரையில் காத்திருந்தோம்" என்றும் புகழாரம்சூட்டியிருக்கின்றார்.



அத்துடன் நின்றுவிடாது இஸ்ரேலிய மலர் ஒன்றுக்கு 'மோடி' என்று பெயரும் சூட்டியி ருக்கின்றனர். இஸ்ரேல் அளித்த இத்தனைக்கும் பதிலாக மோடியும் தனது பயண நினைவாக சில அன்பளிப்புக்களை இஸ்ரேலுக்குக் கையளித்திருக்கின்றார்.
இதன் நிமித்தம் கேரளாவிலிருந்து கொண்டு செல்லப்பட்ட இரண்டு நினைவுப் பரிசுகளை மோடிநெத்தன்யாகுவுக்கு வழங்கியிருக்கின்றார்.
இந்தியாவிலுள்ள பாரம்பரிய யூதர்களின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் பரிசுகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. கேரளாவின் திருவல்லாவில் உள்ள மலங்கரா மார் தோம சிரியன் தேவாலயத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டுள்ள அவை 9ஆம் மற்றும் 10ஆம் நூற்றாண்டைச் சோர்ந்தவை.
கேரளாவிலுள்ள யூத சமூகத்தின் பழமையைக் குறிக்கும் பொருட்டே இவற்றை நெத்தன்யாகுவுக்கு மோடி பரிசளித்திருக்கின்றார்.
தென்னிந்தியக் கலையைப் பிரதிபலிக்கும் தங்க முலாம் பூசப்பட்ட உலோகக் கிரீடம் ஒன்றையும் இதன்போது மோடி இஸ்ரேலுக்கு வழங்கியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கை ஏற்றுமதி செய்துள்ள இனப்படுகொலை தந்திரோபாயங்கள்

போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுவதைத்தடுக்கின்ற விடயத்தில், இலங்கையை வெற்றிகரமாகப் பின்பற்றத்தொடங்கியுள்ளது மியன்மார்.

மியன்மாரில் ரொகிஞ்சா முஸ்லிம் இனத்தவர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுவருகின்றனர்; ரொகிஞ்சா முஸ்லிம்கள்படுகொலைகளுக்கும், சித்திரவதைகளுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஆயிரக்கணக்கில் தப்பி வெளியேறிக்கொண்டிருக்கின்ற மக்கள் அங்கு இடம்பெறும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான சான்றாக உள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்கு ஐக்கிய நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகளை மியன்மார் தடுத்து வருகின்றது. ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களுக்கு அனுமதியளிக்க மறுத்துவரும் மியன்மார், இனப்படுகொலையை இழைத்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் இராணுவத்தினரைப் பயன்படுத்தி உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவிக்கின்றது.

நோபல் பரிசுபெற்ற ஜனநாயகப் போராளி ஆங் சாங் சூகி இந்த விடயத்தில் பின்பற்றும் நிலைப்பாடு பலரை ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது. முதலில் முஸ்லிம் சமூகத்தினர் மீதான தாக்குதல் குறித்து கடும் மௌனத்தைப் பின்பற்றிய அவர், தற்போது ஐக்கிய நாடுகளின் விசாரணையை தீவிரமாகநிராகரிக்கத்தொடங்கியுள்ளார். பன்னாட்டுவிசாரணை மியன்மாரின் சமூகங்கள் மத்தியில் மோசமான மோதலை உருவாக்கும் என அவர் தெரிவித்திருப்பது இலங்கையில் மகிந்த ராஜபக்ச காலத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளை நினைவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது.

பன்னாட்டு விசாரணையை நிராகரிப்பதற்காக சிங்களப் பேரினவாதிகள் இந்தக் கருத்தை முன்வைத்திருந்தனர். தற்போதும் இதே கருத்தை அவ்வப்போது செவிமடுக்க முடிகின்றது.

மியன்மார் அரசு தற்போது பின்பற்றிவரும் தந்திரோபாயங்கள் இலங்கை பின்பற்றிய –பின்பற்றும் தந்திரோபாயங்களை ஒத்தவையாகக் காணப்படுகின்றன.

இலங்கை அரசு பன்னாட்டுச்சமூகத்தை ஏமாற்றுவதற்காக வெற்றிகரமாகப் பின்பற்றிய தந்திரோபாயங்களை, மியன்மாரும் கையாளத்தொடங்கியுள்ளது. தனது நேசநாட்டுக்கு இலங்கை இந்தத்தந்திரோபாயங்களைஏற்றுமதிசெய்திருக்கும் – அறிவுறுத்தியிருக்கும் என்றும் கருதலாம்.

இலங்கைகுறித்தஆய்வாளரொருவர்குறிப்பிடுவதுபோன்று, 21ஆம்நூற்றாண்டின்முதலாவது இனப்படுகொலையைப் புரிவதற்கு இலங்கைஅரசுபயன்படுத்திய முறைகள் இனப்படுகொலையை நிறுவனமயப்படுத்தியுள்ளன.

அதேபோன்று இனப்படுகொலையைப்புரிந்தபின்னர்அவர்கள் உலகின் முரண்பாடுகளைப் பயன்படுத்தி தப்புவது எவ்வாறுஎன்பதையும்இலங்கையிடமிருந்துகற்றுக்கொண்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் மியன்மாரில் இடம்பெற்றுவரும் இனப்படுகொலைகள் குறித்த குற்றச்சாட்டுகள் பற்றி ஆராய்வதற்காக தூதுக்குழுவொன்றை அனுப்பவேண்டும் எனப் பரிந்துரைசெய்திருந்தது.

மியன்மாரில்மேற்குலகத்துக்குசமமாகசெல்வாக்குச்செலுத்தத் துடிக்கும் இந்தியாவும் சீனாவும், உடனடியாகச் செயற்பட்டுஇதனைத்தடுத்துநிறுத்தின. இதில்இந்தியாவின்பங்கு மிகவும் வலுவானதாகக் காணப்பட்டது.

இலங்கையின் யுத்தக் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதில் காண்பிக்கும் ஆர்வத்தை இந்தியாவும் சீனாவும் மியன்மார் விடயத்திலும் வெளிப்படுத்தியுள்ளன.

ஈழத்தமிழர்களும்மியன்மார்முஸ்லிம்களும்எதிர்கொண்டுநிற்கின்றஅவலம்,அரசுகளும்,உலகவல்லரசுகளும்,பன்னாட்டு அமைப்புகளும் மாறப்போவதில்லை என்பதையும், குற்றவாளிகளைத்தண்டிப்பதற்குஉலகம்மாற்றுவழிகளைக்கண்டுபிடிக்கவேண்டியுள்ளதுஎன்பதையும்புலப்படுத்திநிற்கின்றன.



# சபாஷ் விக்கி சபாஷ்

தி.ராஜ்

வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடந்தது. இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வீட்டுச்சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 28 ஆசனங்களையும், இரண்டு நியமன ஆசனங்களையும் கைப்பற்றியது.

பெருவெற்றியைக் கடந்து ஒரு வாரத்தினுள்ளேயே கட்சிக்குள் குடுமி பிடிச் சண்டை தொடங்கியது. இரண்டு விடயங்கள் தொடர்பாக இது நடந்தது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அப்போதைய ஆட்சித் தலைவர், மகிந்த ராஜபக்ச முன்பாக பதவியேற்பதா இல்லையா? என்பதில் கட்சி உறுப்பினர்கள் இரு தரப்பாகிப் பிரிந்து அவர்கள் மோதினர். அமைச்சுப் பதவிகள் யார் யாருக்கு வழங்குவது என்பதிலும் கன்னை பிரிந்து மோதினர். ஈற்றில் அமைச்சுப் பதவிகள் இன்னார் இன்னார்க்கு என்று அறிவிக்கப்பட்டது. இதனால் வெகுண்டெழுந்தவர் சுரேஸ் பிரேமச்சந்திரனே. மகிந்த முன்னால் விக்கி பதவியேற்றதால் சீறிச்சினந்தவர் சிவாஜிலிங்கம். மாகாணசபை உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. ஆளும் கட்சியின் 8 உறுப்பினர்கள் நிகழ்வில் பங்கேற்கவில்லை.

### முதலமைச்சர் வலியுறுத்திய ஏழு கொள்கைகள்

வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரையாற்றினார். அவர் எழுதிக் கொண்டு வந்த உரையைப் பார்த்துத் தான் வாசித்தார். அவர் தயாரித்துக் கொண்டு வரும்போது சேர்க்கப்படாது. பின்னர் தனது பேனாவால் அதில் ஒரு வசனத்தை சேர்த்து எழுதியிருந்தார். இதையெல்லாம் இப்பொழுது முதலமைச்சர் நினைவில் வைத்திருப்பாரோ? தெரியவில்லை.

"பொது வாழ்க்கையில் வலியுறுத்தப்படும் ஏழு கொள்கைகளை இந்தத் தருணத்தில் எடுத்தியம்புவது உசிதம் என்று நான் கருதுகின்றேன். முதலாவது சுயநலமின்மை. அதாவது பொதுவாழ்க்கையில் நுழைபவர்கள் எப்பொழுதுமே பொது நலம் கருதியே முடிவு எடுக்க வேண்டும். தமக்கோ தமது குடும்பத்தாருக்கோ, தமது நண்பர்களுக்கோ, தமது தம்பிமாருக்கோ நிதி சார்பான அல்லது வேறு வகையான நன்மைகள் பெறக் கருதியோ முடிவுகள் எடுக்கக்கூடாது" என்று முதலமைச்சர் உரையாற்றினார்.

'தமது தம்பிமாருக்கோ' என்ற வசனம் முதலமைச்சரின் மூல உரையில் இல்லை. வீரசிங்கம் அரங்கில், முதலமைச்சர் இந்த வசனத்தை உச்சரித்தபோது சபையை நிமிர்ந்து பார்த்து அழுத்தமாகச் சொன்னார். அரங்கில் கரவொலி, விசிலொலி கூரையைப் பிய்த்தெறியும்வகையில் எழுந்தன. விக்னேஸ்வரனுக்கு இவையெல்லாம் இப்போது நினைவில் இருக்குமா என்பது சந்தேகமே?

சுரேஸ்பிரேமச்சந்திரன் தனது தம்பிக்கு அமைச்சுப் பதவி கேட்டார். வழங்கவில்லை என்ப

> "பொது வாழ்க்கையில் வலியுறுத்தப்படும் ஏழு கொள்கைகளை இந்தத் தருணத்தில் எடுத்தியம்புவது உசிதம் என்று நான் கருதுகின்றேன். முதலாவது சுயநலமின்மை. அதாவது பொது வாழ்க்கையில் நுழைபவர்கள் எப்பொழுதுமே பொது நலம் கருதியே முடிவு எடுக்க வேண்டும். தமக்கோ தமது குடும்பத்தாருக்கோ, தமது நண்பர்களுக்கோ, தமது தம்பிமாருக்கோ நிதி சார்பான அல்லது வேறு வகையான நன்மைகள்பெறக்கருதியோ முடிவுகள் எடுக்கக் கூடாது" என்று முதலமைச்சர் உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால், நிகழ்வில் பங்கேற்க வரவில்லை என்றும், விக்னேஸ்வரன் அன்றைய தினம் ஆளுநர் அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். இதன் பின்னர் சுரேஸ்பிரேமச்சந்திரனும், தாம் தமது தம்பிக்கு அமைச்சுப் பதவி கேட்டதை ஒப்புக் கொண்டிருந்தார்.

**வஞ்சத்தில் வீழ்ந்தார் விக்கி**

நாலு வருடங்கள்தான் கடந்திருக்கின்றன. அதற்குள் அரசியல் களம் எப்படி மாறி விட்டது? அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை; நிரந்த நண்பர்களும் இல்லை என்பதைக் காலம் உணர்த்தியிருக்கின்றது. சுரேஸ்பிரேமச்சந்திரன் தமதுதம்பிக்குஅமைச்சுப்பதவிவழங்குமாறுவிடுத்த கோரிக்கையை நிராகரித்திருந்த விக்னேஸ்வரன், இன்று அவரது தம்பிக்கு கல்வி அமைச்சைத் தூக்கிக் கொடுத்திருக்கின்றார்.

'செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம்சேர்ந்துவஞ்சத்தில்வீழ்ந்தாயடா கர்ணா' என்ற கண்ணதாசனின் கவிவரிகள் காதுக்குள் இப்போது ரீங்காரம் செய்வதை உணர முடிகின்றது. நம்பிக்கையில்லாப் பிரேரணை யிலிருந்து காப்பாற்றி, தனது முதலமைச்சர் பதவியைத் தக்க வைப்பதற்கு உதவி செய்ததற்கு நன்றிக்கடனாக, அமைச்சுப் பதவியை உவந்தளித்திருக்கின்றார் முதல்வர் விக்கி. அரசியலுக்குள் நுழைந்தபோது அப்பழுக்கற்ற மனிதராக இருந்தவேளை தாம் ஆற்றிய உரைகளை முதலமைச்சர் விக்னேஸ்வரன் இப்போது இரைமீட்டினால் பல உண்மைகள் அவருக்குப் புலப்படும்.

**பழிவாங்கப்பட்ட தமிழ் அரசுக் கட்சி**

2013ஆம் ஆண்டு அமைச்சர்கள் நியமனத்தின்போது, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி சார்பில் பொ. ஐங்கர்நேசனுக்கு அமைச்சுப் பதவியை வழங்க முதலமைச்சர் தீர்மானித்தார். எங்கள்கட்சிக்குவழங்க வேண்டிய அமைச்சுக்கு எவரை நியமிக்க வேண்டும் என்பதை நாங்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று சுரேஸ்பிரேமசந்திரன் சண்டிக்கட்டுக் கட்டினார். தனது தம்பிக்கு அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொடுத்தேயாகவேண்டும் என்பதில் விடாப்பிடியாக சுரேஸ்பிரேமச்சந்திரன் நின்று கொண்டு மல்லுக்கட்டினார். ஆனால் விக்கியோ கொஞ்சம்கூட விட்டுக் கொடுக்கவில்லை. பொ.ஐங்கரநேசனுக்கு அமைச்சுப் பதவியைக் கொடுத்தார். அவர் தமது கட்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டார். அவர் தமது கட்சியைச் சேர்ந்தவர் அல்லர். அவருக்குக் கொடுத்த அமைச்சுப் பதவி தமது கட்சிக்கு கொடுக்கப்பட்டதல்ல. இவ்வாறு நீண்ட வியாக்கியானம் கொடுத்தார் சுரேஸ்.


இந்த விவகாரம் 'பூமராங்' போன்று திரும்பி வந்து இப்போது தமிழ் அரசுக் கட்சியைத் தாக்கியிருக்கின்றது. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் அனந்திக்கு அமைச்சுப் பதவி கொடுக்க முடியாது. எங்கள் கட்சிக்குரிய அமைச்சுப் பதவியை ஆனோல்ட்டுக்குக் கொடுங்கள். இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி விக்கிக்கு எடுத்துரைத்தது. ஆனால் விக்கியோ, அதனை மறுதலித்து அனந்திக்கே அமைச்சுப் பதவியைக் கொடுத்தார். அன்று ஈ.பி.ஆர்.எல்.எவ்க்கு நடந்தது இன்று தமிழ் அரசுக் கட்சிக்கு நடந்திருக்கின்றது.

> அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை; நிரந்த நண்பர்களும் இல்லை என்பதைக் காலம் உணர்த்தியிருக்கின்றது. சுரேஸ் பிரேமச் சந்திரன் தமது தம்பிக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு விடுத்த கோரிக்கையை நிராக ரித்திருந்த விக்னேஸ்வரன், இன்று அதே தம்பிக்கு கல்வி அமைச்சைத் தூக்கிக் கொடுத்திருக்கின்றார்.

**பலே விக்கி பலே**

நீதியரசராகவும், ஆன்மீகவாதியாகவும், அப்பழுக்கற்ற மனிதராகவும் தன்னை இதுநாள் வரை வெளிக்காட்டிக் கொண்டிருந்த விக்னேஸ்வரன், இப்போது முழுநேர முழுமையான அரசியல்வாதியாக மாறியிருக்கின்றார். அரசியல் சதுரங்கத்தில் சாதுரியமாக காய்களை நகர்த்தத் தொடங்கியிருக்கிறார் விக்கி. முன்னாள் ஆயுதக் குழுக்களுடன் கைகோர்க்க மாட்டேன் என்ற அவரது கொள்கை இப்பொழுது அவரால் கைகழுவி விடப்பட்டிருக்கின்றது. எதிராளியால் வீழ்த்தப்பட முடியாத ராஜாவாக அரசியல் சதுரங்கத்தில் எத்தனை நாள்களுக்குத்தான் விக்கி ஓடப்போகின்றார் என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ■



## ஆசிரியருக்கான கடிதம்

### விஞ்ஞானக் கல்வித் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை அவசியம்

பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்து வருவதாக பொதுவான ஒரு குற்றச்சாட்டு அண்மைக் காலமாக நிலவுகின்றது. இதனால் விஞ்ஞான பட்டதாரிகள் உருவாவதும் குறைவடைந்துள்ளமையை, அண்மையில் விஞ்ஞான ஆசிரியர்கள் வெற்றிடத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட வேளை, எதிர்பார்க்கப்பட்டதை விட குறைந்த அளவு விண்ணப்பங்களே கிடைக்கப்பெற்றமை மூலம் அறிய முடிந்தது. க.பொ.த உயர்தரத்தில் கலைப்பீடத்தைத் தெரிவு செய்யாது, கூடுதலானவர்கள் விஞ்ஞானக் கற்கை நெறிகளையே மேற்கொள்ள வேண்டுமெனவும் கூறப்பட்டு வருகின்றது. ஆயினும், மாணவர்கள் பாடசாலைகளின் நிலையைக் கருத்திற்கொண்டு, விஞ்ஞானத் துறையைத் தவிர்த்து வருகின்றனர். தாதிய ஆட்சேர்ப்பின்போதும் விஞ்ஞானப் பிரிவில் உயர்தரத்தில் சித்தி பெற்றவர்கள் குறைவாக இருந்தமையால் கலை, மற்றும் வர்த்தக உயர்தரம் கொண்டவர்களையாவது விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

ஆயினும், இதைப்பற்றி ஆழமாகவும், ஆற அமரவும் எவராவது சிந்தித்ததாகத் தெரியவில்லை. முதற்கட்டமாக வகை I ஏபி பாடசாலைகளில், விஞ்ஞானப் பட்டதாரி அதிபர் தரம் பெற்றவர்களை அதிபர்களாகவோ, பிரதி அதிபர்களாகவோ, உதவி அதிபர்களாகவோ நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தகைய விஞ்ஞானப் பட்டதாரிகள் அதிபர் தரத்துடன் இருப்பின், அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து வகை I ஏபி, பாடசாலைகளிலும், வகை I சி பாடசாலைகளிலும் இணைத்து க.பொ.த இடை நிலைக்கல்வியில் விஞ்ஞான பாடங்களின் மீதான நம்பிக்கை ஏற்பட வழி சமைக்க வேண்டும். கல்வி அமைச்சு இந்த விடயத்தில் அக்கறை காட்டிச் செயற்படுமா?

ஊரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றரை மாத காலப்பகுதியில் ரூ. 217 பில்லியன் பணம் அச்சிடப்பட்டுள்ளது

### மத்திய வங்கி .தெரிவிப்பு

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே 217 பில்லியன் தொகை மதிப்பீடுடையதான பணத்தை மத்திய வங்கி அச்சிட்டுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக அரச செலவுகள் வெகுவாக உயர்வடைந்துள்ளதாகவும் அவை வருமானத்தை விடவும் பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது. அரச ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள், ஓய்வூதியம் மற்றும் அமைச்சரவைக் கொடுப்பனவுகள் போன்றவற்றினால் அதிகளவு பணத்தை அரசு செலவு செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

> இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலே 217 பில்லியன் ரூபா தொகை மதிப்பீடுடையதான பணத்தை மத்தியவங்கி அச்சிட்டுள்ளது.

அதேபோன்று வட்டி வீதங்கள் உயர்வடைந்துள்ளதால் அரசு பொருளாதாரச் சமனிலையை ஈடுசெய்து கொள்ளமுடியாத அளவுக்கு பணத்தை அச்சிட்டு வருகின்றது என்பதான குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதும் இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்ளப்பட்டதான நடைமுறைகளின் அடிப்படையிலேயே பணத்தை அச்சிடுவதாகவும், சட்டத்துக்கு புறம்பான வகையில் பணம் அச்சிடப்படவில்லை எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத மத்திய வங்கியின் உயர் அதிகாரியொருவர் கருத்துரைத்துள்ளமை நோக்கத்தக்கது.

# உர மானியமாக ரூபா 1500 மில். நிதி ஒதுக்கீடு

### பெருந்தோட்டச் செய்கைக்கான பயிரிடலை ஊக்குவிக்க அரசு தீர்மானம்

பயிரிடல் சார் அபிவிருத்தியை பெருந்தோட்டத்துறைக்குள் உள்ளீர்க்கும் வகையிலான செயற்பாடுகளை அரசு முன்னெடுத்துள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை போன்ற பெருந்தோட்டப் பயிர் செய்கைக்கான உர மானியமாக ஆயிரத்து 500 மில்லியன் ரூபா தொகை மதிப்பீடுடைய நிதியை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

குறிப்பாக சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபைக்கு 900 மில்லியன் ரூபா நிதியும், தென்னை செய்கைக்காக 500 மில்லியன் ரூபா நிதியும் மற்றும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்துக்கு 100 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

> “பெருந்தோட்ட அமைச்சர் நவீன் திஸாநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்கவே 2017 ஆம் ஆண்டுக்கான உர மானியமாக ஆயிரத்து 500 மில்லியன் ரூபா நிதி வழங்கல் செயற்பாடுகளை முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.”

சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் அதிகபட்சமாக ஒரு ஹெக்டயர் நிலப்பரப்புக்கு 15 ஆயிரம் ரூபாவையும், தென்னைச் செய்கைக்காக அதிகபட்சமாக 5 ஏக்கர் நிலப்பரப்புக்கு 9 ஆயிரம் ரூபாவையும், இறப்பர் செய்கைக்காக 02 ஹெக்டயர் நிலப்பரப்புக்கு அதிகபட்சமாக 5 ஆயிரம் ரூபாவையும் உர மானியமாகப் பெற்றுக் கொள்ள முடியுமென தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த உர மானியங்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாகவே தோட்ட உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான ஆலோசனைகளை பெருந்தோட்ட அமைச்சு வழங்கியுள்ளமை நோக்கத்தக்கது.



## ரூபாவின் பெறுமதியை மத்திய வங்கி நிர்வகிப்பதில்லை

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை நிர்வகிப்பது தொடர்பிலான நடவடிக்கைகள் எவையும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதான கருத்து மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர், “மத்திய வங்கி இந்த விடயங்களை நிர்வகிக்கும் போது அந்நியச் செலாவணி வீணாக செலவிடப்படும். தவிர செலாவணிக் கையிருப்பு வீழ்ச்சியடைவது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய நெருக்கடி நிலைமைகளை ஏற்படுத்திகொள்வதற்கு காரணமாக அமைந்துவிடும்” - என்றார்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் பொன்னையா பத்மநாதன்

[ உசன், மிருசுவில் ]

( நில அளவையாளர் )



மண்ணில்
30.11.1935

விண்ணில்
07.06.2017



திதி :- பூர்வபட்ச திரயோதசி

**அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து
எமை அவனியிலே வாழ்வாங்கு வாழ வைத்த தெய்வமே!
நித்தமும் உங்களது ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.**

கடந்த 07.06.2017 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.07.2017) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

228/10, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்வம்

## வினை அகற்றும் சிவநாமங்களின் அருள்கூறும் அருவுருவம்



■ இரா.தனம்

ஆலயங்கள் ஆத்ம ஞானம் தருபவை. இறை அருளினை உருவகம் செய்து அமைதியை எங்கும் வியாபகம் செய்பவை. அடியவர்களை அழைப்பித்து ஆணவம், கன்மம், மாயை என்ற பாவ வினைகளை பக்தி மயமாக முடிவுறுத்த திருப்பணிகள் ஆற்றுபவை. மன ஆற்றுப்படுத்தல்களை மேம்படுத்தியிருப்பவை. தேவார முதலிகளான சமய குரவர்களும், சந்தான குரவர்களும், ஏனைய பக்தியின் திருநிலை பெற்ற பெரியவர்களும் அதன் வழிப்பட்டவர்களே.

'கோயில் இல்ல ஊரில் குடி இருக்க வேண்டாம்' என்பதான முன்னோரின் கருத்தநிலைப்படியே ஆலயங்களின் சுழமைவுகளும், அவற்றின் அமைவிடமும், அங்கு நிலைபெறுவதான ஆகம விதிப்படியான கட்டமைவுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்தவகையிலே ஆலயங்களை அண்மித்ததாக உருவாக்கப்படுகின்ற பூங்கொல்லைகளும் முன்னிலை பெறுகின்றன. அங்கு இறை வழிபாட்டுக்கு உரித்தான புஷ்பங்களை தருவிப்பதான பூங்கன்றுகளும், வில்வம், வன்னி, நெல்லி, செவ்விளநீர், கொன்றை மரங்களும், இன்னும் பிறவும் ஆலயச்சுழல் பசுமையுற வளம் பெறுகின்றன.

**இறையின் குணாதிசயம்**

இந்தநிலையிலே இறை வழிபாட்டோடு பொருத்தமுறுகின்ற வில்வ மரங்கள் புனிதத்துவம் வாய்ந்தவை. மகிமை பொருந்தியவை. அதன் சிறப்புகளை அறிந்துகொள்ள வேண்டும். சிவனை அர்ச்சிக்கச் சிறந்தது வில்வம் என்பதை நாம் அறிந்திருந்தாலும் அதன் மேன்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். மகாவில்வம், கொடிவில்வம், கற்பூரவில்வம், சித்தவில்வம் எனப் பலவகையான வில்வங்கள் உண்டு.

வில்வ இலைகள் 5 அல்லது 7 இதழ்களைக் கொண்டிருக்கும். அவற்றுள் மூன்று இதழ்கள் கொண்ட வில்வம் இலைகளே வழிபாட்டுக்கு உகந்ததாகக் கொள்ளப்படுகின்றன. இந்த வில்வத்தில் மும்மூர்த்திகள் வாசம் செய்வதாகக் கூறுகின்றனர். அது மட்டுமல்லாது வில்வத்தின் மூன்று இலைகளும் சிவன் ஏந்தியுள்ள திரிசூலத்தின் வடிவத்தையும், இறைவனின் முக்குணங்களையும் பிரதிபலிப்பதாகவும் கருதுகின்றனர். சிவனுக்கு பிரியமானதாகச் சொல்லப்படும் வில்வத்தின் ஓர் இலையில் பூசை வழிபாடுகளை மேற்கொள்வதென்பது லட்சம் ஸ்வர்ண புஸ்பங்களுக்குச் சமமானதாகும். தவிர சிவன் ஆலயங்களில் வில்வ இலையுடன் தண்ணீர் கலந்து புனித நீராகவும் பயன்படுத்துகின்றனர்.

> புனிதத்துவம் உடைய வில்வ மரங்களில் மகாலட்சுமி எழுந்தருள்கிறாள். அடியவர்கள் அனைவரும் பக்தியோடு வழிபாடாற்றி ஈசனது அருட்பார்வைகளைக் கண்டுகொள்ளலாம். அவற்றை வளர்ப்பதன் மூலம் செல்வ வளங்களைப் பெருக்கிக் கொள்ளலாம். வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று இறைவனின் பாதார விந்தங்களை அடையலாம்.




**வழிபாட்டுக்குரிய வில்வம்**

பூசைக்குப் பயன்படுத்துகின்ற வில்வத்தை சூரியோதயத்துக்கு முன்பதாகவே பறித்து வைப்பது சிறந்ததாகும். அதன் இலைகளைப் பறிக்கும்போது உளத்தூய்மையும் உடற் சுத்தமும் கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு இலையினைப் பறிக்கும் போதும் சிவநாமத்தை உச்சரித்திருக்க வேண்டும். சுடுகாடு போன்ற அசுத்தம் நிறைந்த இடத்திலிருந்து வில்வ இலைகளைப் பறித்தலாகாது. மேலும் மாதப் பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அட்டமி, நவமி ஆகிய தினங்களிலும் பறித்தல் கூடாது. ஒருமுறை பூசைக்கு உபயோகப்படுத்திய வில்வம் இலைகளை நீரில் அலம்பித் தூய்மைப்படுத்தி மீண்டும் பூசைக்கு உபயோகிக்கலாம் அதுவே வில்வம் இலைகளின் தனிச் சிறப்பு எனவும் கூறப்படுகிறது. இவற்றைப் பறித்து ஆறு மாத காலங்கள் வரை சேமித்து வைத்தும் இறை வழிபாட்டில் பயன்படுத்திக்கொள்ளலாம். அத்தனை புனிதத் தன்மைகளை இவை கொண்டமைந்துள்ளன.

**வில்வமரத்தின் சிறப்பு**

மண்ணுலகில் உள்ள ஆன்மாக்களின் பாவங்களைப் போக்கவென ஈசனின் இச்சா, கிரியா, ஞான சக்தி வடிவமாய் ஈசனின் அருளால் பூமியில் தோற்றம் கொண்டவையே வில்வ மரங்கள் ஆகும்.

ஊழிக்காலத்தில் அனைத்தும் அழிவடைந்துபோகும் என உணர்ந்த வேதங்கள் தாங்கள் அழியாதிருக்க என்ன வழி என ஈசனிடம் கேட்டனர். ஈசனும் திருவைக்காவூர் திருத்தலத்தில் வில்வமரத்தின் வடிவில் நின்று தவம் செய்யுமாறு கூறினார். அதன் காரணம் கொண்டே திருவைகாவூர் வில்வராண்யம் எனச் சிறப்புப் பெற்றதெனவும் வரலாறுகள் கூறுகின்றன.

வீட்டில் அவசியம் வளர்க்கப்பட வேண்டிய மரங்களுள் வில்வ மரங்கள் தனித்துவமானவை. இவற்றைப் பசும்பால் கலந்த நீர் ஊற்றி வளர்ப்பது சிறப்பானது. வில்வமரத்தடியில் மலர்தூவி விளக்கேற்றி வழிபாடாற்றுவதும் நன்று. முதன் முதலாக வில்வ மரக் கன்றுகளை பதியிடும் போது பூமி தோஷம் நீங்க விபூதியைச் சுத்தத் தண்ணீரில் கலந்து செடியைச் சுற்றித் தெளிக்க வேண்டும். 'ஓம் மூலி ஜீவலட்சுமி...! ஓம் மூலி மகாதேவ' உன் உயிர் உடலில் சேர்ந்து ஜீவனாயிருக்க என்று திருவாய் மொழிந்து சொல்ல வேண்டும். இவ்வாறு வளர்க்கப்படும் வில்வ மரங்களின் கீழ் தீட்டுள்ளவர்கள் நிற்பது பாவச் செயல் எனச் சொல்லப்படுகிறது. இத்தகு புனிதத் தன்மையோடு வளர்க்கப்படும் வில்வமரங்கள் பல நன்மைகளைத் தருவிக்கின்றன.

**பயன்கள்**

- அஸ்வமேதயாகம் செய்த பயன்கள் கிட்டும்.
- ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பயன் உண்டு.
- கங்கை முதலிய புண்ணிய நதிகளில் நீராடிய பயன் கிடைக்கும்.
- 108 சிவாலயங்களை வலம் வந்து தரிசித்த பலாபலன் உண்டாகும்.
- வில்வ மரங்களின் காற்றை சுவாசம் செய்தாலோ அல்லது அதன் நிழல் பட்டாலோ அதீத சக்தி கிடைக்கும்.
- முறைப்படி விரதம் இருந்து வில்வ மரத்தை வழிபாடாற்றுபவர்களுக்கு அனைத்து நன்மைகளும் உண்டாகும்.

**வழிபாடு**

பௌர்ணமி நாள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் லட்சுமி துதி கூறி கற்கண்டு, தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை போன்ற நைவேத்தியங்களை படையலிட்டு வழிபடலாம். வில்வ விருட்சத்தின் முன் அமர்ந்து விநாயகரை வணங்கிய பின் 'ஓம் ஸ்ரீ ஹ்ரீம் க்லீம் வில்வரூபிணியை சௌபாக்கிய லட்சுமியைத் தன தாண்ய கர்னய நாமோ நம..' என துதிபாடுவதால் அனைத்து வளமும் கிடைக்கும். வில்வமரத்தின் கிளைகளோ வேதங்கள். இலைகள் யாவுமோ சிவரூபம். வேர்களோ கோடான கோடி ருத்திரங்கள்.

ஆக, புனிதத்துவம் உடைய வில்வ மரங்களில் மகாலட்சுமி எழுந்தருள்கிறாள். அடியவர்கள் அனைவரும் பக்தியோடு வழிபாடாற்றி ஆங்கு உறையும் ஈசனது அருட்பார்வைகளை கண்டுகொள்ளலாம். அவற்றை வளர்ப்பதன் மூலம் செல்வ வளங்களைப் பெருக்கிக் கொள்ளலாம். வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று இறைவனின் பாதார விந்தங்களை அடையலாம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# 2017 ராகு, கேது பெயர்ச்சிப் பலன்கள்



## துலாம்

சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்

அன்பின் அடையாளமாக இருப்பவர்களே! உங்களுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 13.2.19 வரையில் ராகு 10இலும், கேது 4இலும் அமர்ந்து பலன் தரப்போகிறார்கள்.

**ராகுவின் பலன்கள்:** ராகு 10இல் வந்தமர்வதால், இதுவரையிலும் உழைத்ததற்கான பலன்களை அறுவடை செய்வீர்கள். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் சச்சரவுகள் நீங்கும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பணவரவு உண்டு. சுயதொழில் செய்யும் வல்லமை உண்டாகும். உங்களிடமிருந்த பய உணர்வு, தடுமாற்றம் நீங்கும். குடும்ப வருமானம் உயரும். திட்டமிட்டுச் செயற்படுவீர்கள். எனினும், உத்தியோகத்தில் அடிக்கடி இடமாற்றங்கள் வரும்.

உங்களின் பாக்கிய ஸ்தானாதிபதியும் விரயாதிபதியுமான புதனின் ஆயில்யம் நட்சத்திரத்தில் 27.7.17 முதல் 4.4.18 வரை ராகு செல்வதால் இந்தக் காலகட்டத்தில், தடைப்பட்ட காரியங்கள் நல்லவிதமாக நிறைவடையும். வீண் செலவுகளைத் தவிர்க்கவும். ஒவ்வாமை, சிறுநீரகத் தொற்று, தூக்கமின்மை வரக்கூடும்.

5.4.18 முதல் 10.12.18 வரை ராகு உங்களின் சுக பூர்வ புண்ணியாதிபதியுமான சனி பகவானின் பூசம் நட்சத்திரத்தில் செல்வதால் பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். வீடு, மனை, வாகனம் புதிதாக வாங்குவீர்கள். வழக்கில் தீர்ப்பு தாமதமாகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உங்களின் சஷ்டம திரிதியாதிபதியுமான குரு பகவானின் புனர்பூசம் நட்சத்திரம் 4ஆம் பாதம் கடக ராசியில் 11.12.18 முதல் 13.2.19 வரை ராகு பயணிப்பதால் மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். வழக்கில் வழக்கறிஞரை மாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகும். தலைக்கவசம் அணிந்து செல்வது நல்லது. பணப்பற்றாக்குறை அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி பெரிய காரியங்களில் இறங்க வேண்டாம். மாணவர்களே! எதிர்பார்க்கும் கல்விப் பிரிவைப் பெறுவதற்கு அதிகம் போராட நேரிடும். பெண்களுக்குக் கல்யாணப் பேச்சுவார்த்தை தாமதமாக முடியும். அயல்நாட்டில் வேலை கிடைக்கும். கலைத்துறையினரே! உங்கள் படைப்புகள் வெளியாவதில் இருந்த தடைகள் நீங்கும். வியாபாரத்தில், பற்று வரவு கணிசமாக உயரும்.

**கேதுவின் பலன்கள்:** கேது பகவான் இப்போது உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் வந்து அமர்வதால், குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் உண்டாகும். மகளுக்குத் திருமணம் முடிப்பீர்கள். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. அரசாங்க வரிகள் செலுத்துவதில் தாமதம் வேண்டாம். உணவு விடயத்தில் கட்டுப்பாடு அவசியம். பசியின்மை, ரத்த அழுத்தம், வயிற்றுப் புண் வரக்கூடும்.

ஜூலை 27 முதல் நவம்பர் 29 வரை உங்களின் தன சப்தமாதிபதியுமான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரம், 1, 2ஆம் பாதம் மகர ராசியில் கேது பகவான் செல்வதால், இந்தக் காலகட்டத்தில் பிரிந்த தம்பதியர் ஒன்றுசேர்வர். சகோதரர்களுடன் வீண் விவாதங்கள் எழும்.

உங்களின் ஜீவனாதிபதியான சந்திரனின் திருவோணம் நட்சத்திரத்தில், 30.11.17 முதல் 6.8.18 வரை கேது செல்வதால் சவாலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடுகளை கட்டும். வேலை கிடைக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும். 7.8.18 முதல் 13.2.19 வரை உங்களின் லாபாதிபதியான சூரியனின் உத்திராடம் நட்சத்திரம் 2, 3, 4ஆம் பாதம் மகர ராசியில் கேது செல்வதால் எதிலும் உங்கள் கை ஓங்கும். மூத்த சகோதரர்களால் பலனடைவீர்கள். அரச காரியங்கள் இழுபறியாகி முடியும். வியாபாரத்தில் இலாபம் ஓரளவுக்கு இருக்கும். புது முதலீடுகளைத் தவிர்க்கவும். பங்குதாரர்களுடன் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில், உழைப்புக்கேற்ற அங்கீகாரம் இல்லையே எனப் புலம்புவீர்கள். உயரதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொள்வார்கள்.

# வரலாற்றில் இன்றைய தினம்

1543-லக்ஸம்பேர்க் பிரெஞ்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டது.

1770-மோல்டோவா லார்கா நதிப்பிரதேசத்தில், ரஷ்ய மற்றும் ஒட்டமான பேரரசுகளிடையே போர் இடம் பெற்றது.

1865- ஆபிரகாம் லிங்கனின் படுகொலைக்குத் திட்டம் தீட்டிய நான்கு பேர் தூக்கிலிடப்பட்டனர்.

1916-வெலிங்டனில் நியூசிலாந்து தொழிலாளர் கட்சி நிறுவப்பட்டது.

1928-துண்டு துண்டாக நறுக்கப்பட்ட பாண் (ஸ்லைஸ் பிறட்) முதன் முதலாக விற்பனைக்கு வந்தது.

1946-புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்ட முதல் அமெரிக்கரானார் அன்னை பிரன்செஸ்கர் எஸ்கபிரினி.

1978-ஐக்கிய இராச்சியத்திலிருந்து சொலமன் தீவுகள் சுதந்திரம் பெற்றது.

1980- ஈரானில் ஷரியா சட்டம் நிறுவப்பட்டது.

1983-அமெரிக்க பாடசாலைச் சிறுமி சமந்தாஸ் மித்சோவியத் யூனியன் செயலாளர் நாயகம் யூரி அன்ரபோவின் அழைப்பின் பேரில் ரஷ்யாவுக்குச் சென்றார்.

1985- தனது 17 ஆவது வயதில், விம்பிள்டன் தொடரில் கிண்ணம் வென்றதன் மூலம், மிகக் குறைந்த வயதில் இந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றிய நபரானார் பொறிஸ் பெக்கர்.

1986-இந்திய மீனவர் கொலை குறித்து டிக்ஸிற் கவலை.

1986- மாகாண சபை முறைமை பிரிவினைக்கு வழி வகுக்கும் என சிறிமாவோ கூறினார்.

1995-தமிழ் மீனவர்கள் இருவர் மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்டனர்.

2005-பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதியுதவி வழங்குவதைக் குற்றமாக்கும் சட்ட மூலம் சபையில் கதிர்காமரால் சமர்ப்பிப்பு.

2012- ரஷ்யா கிறஸ்னோடர் கரை பிரதேசத்தில் வெள்ளத்தினால் 172 பேர் உயிரிழந்தனர்.

2016 -டலஸ் டெக்சாசில், பொலிஸாருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றின்போது அமெரிக்க முன்னாள் இராணுவ வீரர் மைக் சேவியர் ஜோன்சனால் பதினான்கு பொலிஸார் சுடப்பட்டனர். துப்பாக்கிதாரிகள் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

## நாளை

**ஆனி - 24**
சனிக்கிழமை -08.07.2017
திதி:சதுர்த்தசி மு.ப. 08.29 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப.03.31 வரை
சுபநேரம்:02.58-04.28 வரை
ராகுகாலம்:08.58-10.28 வரை
பூரணை விரதம்

# க.குமாரின் அரசியல் வறுமைக்கான பொய்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில தினங்களுக்கு முன்னர் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்.

அதில், 'வடக்கு-கிழக்கு இணைப்புக்கு இரண்டு மாகாணங்களினதும் சம்மதம் தேவை என்பதில் ஓரளவு உண்மை இருக்கின்றது. அப்படியானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை ஏன் முஸ்லிம் கட்சிகளின் தலைமைகளுடன் பேசவில்லை? முஸ்லிம்களின் இணக்கத்தை ஏன் இவ்வளவு காலமும் பெற முடியவில்லை? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசு டன் சேர்ந்து வடக்கு-கிழக்கு பிரிந்து இருக்க வேண்டும் என்பதற்காகவே, முஸ்லிம்களின் இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை' என்பதான குற்றச்சாட்டையும் அவர் முன்வைத்திருந்தார்.

வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பான விடயம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் பத்திரிகையாளர் சந்திப்பைத் தொடர்ந்தே தற்போது பேசுபொருளாகியிருக்கின்றது. அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பான விடயத்தில் தெளிவான- திடமான கருத்தை முன்வைத்திருந்தார்.

குறிப்பாக, 'இரண்டு மாகாணங்களின் சம்மதத்துடன் இணைப்பு மேற்கொள்ளலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு வடக்கு-கிழக்கு இணைப்புத்தான். அது இடைக்கால அறிக்கையிலும் அச்சடிக்கப்பட்டுள்ளது. எனது தனிப்பட்ட நிலைப்பாடும் அதுதான். ஆனால் இப்போது உடனடியாக அது சாத்தியமில்லை. இது எப்போதும் சாத்தியமில்லை என்று கூற மாட்டேன். கிழக்கு மாகாண முஸ்லிம்களுடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட விரிசல்கள் சரி செய்யப்பட வேண்டும். முஸ்லிம் காங்கிரசுடன் வடக்கு -கிழக்கு இணைப்புத் தொடர்பில் பல சுற்றுக்கள் பேசியுள்ளோம்' என்று குறிப்பிட்டிருந்தார்.

வேண்டாப் பெண்டாட்டி கை பட்டாலும் குற்றம், கால்பட்டாலும் குற்றம் என்பதைப் போல், சுமந்திரன் எதைச் சொன்னாலும் அதனை தலை கீழாக புரட்டிப்போடுவது அல்லது அதனை மறுதலிப்பது என்பதுதான் இப்போதைய கூட்டமைப்புக்கு எதிரான விமர்சகர்களின் நிலையாகக் காணப்படுகிறது.

புத்தி எழுத்து

கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அதனடிப்படையிலேயே, கூட்டமைப்பு முஸ்லிம்களு டன் பேசவில்லை என்று பச்சையாகப் பொய்யுரைத்திருக்கின்றார். முஸ்லிம்களுடனான உறவில் விழுந்த விரிசல்களைச் சீர் செய்வதற்கு கூட்டமைப்பு குறிப்பாக எம்.ஏ.சுமந்திரன் முயல்வது, க.குமாருக்கு நன்றாகவே தெரிந்திருந்தும் இப்படியான பொய்யை புனைந்து கொண்டுள்ளார். வடக்கிலிருந்து 1990ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதை, எம்.ஏ.சுமந்திரன் இனச்சுத்திகரிப்பு என்று பகிரங்கமாகவே கூறியிருந்தார். முஸ்லிம்களுடனான இணக்கத்துக்காக கடந்த கால உறவுகளை மறுசீரமைக்குமாறும் அவர் கூறியிருந்தார். சுமந்திரன் இப்படிக் கூறியதும், அவரைத் துரோகியாகக் காண்பிக்கும் நோக்குடன் க.குமார் பேசியதை அவர் மறந்திருக்கலாம். ஆனால் மக்கள் மறந்திருக்க வாய்ப்பில்லை.

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்களின் சம்மதத்தை எப்படியாவது பெற்றுவிட வேண்டும் என்ற நோக்குடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை விமர்சித்து விட்டு, இன்று எதுவும் தெரியாததைப் போன்று, கூட்டமைப்பு முஸ்லிம்களின் இணக்கத்தைப் பெறுவதற்கு இன்று வரை என்ன செய்தது? என்று க.குமார் கேட்பதை, அவரின் அரசியல் வறுமைக்காகச் சொல்லும் பொய்யுரையாகவே பார்க்க வேண்டியுள்ளது. அதைத் தாண்டிய தாய் வேறு எதையும் சொல்ல முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை
சிறியதெனில்
சாமியிடம்
போய்விடு...
பிரச்சினை
பெரியதெனில்
சாமியாராகவே
போய்விடு!



**வாலு**
வளர்வது சேமிப்பாக இருந்தால் எதிர்கால வாழ்க்கையே ஆச்சரியக் குறி ஆகிவிடும்...!
வளர்வது கடனாக இருந்தால் எதிர்கால வாழ்க்கையே கேள்விக் குறி ஆகிவிடும்...!

**றோட்ல தான் பொண்ணுங்கள பாலோ பண்ண முடியல பேஸ்புக்லயாச்சும் பண்ணலாமேன்னு போனா,**



**அங்க எல்லாப் பயலுகளும் பேக் ஐடில சுத்துறாய்ங்க...!**

# ஹொலிவூட்டில் கால்பதித்தார் ஏ.ஆர். ரகுமானின் தங்கை



ஏ.ஆர். ரகுமானுக்கு 3 சகோதரிகள், மூத்தவர் ரைஹைனா. இவருடைய மகன்தான் இசை அமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ். இன்னொருவர் பாத்திமா. இளையவள் இஷ்ரத் காதரி. இவரும் இணைந்து கொண்டு அண்மையில் ஹொலிவூட் படம் ஒன்றுக்கு இசையமைத்துப் பாடியுள்ளனர். இலங்கைத் தமிழரான ராஜு திருச்செல்வன் அந்தப் படத்தை இயக்கி இருக்கிறார். அந்த வாய்ப்பு குறித்து கருத்துரைத்துள்ள இஷ்ரத், "அண்ணன் ஏ.ஆர்.ரகுமான் இசை நிகழ்ச்சிகளில் நான் பாடுவேன். 'ஐ' படத்தின் தெலுங்குப் பதிப்புருவில் என்னோடு நீ இருந்தால் பாடலை பாடி இருக்கிறேன். ஐ.நா.சபையில் அண்ணன் நடத்திய நிகழ்ச்சிக்காக முன்னாயத்தம் செய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே ராஜ் திருச்செல்வன் என்னைச் சந்தித்து இந்த வாய்ப்பை கொடுத்தார். அது ஹொலிவூட் படமாக இருந்தாலும் கனவுகள் பலித்தது என்ற தமிழ் பாடல் அதில் இடம் பெறுகிறது. நானும் கவிஞர் குட்டி ரேவதியும் சேர்ந்து எழுதியிருக்கிறோம். நான் பாடி, இசையமைத்தும் இருக்கிறேன். சென்னையில் ஒலிப்பதிவு இடம்பெற்றது. பாடலை கேட்ட அண்ணன் பாராட்டினார்.

ஸ்ரீதேவி நடிப்பில் உருவாகும் 'மாம்' படத்தின் தமிழ் பதிப்பில் 'ராட்சத தீ ஒன்று' என்ற பாடலை பாடியிருக்கிறேன். இந்த படத்துக்கு அண்ணன் தான் இசை அமைத்துள்ளார். அவரைப்போல யாருமே அர்ப்பணிப்பு உணர்வுடன் வேலை செய்ய முடியாது" என்றார்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 5 | |
| | | 8 | 9 | 6 | | | 2 | 4 |
| | 9 | | 7 | | | | 8 | |
| | | | | 1 | | | | 6 |
| | 3 | 5 | 6 | | | 2 | 1 | |
| 8 | | | | 3 | 2 | | | |
| | 2 | | | | 6 | | 9 | |
| 6 | | 9 | 2 | 4 | 8 | | | |
| | 8 | | | | | | 6 | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 9 | 8 | 6 | 7 | 3 | 2 | 5 |
| 7 | 8 | 3 | 2 | 9 | 5 | 1 | 6 | 4 |
| 6 | 5 | 2 | 1 | 3 | 4 | 9 | 7 | 8 |
| 3 | 9 | 5 | 7 | 4 | 6 | 8 | 1 | 2 |
| 8 | 1 | 7 | 3 | 5 | 2 | 4 | 9 | 6 |
| 4 | 2 | 6 | 9 | 1 | 8 | 7 | 5 | 3 |
| 2 | 3 | 1 | 5 | 8 | 9 | 6 | 4 | 7 |
| 5 | 6 | 8 | 4 | 7 | 1 | 2 | 3 | 9 |
| 9 | 7 | 4 | 6 | 2 | 3 | 5 | 8 | 1 |

சுடோக்கு
ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**ஏண்டா நேற்று டல்லாயிருந்தே? நேற்று புடவை வாங்குறேன்னு போய் 20 ஆயிரம் ருபா புடவையை என் தர்மபத்தினி வாங்கிட்டு வந்தா சரி இன்னிக்கு ஏன் சந்தோஷமா இருக்கே?**



**அவ புடவைய உன் பொண்டாட்டிக்கு காட்டப் போயிருக்கா...**

**வர வர என் புருஷன் ரொம்ப மோசமாகிட்டே இருக்காரு மேடம்...**
**ஏன்... குடிச்சிட்டு வந்து ரொம்ப சண்டை போடுறாரா...?**



**இல்லை...டாக்டர் கொடுத்த ரொனிக்கைக்கூட ஊறுகாய் இருந்தாத்தான் குடிப்பேன்னு அடம் பிடிக்கிறாரு மேடம்...!**

"உன்னைத் தேவையில்லை என்று முடிவு செய்தவர்களுக்கு நீ எதைச் செய்தாலும் தவறாகவே தெரியும்"
-ரமண மகரிஷி

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** குடும்பத்தினர் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் ஓரளவுக்கு இருக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றங்களைச் செய்வீர்கள்.

**இடபம்:** மதி நுட்பத்துடன் செயற்பட்டு சோதனைகளை வெல்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் பெருகும். மக்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** திட்டமிட்டபடி செயல்கள் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். குடும்பத்தினருடன் விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**கடகம்:** அடுத்தவர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். குடும்பத் தேவை ஓரளவு பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில் வரும் இடையூறுகளை சரிசெய்வது நல்லது. லாபம் ஓரளவுக்கு இருக்கும்.

**சிங்கம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பெண்களுக்கு உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**கன்னி:** கடந்த கால நற்செயலுக்கான நற்பலன்கள் தேடி வரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணக்கடனில் பெரும்பகுதி அடைபடும். பெண்கள், அக்கம் பக்கத்தினரின் அன்பை பெறுவர்.

**துலாம்:** சிரமம் குறுக்கிட்டாலும் முயற்சிக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் போட்டியை எதிர் கொள்வீர்கள். இலாபம் ஓரளவுக்கு இருக்கும். பணியாளர்கள் [illegible] ஆளாவர்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். வருமானம் உயரும். பெண்களுக்கு வீட்டுத் தேவை குறைவின்றி நிறைவேறும்.

**தனுசு:** யாருக்கும் தேவையற்ற வாக்குறுதி வழங்க வேண்டாம். பணியாளர்கள் பணியிடத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது. பெண்கள் வீட்டுச் செலவுக்கு திண்டாட நேரிடலாம். நண்பரால் உதவி கிடைக்கும்.

**மகரம்:** சமயோசிதமாக செயற்பட்டு முன்னேறுவீர்கள். குடும்பத்தில் நிம்மதியும், மகிழ்ச்சியும் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி அளிக்கும். சுப விடயத்தில் உறவினர்களின் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** குடும்பத் தேவை குறைவின்றி நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சி கண்டு மற்றவர் வியப்படைவர். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவர். விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**மீனம்:** பெருந்தன்மையுடன் நடந்து சுய கௌரவம் பாதுகாப்பீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டில் பிள்ளைகளுக்கான கடமைகள்



- வீட்டில்தான் எமது வாழ்க்கை ஆரம்பிக்கிறது.
- எமது பெற்றோர் எமது மகிழ்ச்சிக்காக ஆடைகளையும் விளையாட்டுப் பொருள்களையும் புத்தகங்களையும் வாங்கித் தருகிறார்கள்.
- ஆதலால் எமது பெற்றோர்களை மதித்தும் கீழ்ப்படிந்தும் நடப்பது எமது கடமையாகும்.
- எமது சகோதர சகோதரிகளிடமும் உறவினர்களிடமும் அன்புடனும் பரிவுடனும் நடந்து கொள்ள வேண்டும்.
- எம்மையும் எமது ஆடைகளையும் நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
- குளித்தல், கை கால்களைக் கழுவுதல் காலை இரவு என இரு வேளைகளில் பல் துலக்கல் நகம் வெட்டுதல் துணிகளைத் துவைத்து காய வைத்தல் போன்ற செயல்களைநாமே கூடியவரை செய்து கொள்ள வேண்டும்.
- இவற்றுக்கு பெற்றோரை நாடி நிற்கத் தேவையில்லை.
- படுக்கை, போர்வை, படுக்கை விரிப்பு போன்றவற்றை வாரத்துக்கு ஒரு முறை வெயிலில் உலர்த்த வேண்டும்.
- அழுக்குத் துணிகளைக் கண்ட கண்ட இடங்களில் போடாமல் கூடை ஒன்றில் போட்டு வைத்து எம்மால் சலவை செய்யக் கூடியவற்றை நாமே சலவை செய்தல் வேண்டும்.
- உலர்ந்த துணிகளை எடுத்து இஸ்திரி போட்டு ஒழுங்காக மடித்து வைத்தல் வேண்டும்.
- எப்போதும் எளிமையான காலநிலைக்கு ஏற்படி வெப்பமான காலநிலையில் பருத்தி ஆடைகளையும், குளிரான காலநிலையில் பட்டு, கம்பளி ஆடைகளையும் அணிய வேண்டும்.
- பாடசாலைக்கு சீருடை அணிந்து செல்ல வேண்டும்.
- படிக்கும் மேசை, படுக்கை அறை, உடுப்பு அலுமாரி என்பவற்றைத் துப்புரவாகவும் ஒழுங்காகவும் அடுக்கியும் வைத்திருக்க வேண்டும்.
- வீட்டையும் சுற்றுப் புறத்தையும் எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
- உணவு உண்ணும் போது கைகளை நன்றாகச் சுத்தம் செய்த பின்னர் உரிய முறைகளில் உண்ண வேண்டும்.
- சுட்டாறிய நீரைக் குடிக்க வேண்டும்.
- எளிமையான சத்துள்ள உணவுகள் பழங்கள், காய்கறிகள், இறைச்சி, மீன், பால், முட்டை என்பவற்றைச் சாப்பிட வேண்டும்.
- பச்சைக் காய்கறிகள் இலை வகைகள் பழங்கள் என்பனவற்றைத் தினமும் உண்ண வேண்டும்.
- தினமும் 3 வேளை உணவைக் கட்டாயம் உண்ண வேண்டும்.
- காலையில் அல்லது மாலையில் சிறிது நேரம் யோகா, உடற்பயிற்சிகள் (சிறிய) செய்ய வேண்டும்.
- மாலையில் காற்றாட சிறிது தூரம் நடக்கலாம். அல்லது கடற்கரைக்குச் செல்லாம்.
- இரவில் பாடங்களைப் படித்து விரைவில் நித்திரைக்குச் செல்ல வேண்டும்.
- அதிகாலையில் 5 மணிக்கு எழுந்திருந்து காலைக்கடன் முடித்து படிக்க வேண்டும்.

## "இதைத்தான் படிப்பேன்"



"ரொபேர்ட்! எழுந்திரு" என்றார் தலைமை ஆசிரியர். ரொபேர்ட் என்ற அந்த மாணவன் எழுந்து நின்றான். "நீ லத்தின் மொழியில் மிக மிகப் பின் தங்கிய நிலையில் இருக்கிறாய். அதைக் கற்றுக் கொள்வதில் போதிய ஆர்வம் காட்டுவதாகவும் தெரியவில்லை. ஏன் இப்படி இருக்கிறாய்? படிப்பில் கெட்டிக்காரனான நீ, இப்படி இருப்பதை நான் விரும்ப வில்லை" என்றார் ஆசிரியர். "சேர்! லத்தீன் மொழி எனக்குப் பிடிக்கவில்லை" என்றார். ரொபேர்ட்அமைதியுடன் அதைக் கேட்ட தலைமை ஆசிரியருக்கு அதிர்ச்சி. "என்ன லத்தீன் மொழி பிடிக்கவில்லையா, ஏன்?" "அதில் என்ன இருக்கிறது படித்துத் தெரிந்து கொள்ள?"ஆசிரியர் "ரொபேர்ட் உனக்கு என்ன ஆகிப் போனது?. லத்தீன் எத்தனை பழமையான மொழி தெரியுமா? உயர்ந்த கருத்துகளும் இலக்கியங்களும் அதில் இருக்கின்றன. அதைக் கற்றுக் கொண்டால் அறிவில் சிறந்தவனா வாய் நீ. அத்தகைய அரிய அழகிய மொழியைப் படிக்க மாட்டேன் என்று சொல்கிறாயே! வெட்கக்கோடு" என்றார் தலைமை ஆசிரியர்.

"சேர் அந்த மொழி எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும் . ஆனால் எனக்கு அதனைப் படிக்கப் பிடிக்கவில்லை. யாராவது படித்து அர்த்தம் சொன்னால் தெரிந்து கொள்கிறேன். ஆனால் நானாக அக்கறை எடுத்து வாயில் நுழையாத அந்த மொழியை ஒரு போதும் படிக்க மாட்டேன்" என்றார் ரொபேர்ட்.

"என்ன நீ இப்படிப் பேசுகிறாய்? ஒரு மொழியைத் தெரிந்து கொள்வது நல்லதுதானே! சரி போகிறது விடு. கிரேக்க மொழியைக் கற்றுக் கொள். அது நல்ல மொழி" என்றார் தலைமை ஆசிரியர்.

"மன்னிக்க வேண்டும் சேர். அந்த மொழியும் எனக்குப் பிடிக்கவில்லை" என்றார் ரொபேர்ட்.

இந்தப் பதிலைக் கேட்டதும் தலைமை ஆசிரியருக்கு கடும் கோபம் வந்தது.

"லத்தீனும் படிக்க மாட்டாய். கிரேக்கமும் வேண்டாம். வேறு எதைத்தான் படிப்பாய்" என்று கத்தினார் ஆசிரியர். " சேர் நான் ஜேர்மன் மொழியைக் கற்றுக் கொள்ளப் போகிறேன். அதில் தான் விஞ்ஞான நூல்களும் கணித நூல்களும் நிறைய இருக்கின்றன. வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானவை. விஞ்ஞானமும், கணிதமும்தான் லத்தீன் மொழியில் இலக்கியமும் கவிதைகளும் கொண்ட நூல்களே உள்ளன. கிரேக்க மொழியிலும் அப்படித்தான். இவை வாழ்க்கையின் முன்னேற்றத் துக்கு எந்த வகையில் உதவப் போகின்றன?" என்று கேட்டான் ரொபேர்ட்.

தலைமை ஆசிரியர் வாய் மூடி விட்டார். அதன் பின்னர் ரொபேர்ட் என்ற சிறுவன் ஜேர்மன் மொழியை விருப்பப்பாடமாக எடுத்துப் படித்தான். உலகமே வியக்கும் அளவுக்கு விஞ்ஞானியானான்.

அந்த விஞ்ஞானிதான் ரொபேர்ட் அலெக்ஸ்சாண்டர் வற்வன் என்ற ரேடர் கருவியைக் கண்டு பிடித்த விஞ்ஞானி.

விமானிகளுக்கும் கப்பல் ஓட்டும் மாலுமிகளும் திசையை அறியவும் எதிரி நாட்டு விமானமோ கப்பலோ அனுமதியின்றி கடல் எல்லைகளுக்குள் ஊடுருவுவதைக் கண்டு பிடிக்கவும் இந்த ரேடார் கருவி பயன்படுகிறது.

**படிக்கின்ற போதே தன்னம்பிக்கையுடன் எவற்றைப் படித்தால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்பதை நன்கு உணர்ந்து படிக்க ஆரம்பித்தால், வெற்றி நிச்சயம். பெற்றோரும் கல்வியில் பிள்ளைகளின் விருப்பத் தெரிவுகளுக்கு ஆதரவும் ஊக்கமும் கொடுக்க வேண்டும்.**

## பணமிருந்தாலும் பெற முடியாதவை

- படுக்கையை வாங்கலாம்; உறக்கத்தை வாங்க முடியாது.
- புத்தகத்தை வாங்கலாம்; அறிவை வாங்க முடியாது.
- உணவை வாங்கலாம்; பசியை வாங்க முடியாது.
- ஆடம்பரத்தை, அலங்காரங்களை வாங்கலாம்; அழகை வாங்க முடியாது.
- மருந்தை வாங்கலாம்; ஆரோக்கியத்தை வாங்க முடியாது.
- பகட்டை வாங்கலாம்; பண்பாட்டை வாங்க முடியாது.
- கேளிக்கைகளை வாங்கலாம்; மகிழ்ச்சியை வாங்க முடியாது.
- ஆயுதங்களை வாங்கலாம்; மகிழ்ச்சியை வாங்க முடியாது.
- நண்பர்களை வாங்கலாம்; உண்மை நண்பர்களை வாங்க முடியாது.
- வேலைக்காரர்களை வாங்கலாம் ; விசுவாசமானவர்களை வாங்க முடியாது.
- அமைதியான சூழ்நிலையை உண்டாக்கிக் கொள்ளலாம்; ஆனால் மனச்சாந்தியை வாங்க முடியாது.



## எண்களுக்குரிய பெயர்களை எழுதுவோம்

| எண் | எண் பெயர் |
|---|---|
| 1 | ஒன்று |
| 8 | |
| 4 | |
| 3 | |
| 6 | |
| 2 | |
| 5 | |
| 7 | |
| 9 | |
| 10 | |

## மீன் கொத்தி



மீன் கொத்தி உலகெங்கும் பரவலாகக் காணப்படும் ஒரு பறவையினமாகும். 90 வகையான மீன் கொத்தி இனங்கள் உலகில் உள்ளன. இவை பெரிய தலைகளும் நீண்ட கூரிய அலகுகளும் குட்டைக் கால்களும் சிறுவால்களும் கொண்டவையாகும். எடுப்பான நிறங்கள் கொண்ட இந்த மீன்கொத்தி இனங்களின் வகைப்பாட்டில் மூன்று குடும்பங்கள் உள்ளன. நீர் நிலைகள் அருகில் வாழ்வன சுழியோடி சிறு மீன்களைப் பிடித்து உண்ணுகின்றன. தவளைகள் பூச்சிகளையும் உண்கின்றன. இவற்றின் கண்கள் நீருள்ளும் வெளியேயும் பார்க்கக் கூடியதான முட்டை வடிவ வில்லைகளைக் கொண்டுள்ளன. மர மீன்கொத்திகள் தாம் பிடித்த இரையை மரத்தில் அடித்தோ கல்லில் வீழ்த்தியோ கொன்று உண்கின்றன. இவை உலகில் புவி முனைப் பகுதிகள் மிக வறண்ட சில பாலை வனங்களைத் தவிர எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. சில இனங்கள் பசுபிக் பெருங்கடலின் தென்கிழக்குப் பகுதிகளில் உள்ள தீவுகளிலும் காணப்படுகின்றன. ஐரோப்பா, வடஅமெரிக்கா , மெக்சிக்கோவின் வடபாகம் முதலியவற்றில் சிறிய எண்ணிக்கையில் இந்த மீன் கொத்தி இனங்கள் காணப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.குமாரின்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண் டவாறு கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் நீங்கள் (இரா. சம்பந்தன்) மறுவாழ்வு பெற்ற பின்னரே தேர் தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றதாகக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியது தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கூறப்பட்டது. இதற்குப் பதிலளித்த கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், "கஜேந்திரகுமார் பொன்னம்பல மும் அவரது கட்சியினரும் சிறுபிள்ளைத்தன மாக எம்மை வசைபாடி வருகின்றனர். இதைப் பற்றி நாம் அலட்டிக் கொள்ளத் தேவை யில்லை. அவர்களது இந்தக் கருத்துக்க ளுக்கு தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தல்க ளில் தக்க பாடம் புகட்டுவார்கள். கடந்த இரு தேர்தல்களில் தமிழ் மக்கள் தமது வாக்குக ளால் அவருக்கு பாடம் புகட்டி படுதோல்விய டையச் செய்தமையை அவர்கள் மறக்காமல் இருந்தால் சரி" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் அங்கத்துவக் கட்சிகள், கட்சி உள்விவ கரரம் தொடர்பில் சில விடயங்களைக் கூட்டத் தில் முன்வைத்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன், "புதிய அரசமைப்புக்கு எதிராக மகாநாயக்க தேரர் கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இவ்வா றான நிலையில் நாம் ஒற்றுமையாக ஐக்கிய மாக இருந்து, புதிய அரசமைப்பு நிறைவேற்றப் பாடுபட வேண்டும். சில்லறைத்தனமான பிரச்சினைகளுக்காக நாம் எமக்கிடையே முரண்படக் கூடாது. நாம் தொடர்ந்தும் எமக் குள்ளே முரண்பட்டுக் கொண்டிருந்தால், அது கடும்போக்கு பௌத்த சிங்களவர்களுக்கு சாதகமாகிவிடும். நாங்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது நிதானமாகச் செயற்பட வேண்டும். எங்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படும் வகையில் ஊடகங்க ளுக்கு அறிக்கை விடுவதை தவிர்க்க வேண் டும்" என்று தெரிவித்துள்ளார்.

**வடக்கு அமைச்சர்கள் விவகாரம்**

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களாக க.சர்வேஸ்வரன், திருமதி அனந்தி சசிதரன் இருவரும் நியமிக்கப்பட்டமை தொடர்பில் கூட்டத்தில் பேசப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர்கள், அனந்தி சசிதரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை இருக்கும் நிலையில் அவரை எப்படி அமைச்சராக நியமிக்கலாம். தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் அவரை நியமிக்க வேண்டாம் என்று கூறிய பின்னரும், அவ ருக்கு என்ன தகுதி இருக்கின்றது என்று முத லமைச்சர் அவரை அமைச்சராக நியமித்தார் எனக் கேள்வி எழுப்பினர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிவ சக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சருக்கு அடுத்தபடியாக விருப்பு வாக்குகளைப் பெற்றவர் அனந்தி சசிதரன். அவருக்கு அமைச்சுப் பதவிக்குரிய தகுதி உள்ளது என்று பதிலளித்துள்ளார்.

கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், 2013ஆம் ஆண்டு தேர்தலின்போது 4 அமைச்சர்கள் பற்றிக் கட்சிகள் பரிந்துரைத்தன. ஆனால் முதலமைச்சர் விக்னேஸ்வரன்தான் இறுதி யாக முடிவெடுத்தார். அதைப்போன்று தற் போதும் சகல கட்சித் தலைவர்களுடனும் முதலமைச்சர் கலந்துரையாடல் நடத்தினார். இறுதியில் அவர்தான் முடிவெடுத்தார். அதில் தவறில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

**ஓட்டப்பந்தயம் அல்ல**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர், "வடக்கு மாகாண முதலமைச்சர் இலங்கைத் தமிழ் அரசுக் கட் சியினதோ, கூட்டமைப்பினதோ சொல் கேட் கின்றார் இல்லை. அவர் தான் நினைத்தபடியே நடக்கின்றார். கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியதைப்போன்று இதனை நாம் கவனத்தில் எடுக்காமல், நாம் ஆமை போன்று நகர்ந்து வெற்றி இலக்கை அடைய வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், "இது ஒன் றும் ஓட்டப் பந்தயம் அல்ல. நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து வெற்றி இலக்கை அடைய வேண்டும்" என்று கூறியுள்ளார். (வ-5)

## இழுவைமடி மீன்பிடியில்...

கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் திருத்தச்சட்டவரைவு மீதான விவாதம் நாடா ளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மீனவர்கள் இழுவைமடித் தொழிலை தடைசெய்யக் கோரும் கோரிக்கைகளை தொடர்ச்சியாக முன்வைத்து வந்தார்கள். இந்த மீன்பிடி முறைமையானது கடல்வளங் களை அழிக்கும் பாரதூரமான விடயம் என்று பன்னாட்டுச் சமூகத்தால் வரையறுக் கப்பட்டுள்ளது. எமது நாட்டில் இந்தச் சட்டத் தைக் கொண்டு வருவதற்கு இத்தனை காலம் சென்றிருக்கின்றது.

இழுவை மடி மீன்பிடி குறித்து தீர்மானம் எடுப் பதற்கு இராஜதந்திர விடயங்கள் சிலவற்றை கவனிக்க வேண்டியிருந்தது. இந்திய மீனவர் கள் இலங்கைக் கடற்பரப்பினுள் பிரவேசித்து இந்த முறையில் மீன்பிடித்துச் செல்கின்றார் கள். இந்தியாவும், இலங்கையும் அயல் நாடு கள் என்ற அடிப்படையில் இராஜதந்திர ரீதியில் அணுகவேண்டியிருந்தது.

இந்திய அரசுடன் பேச்சு நடத்தினோம். இழு வைப்படகு முறைமை நிறுத்தப்பட வேண்டும் என்ற கொள்கை ரீதியிலான இணக்கப்பட் டுக்கு இந்திய அரசு வந்திருந்தது. இருநாட்டு மீனவர்களுக்கிடையிலான பேச்சுகளின் போது இந்த மீன்பிடி முறைமையின் பாதிப்பை உணர்ந்து அது கைவிடப்படவேண்டும் என்ற கொள்கையளவிலான இணக்கம் ஏற்பட்டி ருந்தது.

சிறு நீரிணையால் பிரிந்திருக்கும் இரு நாடு களுக்கு மத்தியில் காணப்படும் கடல் எல்லை களை மீனவர்கள் மீறுவது சாதாரண விட யம். ஆனால் இழுவைப்படகு முறைமையைப் பாவித்து பயன்படுத்தி திட்டமிட்ட முறையில் மீறல்களைச் செய்து மீன்பிடியில் ஈடுபடுவது உகந்த செயற்பாடொன்றல்ல. இந்தியப் படகு கள் எதேச்சையாக கடல் எல்லைகளை மீறு வதில்லை. திட்டமிட்ட முறையில் எங்கு வளங் கள் காணப்படுகின்றன என்பதை அடையா ளம் கண்டு உள்நுழைகின்றன.

**உள்ளூர் மீனவர்களும் பாவிக்கின்றனர்**

இழுவைமடி மீன்பிடி முறைமையை எமது மீனவர்களும் பயன்படுத்துகின்றனர். அந்த மீனவர்களுடன் நாம் இந்த விடயம் குறித்து பேசியுள்ளோம். சூழலுக்கு காணப்படும் தீங்கை நான் சுட்டிக்காட்டியிருந்தேன். அவர் கள் அதனை ஏற்றுக்கொள்கின்றார்கள். அவர் கள் கடலில் உள்ள சேற்று நிலப்பகுதியில் சொற்ப கடற்பரப்பில்தான் இத்தகைய மீன்பி டியை மேற்கொள்கின்றோம் என்று கூறுகின் றார்கள். சிறிய விசைப்படகின் மூலமே மீன் பிடியில் ஈடுபடுவதாகவும் கூறுகின்றார்கள். இங்கு படகின் விசை, அளவுபிரமாணம் முக்கிய மானதல்ல. இவ்வாறான முறைமையை மேற் கொள்வதானது பாதிப்புக்களை ஏற்படுத்தாது என்று விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்படுமா யிருந்தால் அதனை தடைசெய்ய வேண்டியி ருக்காது. இதற்கான திருத்தமொன்றை நான் குழு நிலையில் மேற்கொள்ளவுள்ளேன்.

**மாற்றுவழிக்காக உதவிதேவை**

இந்தியாவில் இவ்வாறான தொழிலில் ஈடுபட் டவர்கள் மாற்றுத் தொழிலில் ஈடுபடுவதற்கு நிதி வழங்கப்பட்டதன் விளைவால் அந்த எண் ணிக்கை தற்போது வெகுவாக குறைவடைந் துள்ளது. எமது நாட்டில் இவ்வாறான தொழி லில் ஈடுபடுவர்களுக்கு மாற்றுத்தொழில் ஈடுபடுவதற்கான வழிமுறைகளையும் மானி யங்களையும் வழங்க வேண்டும். இந்த முறையைத் தடுப்பதாக இருந்தால் தண் டனை வழங்குதல், தண்டப்பணம் விதித்தல் ஆகியவற்றின் ஊடாக முழுமையாகத் தடுக்க முடியாது. நான் சட்டவரைவை சமர்ப்பித்த தருணத்தில் இம்முறை மீன்பிடியில் 300 படகுகள் ஈடுபட்டபோதும் தற்போது 1500ஆக அதி கரித்துள்ளது. அது குறித்து கவனம் செலுத்தி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**குருநகர் குறித்து சிறப்புக் கவனம்**

குருநகர் பிரதேசத்திலே மீன்பிடித் துறைமுகம் அமைப்பதென வாக்குறுதி வழங்கப்பட்டது. அதனை நிறைவேற்ற வேண்டும். இழுவை மடி மீன்பிடி முறையை அதிகளவில் குருநகர் பகுதியில் உள்ளவர்களே மேற்கொண்டு வரு கின்றனர். அவர்கள் இம்முறையை கைவிடு வதற்கு, அங்கு துறைமுகத்தை விரைந்து அமைப்பது வழியமைக்கும் என்பதை கவ னத்தில் கொள்ளுங்கள்.

அண்மையில் மயிலிட்டி மீன்பிடித்துறை முகம் மக்களிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தத் துறைமுகம் விடுவிக்கப்பட்டாலும் மக் கள் வாழ்வதற்கான வீடுகள் விடுவிக்கப்பட வில்லை. பாதைகள் விடுவிக்கப்படவில்லை. ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை. மெதுவாக நடைபெறுவதன் அவ்வாறான மாற்றத்தை அறியமுடியாதவர்களாக இருக் கின்றார்கள். எமது நாடு என்று மக்கள் சொல் வதற்கு முதற்படியாக அவர்களின் சொந்த நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும். அவ்வாறு விடுவிக்கப்படுகின்றபோதுதான் 'சொந்த மண்ணில் இருக்கின்றேன். இது எனது சொந்த நாடு' என்ற சிந்தனை அந்த மக்களின் மனதில் உருவாகும் - என்றார். (வ-5)

## புதிய...

மாகவும் மகிந்த அணியான பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த் தன எழுப்பிய கேள்விகளால் சபையில் நேற் றுக் கடும் சர்ச்சை ஏற்பட்டது. இது தொடர்பில் ஆளும் எதிரணி உறுப்பினர்களிடையே சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. நாடாளுமன்றம் நேற்றுக் கூடியது. மீன்பிடி அமைச்சு குறித்த விவாதம் ஆரம்பமானது. விவாதத்தின் நடுவில் ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பி சர்ச்சைக்கு தொடக்கப் புள்ளி வைத்தார் பொது எதிரணியின் தலை வர் தினேஷ் குணவர்த்தன.

"ஒற்றையாட்சி என்ற சொற்பதத்தில் தொடர்ந் தும் சர்ச்சை நீடிக்கின்றது. தமிழில் ஒருமித்த நாடு என இருக்கின்றது. அதன் ஆங்கில சொற்பதம் வழங்கப்படவில்லை. பௌத்த மதத்துக்குரிய முன்னுரிமை குறித்தும் மாற்று வழிகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசமைப்பு குறித்து பண்டாரநாயக்க பன் னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நடத்தப்பட்ட கருத்தரங் கில் வழிநடத்தல் குழுவின் அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டுள்ளது. அது இரகசியமல்ல. அதில் பல விடயங்கள் உள்ளன.

இதையடுத்தே மகாநாயக்க தேரர்கள் விசேட அறிவிப்பொன்றை விடுத்தனர். எனினும், "மகாநாயக்க தேரர்கள் அச்சப்படத் தேவை யில்லை. மக்கள் ஆணைப்படி பணி தொடரும்" என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இவர் நாட்டைத் தவறாக வழிநடத்தும் வகையில் சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார்" என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க,

"அரசமைப்புப் பணி இன்னும் இறுதிப்படுத் தப்படவில்லை. அதனுடன் தொடர்புடைய எந்தவொரு அறிக்கையும் உத்தியோகபூர்வ மாக வெளியிடப்படவில்லை. வழிநடத்தல் குழுவில் தொடர்ச்சியாகப் பேச்சுகள் நடத்தப் பட்டு வருகின்றன. அறிக்கை அரசமைப்புச் சபையான நாடாளுமன்றத்துக்கே வழிநடத் தல் குழுவால் சமர்ப்பிக்கப்படும். நிலைமை இப்படி இருக்கையில் தினேஷ் குணவர்த்தன கூறுவதுபோல் அறிக்கை வெளியாகிருக்குமா னால் அது பாராதூரமான விடயமாகும்" என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க,

"வழிநடத்தல் குழுவின் அறிக்கை அரசமைப் புச் சபைக்கே சமர்ப்பிக்கப்படும். அந்த அறிக்கை இன்னும் இறுதிப்படுத்தப்படவில்லை. எனி னும், பலதரப்பினரிடமிருந்தும் பல்வேறு வகையான யோசனைகள் கிடைக்கப்பெற் றுள்ளன. அவற்றின் சாராம்சம் தொகுக்கப்பட் டுள்ளது. எந்தச் சந்தர்ப்பத்திலும் பௌத்த மதத் துக்குரிய முன்னுரிமை முக்கியத்துவம் நீக் கப்படாது. இது பற்றி மகாநாயக்க தேரர்களுக் கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது" என்று குறிப் பிட்டார். இதன்போது முன்னாள் அரச தலை வர் மகிந்த ராஜபக்சவும் சபையில் இருந்தார். விளக்கமளித்த பின்னர் அவையிலிருந்து வெளியேறிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சிறிது நேரத்தின் பின்னர் சில ஆவணங்களுடன் அவைக்குள் வந்தார்.

"பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண் படத்தில் இந்த அறிக்கைகளே வழங்கப்பட் டுள்ளன. அரசமைப்பு இன்னும் இறுதிப்படுத் தப்படவில்லை" எனக் குறிப்பிட்டு அவற்றைச் சபையில் ஆற்றுப்படுத்தினார். அதன்பின்னர் சர்ச்சை ஓய்ந்தது. (து)

## மகிந்த...

தெரிவித்தார். கல்கமுவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டதாக, அரசதலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள் ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி இந்த நாட்டிலிருந்து ஏகாதிபத்திய ஆட் சிக்கு நான் முடிவு கட்டினேன். அத்தகைய ஆட்சிக்கு இந்த நாட்டில் மீண்டும் இடம் கிடை யாது. முகமூடியைப் போட்டுக்கொண்டு மக் களுக்கு அல்லதொரு உலகைக்காட்டி மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு சிலர் மேற்கொண்டுவரும் சதித்திட்டங்கள் குறித்து இன்று நாட்டு மக்கள் தெளிவுடன் இருக்கின் றனர்.

தற்போதைய அரசு தோல்வியடைந்த அரசு என்று சுட்டிக்காட்டி, அபிவிருத்தி குறித்து போலியான பிம்பங்களை சிலர் ஏற்படுத்தி வருகின்றவர்கள். அன்று அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொண்ட அனைத்து ஊழல், மோசடிகளையும் நாட்டு மக்களுக்கு தெளிவு படுத்த அரசு தயாராகவுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதி, அரச தலைவர் தேர்தலுக்கு முந்திய தினமான எந் தவொரு அரசு நிறுவனமும் கடமையில் இல் லாத தினத்தில் ஜின், நில்வள கங்கைத் திட்டத் துக்கு கோடிக்கணக்கில் காசோலை மோசடி இடம்பெற்றமை தொடர்பிலான விடயங்கள் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த நிதிக்கு என்ன நடந்தது? என்பது பற்றி மக்கள் விரைவில் தெரிந்து கொள்ள முடியும். எந்தவிதமான சாத்தியவள ஆய்வுமின்றி அரசியல் தீர்மானங்களின்படி மோசடியாக ஆரம்பிக்கப்பட்ட உமா ஓயா திட்டம் நாட்டுக்கு ஏற்படுத்தியுள்ள அழிவுகள் சாதாரணமான வையல்ல. அது தொடர்பான சரியான தகவல் கள் தற்போது மேற்கொள்ளப்படும் ஆய்வுக ளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கு முயற் சித்துவரும் அதிகார வெறிபிடித்த அரசியல் சூழ்ச்சியைத் தோல்வியடையச் செய்வதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஆட்சி யைக் கவிழ்ப்பதற்காகவன்றி நாட்டையும் மக்களையும் வறுமையிலிருந்து விடுவிப் பதற்கும் கடந்த அரசு விட்டுச் சென்ற கோடிக் கணக்கான கடன் சுமையிலிருந்து நாட்டை விடுவிப்பதற்கும் நாட்டை அபிவிருத்தி செய் வதற்கும் அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஊடகங்கள் அரசை விமர்சிப்பதற்கும், விரும் பியவர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள வும் சுதந்திரத்தை வழங்கக்கிடைத்ததை யிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன் - என் றார். (வ-5)

## ஐ.நா...

எமர்சன் 5 நாள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு எதிர்வரும் 10ஆம் திகதி திங் கட்கிழமை இலங்கை வருகின்றார்.

பயங்கரவாத எதிர்ப்புச் செயற்பாடுகள் தொடர் பான துறையில் எடுக்கப்பட்டு வரும் முன்மு யற்சிகள் குறித்த நேரடித் தகவல்களைச் சேகரிப்பதற்கும், அந்தச் செயற்பாடுகள் மனித உரிமைகளின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு என்பவற்றின் மீது எவ்வாறு தாக்கத்தை எடுத்து வருகின்றன என்பதை மதிப்பீடு செய் வதற்கும் அவர் இந்த பயணத்தை மேற் கொள்கின்றார்.

"இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்புக் கொள்கை மற்றும் சட்டரீதியான சட்டம் என் பன தொடர்பான கலந்துரையாடலுக்கு உத வுவதற்கும், அதேபோல சம்பந்தப்பட்ட சட்டத் தின் தயாரிப்பு மற்றும் வரைவு உருவாக்கம் என்பன தொடர்பாக அரசால் முன்னெடுக் கப்பட்டு வரும் வழிமுறைகள் பன்னாட்டு மனித உரிமைகள் சட்டத்துக்கு அமைவாக இருந்து வருகின்றன என்பதனை உறுதிப்ப டுத்திக் கொள்வதற்கும் நான் உதவி வழங்கு வதற்கு முயற்சிப்பேன்" என்று தெரிவித்துள் ளார் பென் எமர்சன்.

இலங்கைக்கான தனது பயணத்தின்போது 5 உயர்மட்டச் சந்திப்புக்களை அவர் நடத்த வுள்ளார்.

அத்துடன் பயங்கரவாதக் குற்றச் செயல்கள் தொடர்பாகச் சந்தேகத்தின் கீழ் தடுப்பிலிருப் பவர்கள் அல்லது குற்றத் தீர்ப்பு வழங்கப்பட் டிருக்கும் நபர்களிடம் நேர்காணலை நடத்து வதற்கென தடுப்புக்காவல் நிலையங்களுக் கும் அவர் பயணம் செய்யவுள்ளார்.

கொழும்பு வரும் அவர், அநுராதபுரம், வவு னியா ஆகிய பிரதேசங்களுக்கும் செல்லவுள் ளார். (து)

## ஒன்றரை...

அமர்வு நடத்துவதற்கு 5 லட்சம் ரூபா வரை யில் தேவை என்று அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் நேற்றைய அமர்வு ஆரம்பமாகிய தும் அவைத் தலைவர் அறிவிப்பு இடம்பெற் றது. இதன்போது சில நகைச்சுவைக் கருத் துக்கள் சபையில் பரிமாறப்பட்டன. இதன் பின்னர், வடக்கு மாகாண சபையின் அமைச் சுக்கள் மீதான ஆராய்வு விவாதம் எப்போது நடத்துவது என்பது தொடர்பில் தீர்மானிக்க சுமார் அரை மணி நேரம் சபை உறுப்பினர் கள் விவாதம் நடத்தினர். அத்துடன் சபை அமர்வு முடிவுக்கு வந்தது. (வ-5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றச்சாட்டை ஏற்றார் முன்னாள் பிரதியமைச்சர்

சொத்து விவரங்களை வெளியிடாமல் இருந்த சம்பவம் தொடர்பில் மு ன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில், முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்தன நீதிமன்றில் தனது தவறை ஏற்றுக்கொண்டார்.

இது தொடர்பாக வழக்கு விசாரணை, கொழும்பு பிரதான மாவட்ட நீதிவான் லால் ரணசிங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள எதிரிக்கு, இந்த மாதம் 20ஆம் திகதி தண்டனை விதிக்கப்படும் என நீதிவான் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலை வராகச் செயற்பட்ட 2005/2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சொத்து விவரங்களை வெளிப்படுத்த தவறியமைக்காக கையூட்டு ஒழிப்பு ஆணைக்குழு, சரண குணவர்தனவுக்கு எதிராக இரண்டு வழக்குகளை தாக்கல் செய்துள்ளது. (ற-10)

## மகாநாயக்கர்...

வைத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள தாவது:

புதிய அரசமைப்பின் மாதிரி சட்டவரை வைத் தயாரிப்பதாயினும் அது தொடர்பாக மகா சங்கத்தினருக்கு தெரியப்படுத்தி அவர்களது கருத் துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

புதிய அரசமைப்புத் தொடர்பாக எந்தவொரு இறுதி ஆவணமும் இதுவரை தயாரிக்கப்படவில்லை. புதிய அரசமைப்புப் பற்றிய கலந்துரையாடல் தற்போது நாட்டில் நடைபெறுகின்றது. அரசால் அத்தகைய சட்டவரைவு தயாரிக்கப்படுமாயின் நாட்டின் எதிர்கால நன்மை மற்றும் உறுதிப்பாடு தொடர்பாக ஆழமாக ஆய்வுசெய்யப்பட்டதன் பின்னரே அது தயாரிக்கப்படும் - என்றார்.

நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் சமயம் தொடர்பாக மகா சங்கத்தினர் தமது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் இந்தக் கலந்துரையாடலின்போது முன்வைத்ததுடன், அவை தொடர்பான முன்மொழிவொன்றையும் அரச தலைவரிடம் கையளித்தனர்.

சியம் மகா நிக்காயவின் மல்வத்து பிரிவின் அதிவண. திப்பட்டுவாவே சிறி சுமங்கல மகாநாயக்க தேரர், அஸ்கிரி பிரிவின் அதிவண. வரக்காகொட சிறி ஞானரதன மகாநாயக்க தேரர், ராமஞ்ஞ நிக்காயவின் அதிவண. நாபான பேமசிறி மகாநாயக்க தேரர் உள்ளிட்ட பெருந்தொகையான மகா சங்கத்தினர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்- என்றுள்ளது. (வ-5)

## 5 அமைச்சு...

ணையை எடுக்க வேண்டாம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் கோரிக்கை முன்வைத்துள்ள போதிலும், இந்தப் பிரேரணை திருத்தங்களுடன் அடுத்த அமர்வில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று நடைபெற்றது. அவைத் தலைவர் அறிவிப்பின்போது, மாகாணத் தெரிவுக்குழு அமைக்கக் கோரும் பிரேரணை திருத்தங்களுடன் அடுத்த அமர்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினார். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எழுந்து, "அது எடுத்துக் கொள்ளவேண்டிய தேவை ஏற்படாது என்று நினைக்கின்றேன். உங்களுக்கு கடிதம் அனுப்பியிருக்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

இதன்போது அவைத் தலைவர், அடுத்த அமர்வில் திருத்தங்களுடன் எடுத்துக் கொள்ளப்படும். அதன்போது நீங்கள் இந்த விடயத்தை தெரி வியுங்கள். சபை தீர்மானிக்கட்டும் - என்றார்.

வடக்கு மாகாண சபையின் வழமையான அமர்வு எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும். (வ-5,8)

## பட்டதாரிகள்...

கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கொழும்பு கோட்டையில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் அரச தலைவர் செயலகம் வரை ஊர்வலமாகச் சென்றது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் அம்பாறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த வேலை தேடும் பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

அரச தலைவர் செயலகத்துக்குள் சென்று கலந்துரையாடலில் ஈடுபட ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களில் குறிப்பிட்ட அளவினருக்கு அனுமதி வழங்கப்பட்டது. மக்கள் தொடர்புப் பிரிவு அரச தலைவர் மேலதிக செயலருடன் தமது பிரச்சினைகள் தொடர்பில் தெரிவித்தனர் என்று கூறப்பட்டது.

அதேவேளை, ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும் பின் பல இடங்களில் போக்குவரத்து தடைப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-10)


**வாகனம் விற்பனைக்கு**

Mahendra maximo Plus VX, DAB XXXX (2015 Rg, அலுமினிய Full Body) விற்பனைக்கு உண்டு.
T.P-076 602 8865

**Vacancy**

40 வயதுக்கு மேற்பட்ட ஆங்கில அறிவும், வாசித்து அறிந்து கொள்ளும் திறமை உள்ளவரும் பொருள்களை ஏற்றி இறக்குவதிலும் Delivery செய்வதிலும் அனுபவம் உள்ளவர்கள் தேவைப்படுகின்றார்கள். விருப்பமுள்ளவர்கள் உங்கள் சுயவிவரக்கோவையை 15.07.2017 இற்கு முன் அனுப்பிவைக்கவும். E.P.F. & E.T.F. செலுத்தப்படும்.

**Ess Jey Electricals**
09, Stanley Road, Jaffna. 021 222 2564, 021 222 774

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1378
சீட்டிழுப்பு திகதி 2017.07.06
வெற்றி இலக்கங்கள் 03 18 20 41 O
23 26 27 46
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 14,646,512/-
www.dlb.lk

**SUPER BALL**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 672
சீட்டிழுப்பு திகதி 06.07.2017 வியாழக்கிழமை
Q 18 53 56 70
சுப்பர் ஜக்பொட் ரூ. 51,312, 384/=
வெல்லப்படவில்லை
05 22 29 51
நீல நிறடிக்கட்டுகள் 08.07.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

**Development Fortune**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 54
சீட்டிழுப்பு திகதி 06.07.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 20 27 50
சுப்பர் இலக்கம் 02
அதிர்ஷ்ட மாதம் ஓகஸ்ட்
ரூ. 13, 561, 990/= | ரூ.2, 000, 000/= | ரூ. 1, 264, 272/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
28 41 42 60
08.07.2017 ஆம் திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

**தேவை**

நல்லூரை அண்மித்த பகுதியில் இயங்கி வரும் அசைவ உணவகத்திற்கு கொத்து றொட்டி தயாரிப்பவர், பிறைற்றைஸ் தயாரிப்பவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
076 854 9164

A/L 2017 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் (ICT) பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு
**ICT SEMINAR**
**(10.07.2017 - Monday)**
Database, Programming & Networking
ஆகிய பிரிவுகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் பரீட்சைக்கு ஏற்றமுறையில் வழிகாட்டப்படும்.
( Limited to First 50 Students)
No.61, 3rd Floor, Palaly Road, Jaffna.
076 850 8894, 021 722 3444

**விற்பனையாளர் தேவை**

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. மேலும் கணினியில் அனுபவமுள்ள (பில் கிளார்க்) உடன் தேவை.
தொடர்புகளுக்கு - 071 013 6284, 076 328 3763

**பணிப்பெண் தேவை**

இருவர் கொண்ட குடும்பத்துக்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் உடன் தேவை.
021 226 0277
கந்தமுருகேசனார் வீதி, புலோலி தெற்கு.

**தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம்**
**ஆடிச்செவ்வாய்**

**கடை ஏலம்கூறல்**

எதிர்வரும் 09.07.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் எமது சங்க காரியாலய முன்றலில் கடை ஏலம்கூறல் நடைபெறும். ஏலத்தொகையை அன்றே செலுத்தி கடையின் அனுமதியை பெறவும். தவறின் கடை நிராகரிக்கப்படும்.
செயலாளர்,
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.



**கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய பெருவிழா - 2017**

மேற்படி பெருவிழா வழிபாடுகள் 30.06.2017 அன்று கொடியேற்றத்துடன்ஆரம்பமாகியுள்ளது. நற்கருணைப் பெருவிழா நாளை (08.07.2017) மாலை 5 மணிக்கும் திருவிழாத்திருப்பலி 09.07.2017 காலை 7 மணிக்கும் நடைபெறும்.
புனிதரின் ஆசிபெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு - 09.07.2017 அன்று காலை 6 மணிக்கு யாழ். பஸ்தியன் சந்தியிலிருந்து வாகன வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு - 077 687 2711
பங்குத்தந்தையும், பங்கு மக்களும்
புனித செபஸ்தியார் ஆலயம் கரம்பொன்.

**கண்ணீர் அஞ்சலி**



பிறப்பு :- 14.04.1957
இறப்பு :- 06.07.2017

தென்னை பயிர்ச்செய்கை சபை பளைப் பிரிவில் கடமையாற்றும் தென்னை அபிவிருத்தி உதவியாளர் செல்வி லோ.ருஷியா அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி தயாவதி லோகேஸ்வரன்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
நலன்புரிசங்கம்,
தென்னை பயிர்ச்செய்கைச் சபை,
யாழ்ப்பாணம்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தவப்பேறு 22.08.1938
சிவப்பேறு 07.07.2016
அராலியைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட
**சண்முகம் தையல்நாயகம்**



திதி - ஆனிமாத பூர்வபக்க சதுர்த்தி (27.06.2017)
காற்றாய் ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் பசுமையாக உம் நினைவுகள் எம் மனதில் நிறைந்துள்ளது.
மூளாய்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பினருக்கு...

இவ்வாறு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

பொருத்துவீடு தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால், சபை ஒத்திவைப்பு பிரேரணை நாடாளுமன்றில் நேற்றுக் கொண்டு வரப்பட்டது. இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், "பொருத்து வீடு பொருத்தமற்றது. 10 லட்சம் ரூபா வழங்கினால் மக்களே வீடுகளை அமைப்பார்கள். கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து தீர்மானம் எடுக்கும் அமைச்சர் வடக்கில் வனாந்தர வெளியில் வந்து வாழ்ந்து பார்க்க வேண்டும். இந்தத் திட்டத்தைப் பலவந்தப்படுத்த வேண்டாம். போரால் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் துயரத்துக்கு உள்ளாக்க வேண்டாம்" - என்றார்.

விவாதத்தில் உரையாற்றிய சாள்ஸ் நிர்மலநாதன், "டக்ளஸ் தேவானந்தா பொருத்து வீட்டுத் திட்டத்தை ஆதரித்து வருகின்றார். பொருத்து வீடு அமைக்கும் உடன்பாட்டை, பிரான்ஸ் நாட்டின் நிறுவனம் எடுத்திருந்தாலும் அதன் பணிப்பாளருக்குப் பல வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்க் கலாசாரத்தின் அடிப்படையில் கல் வீட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார்.

மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன, "நாம் முல்லைத்தீவுக்குச் சென்றோம். அங்கு வாழும் மக்களின் துயரத்தை பார்க்க முடிந்தது. குடிசைகள், கூடாரம் அமைத்து வாழ்கின்றனர். மகிந்த ஆட்சியின் போது பல வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தோம். வடக்கு மக்களுக்கு வீடுகளை உடன் பெற்றுக்கொடுக்க வேண்டும். பொருத்து வீட்டை ஏற்றுக்கொண்டவர்களுக்கு பொருத்து வீடு திட்டத்தை வழங்க வேண்டும்" - என்றார்.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, நான் பட்டி மன்றத்துக்காக இங்கு வரவில்லை. நான் பொருத்து வீட்டை ஆதரிக்கின்றேன். இந்தத் திட்டத்தில் அனுகூலங்கள் உள்ளன. நான் யாருக்கும் பலவந்தமாக திணிக்குமாறு கோரவில்லை" என்றார்.

அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா, மணல், சிமெந்து பாவனையின் ஊடாக வீடு நிர்மாணிக்கும் சம்பிரதாயத்தைக் கைவிட்டு வெளி நாடுகளைப் போன்று புதிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். எனவே வடக்கில் உள்ளவர்களுக்கு வீடுகளை வழங்க வேண்டும். விருப்பமானவர்களுக்கு மாத்திரமாவது வீடுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார்.

விவாதத்தின் இறுதியில் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் சுவாமிநாதன், "வீடுகளை அமைப்பதற்கான மண், மரம் போன்ற பொருள்களை எடுப்பது கடினம். சுற்றாடல் ரீதியான பிரச்சினை ஏற்படும் என்பதாலேயே பொருத்துவீட்டுத் திட்டத்துக்கு அரசு திட்டமிட்டது. ஆரம்பத்தில் பொருத்து வீடுகள் தளபாடங்களுடன் கொடுக்கத் திட்டமிட்டோம். தற்பொழுது தளபாடங்கள் இன்றி ஏனைய வசதிகளுடன் 6 ஆயிரம் வீடுகளை வழங்கவுள்ளோம்.

மக்களுக்கு எதிராகக் கதைப்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு எதிராக மக்கள் கிளம்புவார்கள். குடிசைகளில் இருக்கும் மக்களுக்கே வீடுகளை வழங்க அரசு முயற்சிக்கிறது. மாளிகையில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். மாற்றுத் திட்டம் முன்வைத்துள்ளோம் எனக் கூறுகின்றபோதும், கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினரும் திட்டத்துடனோ அல்லது அதற்கான நிதி யோசனையுடனோ என்னை வந்து பார்க்கவில்லை. கூட்டமைப்பினர் எவ்வளவுதான் சத்தம்போட்டாலும் 6 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம் கைவிடப்படாது" என்றார். (வ-5)

## புதிய அரசமைப்பை...

காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து ஆள்களைப் பாதுகாக்கும் பன்னாட்டுச் சமவாய சட்டவரைவு மீளப்பெறப்படவில்லை. அது மீண்டும் சமர்ப்பிக்கப்படும் என சபை முதல்வர் தெரிவித்துள்ள கருத்தை வரவேற்கின்றோம்.

நாட்டிலே முக்கிய சமயத் தலைவர்கள் விடுத்த கோரிக்கையையடுத்தே அரசு இது விடயத்தில் பின்வாங்கியது என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்தது. அப்படியொரு நிலை இருக்கமுடியாது இருக்கவும் கூடாது. நாட்டில் என்ன நடக்கவேண்டுமென நான்கு பேர் சேர்ந்து சட்டமியற்றக் கூடியதாக இருக்கும் என்றால் இந்த நாடாளுமன்றம் எதற்கு?

நாடாளுமன்றமே முதன்மையானது. மக்கள் இறைமை, சட்டவாக்க அதிகாரம் அதன் ஊடாக மட்டுமே செயற்படுத்தப்படவேண்டும். எனவே, இதற்கு மேலாக இன்னுமொரு உயர்ந்த சபை இருக்கமுடியாது. எனவே, அரசு முன்வைத்த காலைப் பின்வைக்கக் கூடாது. துணிவுடன் செயற்படவேண்டும்.

மக்கள் ஆணையின் பிரகாரம் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார். இது வரவேற்கப்படவேண்டிய விடயம். புதிய அரசமைப்பை உருவாக்கவே முதன்மைக் கட்சிகள் இரண்டும் இணைந்து கூட்டு அரசை அமைத்தன. இதற்காக மக்கள் ஆணையும் இருக்கின்றது.

புதிய அரசமைப்பைக் கொண்டுவர ஒன்றரை வருடகாலமாக நிறைய நேரம் செலவிடப்பட்டுள்ளது. பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. அனைத்து சமூகத்தையும் திருப்திப்படுத்தகூடிய வகையில் நடவடிக்கை இடம்பெறுகின்றது. அது சிறப்பாகக் கைகூட வேண்டும். அரசமைப்புத் தயாரிப்புப் பணி தோல்வியில் முடியக்கூடாது. அப்படி தோல்வியடையுமானால் இந்த நாட்டில் நல்லிணக்கம் தோல்வியடைந்ததாகவே சரித்திரத்தில் எழுதப்படும்.

70 வருடகாலமாகத் தீர்க்க முடியாதுள்ள பிரச்சினையை ஓரிரு வருடங்களுள் தீர்க்க முற்படும்போது தடங்கல்கள், இடையூறுகள் எதிர்ப்புகள் வரலாம். அவை வராது என்று நினைக்கவில்லை. நிச்சயம் வரும். எனினும், அரசு புறமுதுகுகாட்டி ஓடிவிடாது, தீர்வை நோக்கிப் பயணிக்கவேண்டும்.

அனைத்து மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்கின்ற ஏற்றுக்கொள்கின்ற ஓர் அடிப்படைச்சட்டம், இனங்களுக்கிடையிலான சமூக உடன்பாடு ஏற்படுத்தப்படவேண்டும். அப்போதே சுபீட்சமான நிலை ஏற்படும் - என்றார். (வ)

## இழுவைமடி...

பட்ட வகையிலான சிறைத் தண்டனை அல்லது 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறிவிடப்படும்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. தினப் பணிகள் முடிவடைந்த பின்னர், கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் திருத்தச் சட்டவரைவு மீதான விவாதம் ஆரம்பமானது.

விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் மகிந்த அமரவீர விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

அதன்பின்னர் ஆளும், எதிரணி உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட்டனர். சட்டவரைவு மாலையில் திருத்தங்களுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

குறித்த சட்டவரைவைத் தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இதற்கு முன்னர் கொண்டுவந்திருந்தார். எனினும், அவரின் அனுமதியுடன் அரசே அதை நேற்றுக் கொண்டு வந்தது. (த)

## குடும்பத்...

யன் குளத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

மரக்கறி கொண்டு சென்ற இவர் பட்டா ரக வாகனத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் புளியங்குளம் தள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அதற்கு திடீர் மரண விசாரணை அதிகாரி வராததால் வவுனியா பொது மருத்துவனைக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் புளியங்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## மாற்று...

அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய நிகழ்வில் கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்தார்.

கௌதாரிமுனை மண்ணித்தலை செபஸ்தியார் ஆலயத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மாற்றுசக்தி மின் நிலையம் அமையவிருக்கும் இடத்தை அமைச்சர் தலைமையிலான குழு சென்று பார்வையிட்டது. காற்று, சூரிய ஒளி என்பற்றைக் கொண்டு மாற்று மின்சக்தி நிலையங்களை உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். சூரியசக்தி மூலம் 800 மெகா வற்ஸும் , காற்றலை மூலம் 240 மெகா வற்ஸும் பெறக் கூடிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மூன்று பிரிவுகளாக நடைபெற உள்ள இந்த வேலைத்திட்டம் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-10)

## வடமாகாண...

வடக்கு மாகாண சபையின் 98ஆவது அமர்வு கைதடியில் நேற்று நடைபெற்றது. அந்த அமர்விலேயே அவைத்தலைவர் இந்த அறிவித்தலை விடுத்தார். வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சபையின் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா ஆகியோர் இணைந்து சபையின் இதுவரையான காலப்பகுதியில் ஆற்றிய செயற்பாடுகள் தொடர்பில் ஆராயச் சிறப்பு அமர்வு ஒன்றை நடத்த வேண்டும் என்று அவைத்தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

சிறப்பு அமர்வுக்கான திகதி அவைத்தலைவரால் அறிவிக்கப்பட்டது. இதன் போது கருத்துத் தெரிவித்த சில உறுப்பினர்கள் இவ்வாறான சிறப்பு அமர்வு தேவையில்லை. வருடாந்தம் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது வடக்கு மாகாண அமைச்சுக்கள் மீதான விவாதங்கள் விவாதிக்கப்படுகின்றன. இந்த நிலையில் சிறப்பு அமர்வை நடத்தவேண்டிய தேவையில்லை என்று அவர் குறிப்பிட்டனர். எனினும் சிவாஜிலிங்கம் மற்றும் சி.தவராசா ஆகியோர் மீண்டும் சபையில் கேட்டதற்கு இணங்க வடக்கு மாகாண சபையின் இதுவரையான காலப்பகுதி வரையான செயற்பாடுகள் குறித்து ஆராய சிறப்பு அமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் என்று அவைத்தலைவர் அறிவித்தார். (4,8)

## இடைக்கால...

வழிநடத்தல் குழுவின் கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. இதன்போது தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையின் வரைவில் நேற்று முன்தினம் ஆராய்ந்த விடயங்களில் தொடர்ச்சி ஆராயப்பட்டது. அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயம் முழுமையாக ஆராய்ந்து முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய சில விடயங்கள் இன்னமும் ஆராயப்பட வேண்டியுள்ளன.

இவற்றை விரைவில் ஆராய்ந்து முடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. வழிநடத்தல் குழுவின் அடுத்த கூட்டம் எப்போது என்று திகதி குறிப்பிடப்படாமலேயே ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் பொதுவான நேரத்தில் கூடுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. நாடாளுமன்ற அமர்வு இல்லாவிடினும், அனைவருக்கும் பொதுவான நேரத்தில் வழிநடத்தல் குழு கூடி, அறிக்கையை இறுதி செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## வடக்கு...

வர் தமிழிசை சௌந்தர்ராஜனுக்கும் இடையே நேற்று சந்திப்பு நடைபெற்றது.

தமிழிசை சௌந்தர்ராஜன் தனிப்பட்ட பயணமாக நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வந்திருந்தார். அவர் நேற்று யாழ்ப்பாணம் வந்தார். வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்களை அவர் இன்று சந்தித்தார். இந்தச் சந்திப்பு வடமாகாண முதலமைச்சரின் இல்லத்தில் நடைபெற்றது. வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் உடனிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழிசை சௌந்தர்ராஜன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பற்றி எழுதப்பட்ட நூல் ஒன்றை முதலமைச்சருக்கு வழங்கினார். இரு தரப்பினரும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறினர்.

இரு நாள்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் தமிழிசை சௌந்தர்ராஜன் முக்கிய இடங்கள் பலவற்றுக்குச் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் தமிழிசை சௌந்தர்ராஜனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோர் சந்தித்திருந்தனர். (ற-101)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகள் வித்தியாலயத்துக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடமாகாணப் பாடசாலைகளுக் இடையிலான தடகளத் தொடரில் 16 வயது பெண்கள் பிரிவு தட்டெறிதலில் பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.ஜதுசா வர்ணச் சான்றிதமுடன் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தத் தொடர் ஆரம்பமானது. 16 வயதுப்பிரிவு பெண்களுக்கான தட்டெறிதலில் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி. ஜதுசா 22.17 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதமுடன் தங்கப் பதக்கத்தையும், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஜெ. விதுசிகா 21.74 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், எழுதுமட்டுவாள் சிறி கணேசா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜெ.நிதர்சா 21.23 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். (ம-108)



# இன்றைய மோதல்கள்

**உதயதாரகையின் கால்பந்துத் தொடர்**

கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**மைக்கல் வி.க. கால்பந்தாட்டம்**

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-422, 23)

# சாதித்துக் காட்டியது நானாட்டான் ம.வித்தி.

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 20 வயது பெண்கள் பிரிவு குண்டெறிதலில் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்துக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பமான இந்தப் போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை வரைக்கும் நடைபெறவுள்ளன. மன்னார் நானாட்டன் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த எம்.மனுஜா 7.96 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.தரணியா 7.78 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த ப.அஜித்தா 7.58 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர்.
(ம-108, 422)

# ஹாட்லிக் கல்லூரிக்கு குண்டெறிதலில் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 16 வயது ஆண்கள் பிரிவு குண்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் ஆரம்பித்தன. ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ் 13.05 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப்பதக்கத்தையும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மதுசுதன் 12.28 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், மன்னார் அப்டீன் முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.எம்.முசாபி 11.71 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் தமதாக்கினர்.
(ம-108-422)






# நீளம்பாய்தலில் சென். ஜோன்ஸ் தங்கத்தை தனதாக்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 18 வயது ஆண்களுக்கான நீளம் பாய்தலில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பமான இந்தத் தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை வரையும் நடைபெறவுள்ளது.
நேற்று நடைபெற்ற 18 வயது ஆண்கள் பிரிவு நீளம் பாய்தலில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி.தனுஜன் 6.58 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதமுடன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.
மன்னார் கற்கடந்தகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த வி.புனிதராஜ் 6.43 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதமுடன் வெள்ளிப் பதக்கத்தையும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கே.டிலக்சன் 6.42 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதமுடன் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினர். (ம-422)



யாழ்ப்பாண பாடசாலைகளின் தடகளத் தொடரின் ஆரம்ப தினமான நேற்று ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைக்கிறார் இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் உபதலைவரும், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி உபகுழுவின் தலைவரும், கிண்ணியா வலய உடற்கல்விப் பணிப்பாளருமான அக்மல். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கை முன்னிலை

சிம்பாப்வேக்கு எதிராக நேற்று நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் முன்னிலை பெற்றது இலங்கை. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. சிம்பாப்வேயின் ஆரம்ப வீரர்களாக மசகட்சா, மிரி இருவரும் களமிறங்கினர். 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மிரி. ஆனால் மறுமுனையில் சதம் கடந்தார் மசகட்சா. முடிவில் 8 இலக்குகள் இழப்புக்கு 310 ஓட்டங்களைக் குவித்தது சிம்பாப்வே. அதிகபட்சமாக மசகட்சா 111 ஓட்டங்களையும், மசகன்டன 48 ஓட்டங்களையும், வில்லியம்ஸ் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டி சில்வா, குணரத்ன இருவரும் தலா 2 இலக்குகளையும், மலிங்க, பிரதீப், சண்டகன் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். இலங்கையின் பந்து வீச்சுவரிசையில் மலிங்கவே மோசமான பெறுதிகளை வெளிப்படுத்தினார். அவர் 9 பந்துப்பரிமாற்றங்களை வீசி 71 ஓட்டங்களை விட்டுக்கொடுத்திருந்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு அதன் ஆரம்ப இணையே வெற்றியை உறுதிப்படுத்தியது. டிக்வெல்ல, குணரத்ன இருவரும் சதம் கடந்தனர். இணைப்பாட்டமாக 229 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டிக்வெல்ல. குணதிலக 116 ஓட்டங்களைக் குவித்தார். 16 பந்துகள் மீதமிருக்க வெறும் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றிபெற்றது இலங்கை அணி. ஆட்டநாயகனாக குணதிலக தெரிவானார். (ம)

# நயினாதீவு சிறிகணேசா வரலாற்றின் முதல் தங்கப்பதக்கம் நேற்றுப் பதிவு

## போதிய வாய்ப்பு இல்லை என்று சாதனை மங்கை சுட்டிக்காட்டல்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 12 வயது பெண்கள் பிரிவு உயரம் பாய்தலில் நயினாதீவு சிறிகணேசா கனிஷ்ட வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ். துயாளினி தங்கப் பதக்கத்தையும் வர்ணச் சான்றிதழையும் கைப்பற்றினார். இந்தப் பாடசாலையில் வரலாற்றில் அதற்குக் கிடைத்த முதலாவது தங்கப்பதக்கம் இதுவே.



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது. இந்தத் தொடரின் முதல் நாள் நிகழ்விலேயே நயினாதீவு சிறிகணேசா கனிஷ்ட வித்தியாலயத்தின் வரலாற்று அடைவு பதிவானது.

இது தொடர்பாக எஸ். துயாளினி கருத்துத் தெரிவிக்கையில், "எனது குடும்பம் வறுமைக்கோட்டுக்குக்கீழுள்ள குடும்பமாகும். எனது அப்பா கடற்றொழிலை பிரதான தொழிலாக கொண்டுள்ளார். இதனால் பயிற்சிக்காக பயன்படுத்தும் பாதணிகள் எதுவுமின்றியே எனது பயிற்சியை தொடர்ந்துள்ளேன். இது தவிர உயரம் பாய்தல் மெத்தை எமது பாடசாலையில் இல்லை. மாகாண மட்டப் போட்டியில் முதன் முறையாகத்தான் மெத்தையில் பாய்ந்துள்ளேன். இது எனக்கு புதிய அனுபவம் ஆகையால் முதலில் பயத்தோடு பாய்ந்தேன். பாடசாலையில் மணற்குவியலில் பாயும் போது விபத்துக்குள்ளானதில் சில வேளைகளில் பயிற்சி தடைப்பட்டதுண்டு. ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் பயிற்சி எடுத்ததால் வெற்றியின் சிகரத்தை அடைந்துள்ளேன். இது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. சாதனை வீராங்கனையாக மாற்றிய எமது பாடசாலை உடற்கல்வி ஆசிரியருக்கும் ஆதரவு தந்த அதிபருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். உரியவர்கள் கவனமெடுத்து வசதிவாய்ப்புக்களை பெற்றுத்தந்தால் தேசிய மட்டத்தில் சாதனை படைக்க முடியும். அத்தோடு எனது இலட்சியம் சிறந்த வீராங்கனை யாக வருவது. இதற்காக இப்போதிருந்தே என்னைத் தயார்படுத்தி வருகின்றேன். என்னைப் போல் பல வீரர்கள் மற்றும் வீராங்கனை கள் எமது பிரதேசத்தில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு போதிய வசதி வாய்ப்புகள் வழங்கினால் தீவக கல்வி வலய மாணவர்களும் தடகளத்தில் சாதிப்பார்கள் என்பது உறுதி" என்றார்.

இந்தப் போட்டியில் நானாட்டான் மகா வித்தியாலய மாணவி ருக்சாயினி 1.14 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பத்கத்தை வென்றார். தட்டுவன் கொட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி பிரபாளினி 1.11 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் தனதாக்கினார். (ம-422)




## சிலாவத்துறை அ.த.க.பா. தங்கத்தை தனதாக்கியது

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான நீளம் பாய்தலில் 16 வயது பெண்கள் பிரிவில் மன்னார் சிலாவத்துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த ஜே. அபிசா வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

அபிசா, 5.10 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்தே வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தை வென்றார். கொக்குவில் இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த பி. சகானா 4.87 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும் அத்தியார் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சுகின்ஸ்சா 4.73 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெண்கலப் பதக் கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



யாழ்ப்பாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. ஒவ்வொரு வலய அணிகளின் அணிவகுப்பும் இடம்பெற்றது. அவ்வாறு அணிவகுத்து வரும் தீவகக் கல்வி வலய அணியின் ஒளிப்படமே இது. *(ம-23)*

## விக்ரோறியா வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு நீளம் பாய்தலில் விக்ரோறியா கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எம். குகசாந்தன் வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு நீளம் பாய்தலில் விக்ரோறியா கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எம். குகசாந்தன் 6.71 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி. கஜலக்ஸ்மன் 6.62 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும் எஸ். எக்னோராஜ் 6.59 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)

## மகாஜனாவின் ஹெரீனா வென்றார் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி. ஹெரீனா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது. முதலாம் நாள் போட்டிகளில் ஒன்றாக 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் நடைபெற்றது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி. ஹெரீனா 1.53 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த பி. பவித்ரா 1.53 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், சுண்டுக்குழி மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எம். நிசாந்தினி 1.35 மீற்றர் உயரத்துக் குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸ்ஸியுடன் பார்சிலோனா 2021வரை உடன்படிக்கை




பார்சிலோனா அணியுடன் எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை தொடரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார் முன்னணி வீரர் லயனல் மெஸ்ஸி.

ஆர்ஜென்ரீனா தேசிய அணியின் தலைவரான மெஸ்ஸி, கழகத்தைப் பொறுத்த வரையில் ஸ்பெய்னின் பார்சிலோனா அணிக்காக விளையாடி வருகிறார். மெஸ்ஸியை கால்பந்தாட்ட உலகின் ஜாம்பவானாக்கியதும் பார்சிலோனாவே. அவருக்கும் பார்சிலோனா அணிக்கும் இடையிலான ஒப்பந்தம் இந்த வருடத்துடன் முடிவுக்கு வருகிறது. இதனால் அவர் பார்சிலோனா அணியை விட்டு வெளியேறவுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்திருந்தன. இதற்கு மெஸ்ஸி எவ்வித மறுப்பும் தெரிவிக்காததால், அவர் வெளியேறுவது கிட்டத்தட்ட உண்மை என்றாகிய நிலையில் மெஸ்ஸி - பார்சிலோனா இடையிலான ஒப்பந்தம் எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது.

ஒப்பந்தத்தின் தொகை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எனினும் 300 மில்லியன் யூரோ வழங்கப்பட்டிருக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

"மெஸ்ஸி, பார்சிலோனா அணியில் தொடர சம்மதித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சை அளித்துள்ளது. அவர் சிறு வயது முதல் பார்சிலோனா அணிக்காகவே விளையாடி வருகிறார், அதன்மூலம் உலக கால்பந்து வரலாற்றில் கூட இதுவரை செய்யப்படாத பல சாதனைகளை பார்சிலோனா அணிக்காக செய்துள்ளார்" என்று பார்சிலோனா நிர்வாகம் தனது கீச்சகப் பதிப்பில் குறிப்பிட்டது. (ம)

## அணித் தலைவராக களமிறங்கினார் ரூட்

இங்கிலாந்து அணியின் தலைவராக ரூட் நேற்றுக் களமிறங்கினார். அவர் களமிறங்கிய போது அரங்கில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கரகோசம் எழுப்பி உற்சாக வரவேற்பு வழங்கினர்.

இங்கிலாந்து அணி, இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் தொடரை இழந்ததை அடுத்து குக் தலைமைப் பதவியில் இருந்து இறக்கப்பட்டு ரூட் தலைவராக்கப்பட்டார். இந்த மாற்றம் இற்றைக்கு ஆறு மாதங்களுக்கு முன்னரேயே மேற்கொள்ளப்பட்டாயிற்று. எனினும், இந்த ஆறு மாத காலப்பகுதியில் இங்கிலாந்து அணி ஓர் டெஸ்ட் ஆட்டத்திலேனும் களமிறங்காதபடியால் இங்கிலாந்து அணியின் தலைவராக ரூட் தனது கிரிக்கெட் வாழ்க்கையை ஆரம்பிக்காமலிருந்தார். இந்த நிலையில் நேற்று ஆரம்பமான தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டமே ரூட் தலைவராகக் களமிறங்கிய முதலாவது ஆட்டமாக அமைந்தது. (ம)



## இலங்கை அணிக்குத் தண்டம்



தாமதமான பந்துவீச்சுக் காரணமாக இலங்கை அணி வீரர்களுக்கு தண்டம் விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அறியவருகிறது.

சிம்பாப்வே அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஆட்டம் அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்றது. இலங்கை அணி பதற்றமில்லாத வெற்றியைப் பதிவுசெய்தது.

இலங்கை அணி களத்தடுப்பில் ஈடுபட்டபோது நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களுக்குள் தமது பந்துவீச்சை நிறைவு செய்யாத காரணத்தால் இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ்க்கு நேற்றைய ஆட்டத்துக்கான கட்டணத்தில் இருந்து 20 சதவீதமும் ஏனைய வீரர்களுக்கு 10 சதவீதமும் தண்டமாக விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அறியவருகிறது. (ம)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2018 ஜனவரி பரீட்சைக்கான
aat (Sri Lanka)
(AA1, AA2, AA3)
*Qualification -G.C.E. O/L 6 Passes*
Medium - Tamil & English

*EX Degree (BA)*
திறந்த மற்றும்
தொலைக்கல்வி நிலையம்
(CODL)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கலைமாணிப் பட்டப்படிப்புக்கள் (வெளிவாரி)
அரையாண்டு அடிப்படை 2013 / 2014
விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
பதிவுகளை மேற்கொள்ளவும்.

Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna,
021 222 3382/ 021 222 9149

## வீட்டுக்கிருத்திய சாந்தி பூஜை அழைப்பு



கடந்த 09.06.2017
வெள்ளிக்கிழமை
சிவபதம் அடைந்த எமது
குடும்பத்தலைவி

அமரர் திருமதி
**இராஜேஸ்வரி ஸ்ரீசந்தணராசா**

அவர்களின் 30 ஆம் நாள் பூரணைதிதி சபிண்டீகரண வீட்டுக்கிருத்தியகிரியைகள் நாளை (08.07.2017) சனிக்கிழமை நண்பகல் 10 மணியளவில் அவரின் வீட்டில் நடைபெற்று தொடர்ந்து வைபவமாக சங்கானை திகரை ஞானவைரவர் ஆலய அன்னதான மண்டபத்தில் ஆத்ம சாந்தி பூஜை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அறிவிப்பாக ஏற்று நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அம்பிகாவத்தை வீதி,
சங்கானை.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி தயாவதி (மாலா)லோகேஸ்வரன்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தயாவதி (மாலா) லோகேஸ்வரன் நேற்று (06.07.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், செல்லத்துரை லோகேஸ்வரனின் ( சந்திரன் - முகாமையாளர், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சீவநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ருஷானந், ருஷிபா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவானந்தராஜா (கனடா), காலஞ்சென்றவர்களான ஜெயராசா, கலாவதி மற்றும் புவனேந்திரராசா (சுவிஸ்), கணேஷராஜா (ஜேர்மனி), ரேணுகா (சுவிஸ்), மாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், மகேஸ்வரி, பவளராணி (UK) மகாதேவன், காலஞ்சென்றவர்களான விக்னராஜா, சிவன்செயல் மற்றும் லோகேஸ்வரி, தவமலர், வைத்தீஸ்வரன் மகேந்திரராஜா (UK) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை,
சுன்னாகம்.

தகவல்
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org